பயனற்றுப் போய்விட்ட மகிந்தவின் சாணக்கியம்



பக்கம் 12

விலை ரூபா 20
பக்கங்கள் 28


# உதயன்

35°c - 29°c
தெளிவான வானிலை

சுடர் 31 கதிர் 183 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 14, வெள்ளிக்கிழமை 27.05.2016

# சமஷ்டித் தீர்வுக்காக தமிழக முதல்வரின் அழுத்தம் அவசியம்

## வடக்கு முதலமைச்சர் விக்கி வலியுறுத்து



யாழ்ப்பாணம், மே 27
இலங்கை சமஷ்டி முறைமைக்கு மாற வேண்டிய அவசியம் உண்டு. இதற்கான ஒத்துழைப்பையும் - பங்கையும் இந்திய அரசு வழங்குவதற்கு, தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அழுத்தம் கொடுக்க வேண்டும்.
இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.
வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வின் ஆரம்பத்தில், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஜெயராமுக்குப் பாராட்டுத் தெரிவித்து உரையாற்றினார். இதன் போதே மேற்படி விடயத்தை பக்.06

# வியட்நாம் பிரதமருடன் மைத்திரி முக்கிய பேச்சு

## விவசாய-தொழில்நுட்பக் கூட்டுறவுக்கு இரு நாடுகளும் இணக்கம் தெரிவிப்பு



ஜப்பானிலிருந்து அருண் ஆரோக்கியநாதர்
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் வியட்நாம் பிரதமர் நுயென் ஜுவான் புக்குக்கும் இடையில் நேற்று வியாழக்கிழமை இரு தரப்புப் பேச்சு நடத்தப்பட்டது.
ஜி - 7 நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக ஜப்பான் வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜப்பான் நகோயா டோக்கியோ ஹோட்டலில் வியட்நாம் பிரதமருடன் முக்கிய பேச்சு நடத்தினார். பக்.24

# வடக்கு முதலமைச்சர் நிதியத்தை உருவாக்குவதற்கு நியதிச் சட்டம்

## சபையில் முன்மொழிந்தார் விக்கி

யாழ்ப்பாணம், மே 27
வடக்கு மாகாண முதலமைச்சர் நிதியத்தை உருவாக்குவதற்கான நியதிச் சட்டம், வடக்கு மாகாண சபையில் இரண்டாவது தடவையாக நேற்று முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனால் முதலாம் வாசிப்புக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று இடம்பெற்றது. இதன்போது வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், பக்.23

# புலிகளின் பொறுப்பாளர் ஆதவன் மாஸ்டர் கைது!

## சாவகச்சேரி வெடிபொருள் மீட்பு சம்பவம் குறித்த குற்றச்சாட்டில்

கொழும்பு, மே 27
தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பொறுப்பாளர்களில் ஒருவரான, ஆதவன் மாஸ்டர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால், கைது செய்யப்பட்டதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
இந்தியாவுக்குப் பயணம் செய்வதற்காகக் காத்திருந்தபோதே, இவர் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.
ஐயாத்துரை மோகனதாஸ் என்ற இயற்பெயரைக் கொண்ட ஆதவன் மாஸ்டரே, சாவகச்சேரியில் அண்மையில் கைப்பற்றப்பட்ட வெடிபொருள்கள் தொடர்பான பிரதான சந்தேகநபராகத் பக்.24




# நாயாறுப் பிரதேசத்தின் பெயரை மாற்றக்கூடாது

## மாகாண சபையில் நேற்றுத் தீர்மானம்

யாழ்ப்பாணம், மே 27
நாயாறுப் பிரதேசத்தில் அதன் பெயரை மாற்றம் செய்து புதிய சிங்களக் குடியேற்றங்களை நிறுவ முயற்சிக்கும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண சபையில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண சபையின் பக்.24

# வடமாகாண சபை உறுப்பினர்கள் ஊடகங்கள் மீது நேற்றுப் பாய்ச்சல்


யாழ்ப்பாணம், மே 27
வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஊடகங்கள் மீதும், ஊடகவியலாளர்கள் மீதும் குற்றச்சாட்டுக்களையும் - விமர்சனங்களையும் சபையில் நேற்று முன்வைத்தனர். இது தொடர்பில் உறுப்பினர்களின் விவாதம் மூன்று மணி நேரம் வரை இடம்பெற்றது.
வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று இடம்பெற்றது. அதன்போது ஆரம்பத்திலேயே ஆளும் கட்சி உறுப்பினர் இ.ஆனோல்ட் சிறப்புரிமைப் பிரச்சினையை எழுப்பினார்.
வடக்கு மாகாண ஆளுநர் யாழ். நகர அபிவிருத்தி தொடர்பில் நடத்திய கூட்டம் சம்பந்தமாக இரண்டு தினங்கள் வெளியாகிய செய்திகள் தொடர்பிலேயே, சிறப்புரிமைப் பிரச்சினையை முன்வைத்தார். வடக்கு மாகாண சபையையும், வடக்கு ஆளுநரையும் முரண்படச் செய்யும் விதத்தில், அந்தச் செய்தி வெளி பக்.24

## தங்கத்துடன் பிடிபட்டார் மகிந்தவின் இணைப்பாளர்

கொழும்பு, மே 27
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இணைப்புச் செயலாளராகக் கடமையாற்றிய சம்பிக்க கருணா ரத்ன, 1.1 கிலோ கிராம் தங்கத்துடன், பக்.23

## வல்வையில் பெண் வெட்டிக் கொலை; சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம். மே 27
வல்வெட்டித்துறை, இமையாணன் பகுதியில் வயோதிபப் பெண் ஒருவர் கோரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவரும், குடும்பப் பெண்ணைக் கத்தியால் குத்திய பக்.24




Digitized by Noolaham Foundation.

# வறுமைக்குட்பட்ட மாவட்டங்களுக்கு உணவு நிவாரணம் வழங்க வேண்டும்

## வடக்கு மாகாண சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மே 27

உலக வங்கியால் வறுமைக்கு உட்பட்ட பிரதேசமாகக் குறிப்பிடப்பட்டுள்ள முல்லைத்தீவு - மன்னார் மாவட்டங்களுக்கு குறிப்பிட்ட காலத்துக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண சபையில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் து.ரவிகரன் பிரேரணையை முன்மொழிந்து சபையில் உரையாற்றுகையில்;

உலக வங்கியால் வெளியிடப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் வறுமைக் கோட்டுக்கு கீழே 40 சதவீதம் மக்கள் வட மாகாணத்தில் மட்டும் வாழ்கின்றனர். இலங்கையிலேயே மிகவும் வறுமையான மாவட்டமாக முல்லைத்தீவு உள்ளது. அடுத்த நிலையில் மன்னார் உள்ளது.

அனைத்து வளங்களையும் தன்னகத்தே கொண்ட எமது மாவட்டம் இப்படி வறுமையால் வாடுகின்றது. கடந்த காலப் போர், போரால் உடல் அங்கங்களை இழந்தவர்கள், அரசியல் கைதிகளின் குடும்பங்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் போன்றோர் எந்தவித வருமானமும் இல்லாத நிலையில் வாடுகின்றார்கள். மீன்பிடியில் வெளிமாவட்ட மீனவர்களின் ஆக்கிரமிப்பு அல்லது உள்நுழைவு மற்றும் தடை செய்யப்பட்ட தொழில் உபகரணங்களைப் பாவித்து மீன் இனத்தை அழிக்கின்றமை, விவசாய நிலங்கள் பெருமளவு விடுவிக்கப்படாமை மற்றும் எமது நிலங்களில் திட்டமிட்ட குடியேற்றங்கள், குளங்கள் பல புனரமைக்கப்படாமை மற்றும் மக்களின் நிலங்கள் பலவற்றில் வன இலாகாவின் அடாவடித்தனம் அல்லது அத்துமீறல், உள்ளூர் உற்பத்திப் பொருள்களை பெறுமதி சேர் பொருள்களாக மாற்றக் கூடியத் திட்டமிடல்கள் எதுவும் இல்லாமை, வேலை வாய்ப்புக்களை வழங்கக் கூடிய வகையில் பொருத்தமான தொழிற்சாலைகள் உருவாக்கப்படாமை போன்றவை இதற்கான காரணங்களாக இருக்கின்றன.

எனவே நீண்ட காலத் திட்டங்களின் ஊடாக தனிநபர் வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மீனவர்கள் விடயத்தில் வெளிமாவட்ட மீனவர்களைக் கட்டுப்படுத்தித் தடை செய்யப்பட்ட தொழில்களை அடியோடு நிறுத்தி, நவீன மீன்பிடி முறைகளை உள்ளூர் மீனவர்களுக்கு அறிமுகப்படுத்தி, இலகு கடன் திட்டம் மற்றும் மானியங்களின் ஊடாக மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும்.

விடுவிக்கப்படாத விவசாய நிலங்களைப் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் மாற்றுவதோடு, சிறிய நீர்ப்பாசனக் குளங்களையும் புனரமைப்பு செய்து விவசாயத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தலாம். பெரியளவிலான விவசாயப் பண்ணைகள், விலங்குப் பண்ணைகள் அமைப்பதற்கு போதுமான நிலம் எமது மாவட்டத்தில் உள்ளது. எனவே மேற்படி பண்ணைகளை ஆரம்பித்துப் பலருக்கு வேலைவாய்ப்பையும் வழங்கித் தன்னிறைவு காணமுடியும்.

உள்ளூர் மூலப் பொருள்களை முடிவுப் பொருள்களாக அல்லது பெறுமதி சேர் பொருள்களாக மாற்றக்கூடிய பெரிய தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும். இப்படியான பொருண்மிய மேம்பாட்டுடனான நீண்ட காலத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு மாவட்டத்தை முன்னேற்ற வேண்டும்.

உடனடி நிவாரணமாக சமுர்த்திப் பயனாளிகளை அதிகரிக்க வேண்டும்.

உலக வங்கியின் அறிக்கையின் படி மிக வறுமையான இந்த மாவட்டங்களுக்கு அவர்களின் பரிந்துரைகளுடனேயே குறிப்பிட்ட காலத்துக்காவது உலக உணவுத் திட்டத்தினூடாக மிகப் பாதிக்கப்பட்ட வறுமையான குடும்பங்களுக்கு, குறிப்பாக போரால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைக் குடும்பங்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள், மாற்றுத் திறனாளிகளின் குடும்பங்கள், சிறையில் வாடிக் கொண்டிருப்பவர்களின் குடும்பங்கள், இப்படியானவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

வறுமையான குடும்பங்களைக் காக்கத் தவறும் பட்சத்தில் எதிர்வரும் காலங்களில் வறுமையால் உயிரிழப்பு ஏற்படும் மாவட்டமாகவும் முல்லைத்தீவு மாவட்டம் முத்திரை பதிக்கும். தயவு செய்து மத்திய அரசு, மாகாண அரசு இது விடயத்தில் அக்கறையுடன் கூடிய கவனத்தையெடுத்து வறுமையிலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்தைக் காப்பாற்ற வேண்டும் - என்றார். (ற-ஐ-5)

## சிற்றூழியர் நியமனத்தில் முறைகேடு விசாரணை நடத்த விரைவில் குழு

### வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 27

சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றியவர்களுக்கு கடந்த காலங்களில் சிற்றூழியர்களாக நிரந்தர நியமனம் வழங்கப்பட்டபோது முறைகேடுகள் இடம்பெற்றன என்று கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு இரண்டு வாரங்களுக்குள் குழு ஒன்று நியமிக்கப்படும். இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தின் முன்பாக, சுகாதாரத் தொண்டர்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர்.

தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை என்றும், நிரந்தர நியமனம் வழங்குமாறும் கோரினர். போராட்டத்தில் ஈடுபட் டோரை முதலமைச்சர் சந்தித்தார். இதன் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றியவர்களுக்கு சிற்றூழியர்களாக நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது.

இதில் சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றாதவர்களுக்கும் நியமனம் வழங்கப்பட்டது என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் இரண்டு வாரங்களினுள் விசாரணைக் குழு நியமிக்கப்படும்.

இதன் போது போராட்டக்காரர்கள், ஆரம்பத்தில் 800 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டிய பட்டியல் இருக்கின்றது என்று சுகாதார அமைச்சர் தெரிவித்தார். இப்போது ஆயிரம் பேர் என்கின்றார். இவ்வாறு அதிகரித்துக் கொண்டு சென்றால் எப்படி எமக்கு நியமனம் கிடைக்கும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கேள்வி எழுப்பினர்.

இதன் போது முதலமைச்சர், இந்த விடயங்கள் தொடர்பிலும் விசாரணைக் குழு ஆராயும். அந்த விசாரணைக் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள் - என்றார். (ற-5)

# அனைத்து மக்களும் ஒன்றுபட்டு நாட்டை முன்னேற்ற வேண்டும்

## அமைச்சர் எஸ்.பீ. நாவின்ன தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 27

வடக்கு, தெற்கிலிருக்கின்ற அனைத்து மக்களும் ஒன்றிணைந்து தமது கலாசார விழுமியங்களை ஒருவரோடு ஒருவர் பரிமாறிக்கொள்ள வேண்டும். நாம் இனங்களாக வேறுபட்டதால் 30 வருட போர் இடம்பெற்றது. இனியும் அவ்வாறானதொரு நிலைமை நீடிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கக் கூடாது. நாட்டிலுள்ள அனைத்து இனங்களும் ஒன்றுபட்டு, ஒற்றுமைப்பட்டு இந்த சிறிய நாட்டை முன்னேற்ற வேண்டும்- இவ்வாறு உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் எஸ்.பீ. நாவின்ன தெரிவித்தார்.



உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சால் 17 மில்லியன் ரூபா நிதியில் அமைக்கப்பட்ட, வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலர் பிரிவின் கீழான பிரதேச காலாசார மத்திய நிலையம் நேற்றுத் திறக்கப்பட்டது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது;

கலாசாரத்தின் மூலமே அனைத்து இனங்களையும் ஒன்றிணைக்க முடியும். இன்றைய இந்தக் கலாசார மத்திய நிலையத்தின் ஆரம்ப நிகழ்வின் மூலம் நாட்டின் கலாசார ஒற்றுமையும், தேசிய ஒற்றுமையும் பலப்பட வேண்டும். ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சி தலைவர் ஆகியோர் இணைந்து இந்த நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவுவதற்கான வழி வகைகளை செய்து வருகின்றனர்.

இந்த நாட்டில் வாழ்கின்ற ஒவ்வோர் ம்க்கள் கூட்டத்துக்குமென தனித்துவமான கலை கலாசார பண்பாட்டு விழுமியங்கள் இருக்கின்றன. கலாசாரம் என்னும் போது தனித்து கலைகளை உள்ளடக்கவில்லை. அவர்களது வாழ்க்கை முறை, உணவுப் பழக்க வழக்கம், சடங்கு முறைகள் என பலதும் உள்ளடங்குகின்றன.

அந்த வகையிலே எந்த ஓர் இனமும் தலை நிமிர்ந்து நிற்பதற்கு அந்த இனத்தின் தனித்துவமான பண்புகளே காரணம். அவற்றை பேணிப் பாதுகாத்து அடுத்த சந்ததிக்கும் கையளிக்க வேண் டிய தேவையிருக்கின்றது. எங்களிடம் இருந்து வருகின்ற கலாசாரங்களை, பண்பாடுகளை கால ஒட்டத்துக்கேற்ப மாற்றி வந்தாலும், நாங்கள் எதனையும் பெரிதாக இழந்து விடவில்லை. எதிர்காலத்தில் அவற்றை வளம்படுத்திட இவ்வாறான நிலையங்கள் உதவும் - என்றார்.

உள்ளக அலுவல்கள், வடமேல் அபி விருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் எஸ்.பீ. நாவின்ன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், கலாசார அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் பிரதீபா சோமசிங்க ஆகியோர் கலாசார மத்திய நிலையத்தைத் திறந்தனர். கலாசார மத்திய நிலையத்துக்கென ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான இசைக் கருவிகளும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வுகளில் சிரேஷ்ட உதவிச் செயலாளர் தரங்க அனோஜா கமகே, யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) முரளீதரன், சங்கானை பிரதேச செயலர் எஸ்.சோதிநாதன், காரைநகர் பிரதேச செயலர் திருமதி பாபு, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச வாழ் மக்கள், கலைஞர்கள் என பல ரும் கலந்து கொண்டனர். (ற-ஐ-4,ரி2)

சர்வதேச புகைத்தலுக்கு எதிரான தினம் மே 31

உந்தன் போதை கலையாதோ?
உறவின் ஏக்கம் தொலையாதோ?
உந்தன் வாழ்க்கை மாறாதோ?
ஒரு நாள் மாற்றம் வாராதோ?

நஞ்சை அள்ளி விதைத்திடுமாம்
வலிகள் பலவும் தந்திடுமாம்
நாசமாய் உயிர்களை அழித்திடுமாம்
புகை மறந்தால்
நிலை பெறுவோமே நீடூழி!!

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை
யாழ். மாநகர சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ அறிக்கையுடன் வருமாறு டக்ளஸுக்கு நீதிமன்றம் உத்தரவு

## உதயன் மீதான வழக்கில் முன்னிலையாகாத காரணத்தால்

யாழ்ப்பாணம், மே 27

உதயன் மீதான வழக்கில், அறிவித்தல் ஏதுமின்றி நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா நீதிமன்றில் முன்னிலையாகியிருக்கவில்லை. அதனால் வழக்குச் செலவைப் பெற்றுத் தருமாறு உதயன் சார்பில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் நீதிமன்றில் கோரியுள்ளார்.

ஆனால் அவர் சுகவீனம் காரணமாகவே, நீதிமன்றில் முன்னிலையாகவில்லை என்று டக்ளஸ் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்ததால், அடுத்த தவணை மருத்துவ அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

டக்ளஸ் தேவானந்தா, உதயன் பத்திரிகைக்கு எதிராக, அவமதிப்பு வழக்கு ஒன்றை யாழ்.மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கு விசாரணையில் உள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை குறித்த வழக்கு மாவட்ட நீதிபதி ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் விசாரணைக்காக எடுக்கப்பட்டது. அன்றையதினம் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படும் என்று டக்ளஸுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி கடந்த செவ்வாய்க்கிழமை வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, டக்ளஸ்தேவானந்தா நீதிமன்றில் முன்னிலையாகியிருக்கவில்லை. அவர் அவ்வாறு நீதிமன்றில் முன்னிலையாகமாட்டார் என்பது பற்றி அவர் முன்னறிவித்தல் விடுக்கவில்லைஎன்றுமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்த உதயன் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சுமந்திரன், அதற்கான வழக்குச் செலவைப் பெற்றுத் தருமாறும் நீதிமன்றிடம் கோரினார். அதற்குப் பதிலளித்த டக்ளஸ் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, சுகவீனம் காரணமாகவே டக்ளஸ் தேவானந்தா நீதிமன்றுக்குச்சமூகமளிக்கவில்லை என்று தெரிவித்தார்.

அவ்வாறு அவர் சுகவீனமுற்றிருக்கிறார் என்றால், அவர் சுகவீனமாக இருந்தமைக்கான மருத்துவ அறிக்கையை அடுத்த தவணை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த நிலையில் இந்த வழக்கு எதிர்வரும் ஓகஸ்ட் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(த-வ-4)

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1265
சீட்டிழுப்பு திகதி 2016.05.26
வெற்றி இலக்கங்கள்
01 37 41 46 Y
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 15,877,540/=
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 502
சீட்டிழுப்பு திகதி 2016.05.26
வெற்றி இலக்கங்கள்
13 59 66 73 A
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 56,497,380/=
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நேற்று (26.05.2016) வியாழக்கிழமை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் BSc (Eng) பட்டம் பெறும்

**ஜெயந்திநாதக் குருக்கள் கௌரிநாதன்**

அவர்களை மென்மேலும் பல பட்டங்களைப் பெற்று சிறப்புற வாழ்க என வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அம்மம்மா (கோண்டாவில்)
திரு.திருமதி சசிகரன்,
அபர்ணா, ஸ்வாகத், அஸ்வத்,
- ஜேர்மனி -

(ஜே/1627) (11,18)

## 60 ஆவது பிறந்தநாள் விழாவும் ஓய்வு பெறுதலும்



60 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும் அரச சேவையிலிருந்து ஓய்வுபெறுதலும் யாழ். மாநகரசபையில் சுப்பிரமணியம் பூங்காவில் கடமையாற்றி இன்று 27.05.2016 இல் ஓய்வுபெறும்

**கந்தையா குகபாலச்சந்திரன்**

அவர்களைக் கட்டைப்பிராய் முத்துமாரி அம்மன் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:
மனைவி - ரஞ்சி, மகன் - கிருஷாந்தன்.
3 ஆம் கட்டை, கட்டைப்பிராய்,
யாழ்ப்பாணம். 077 915 4188

Happy Birthday 60

## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

திருமதி அமரர்
**ஞானசக்தி கனகரத்தினம்**



கடந்த 30.03.2016 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (28.05.2016) சனிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

புளியங்கூடல் வடக்கு, ஊர்காற்றுறை.
சின்னமடுவடி, சரவணை மேற்கு,
சரவணை.

குடும்பத்தினர்
077 736 5667, 077 127 1692

## சமூகசேவைகள் திணைக்களம், வடமாகாணம்


### பெறுகைகளுக்கான அழைப்பு

கைதடி அரசமுதியோர் இல்லத்திற்கான புதிய உலர் உணவு, மரக்கறிகளும் பழங்களும், மாமிச உணவு, பொதியிடப்பட்ட உணவுப்பொருள்கள், வெதுப்பக உணவு, பால் மற்றும் தொற்றுநீக்கி பொருள்கள் விநியோகம்-2016/17

1. வடமாகாண சமூகசேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத் தலைவர் தகுதியான, தகைமைவாய்ந்த புதிய உலர் உணவு, மரக்கறி களும் பழங் களும், மாமிச உணவு, பொதியிடப்பட்ட உணவுப்பொருள்கள், வெதுப்பக உணவு, பால் மற்றும் தொற்று நீக்கி பொருள்கள் விநியோகத்தர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.
2. விலைக்கேள்விதாரர் உலர் உணவு விநியோகம் தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒரு நபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
3. யாழ்ப்பாண மாவட்டத்தில் தலைமை அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்
4. விலைமனுதாரர் கேள்விகோரப்படும் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனங்களுக்கான உணவு வழங்கல் சேவையில் மூன்று (03) வருடத்துக்கு குறையாத முன் அனுபவத்தினைக் கொண்டிருத்தல்வேண்டும்.
5. பொருத்தமான கேள்வி வைப்புபணம் செலுத்தப்பட்டமை பெறுகைகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
6. கேள்வி சமர்ப்பிப்பில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர் இத்திணைக் களத்தில் கிடைக்கும் **"Application for Bid Documents"** என்ற படிவத்தினை பூர்த்திசெய்து பெறுகைக்கு மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா. **1,000** காசாக செலுத்தி தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாள்களில் **27.05.2016** தொடக்கம் **17.06.2016** வரையான காலப் பகுதியில் **09.00** மணி தொடக்கம் **15.00** மணிவரை பெற்றுக் கொள்ளலாம். மேலும் **06.06.2016** முற்பகல் **10.00** மணிக்கு திணைக்களத்தில் இடம்பெறும் விலைக்கேள்விகள் தொடர்பான தெளிவு படுத்தல் கூட்டத்திலும் கலந்து கொள்ளலாம்.
7. **"Diet Supply -2016/17, Elders Home Kaithady, Reference No NP/24/2/3/Food/2016 - 17"** என்றவிபரம் கடிதஉறையின் இடதுபக்கமேல் மூலையில் தெளிவாகஎழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத விவரம் குறிப்பிடப்படாதமற்றும் தாமதமானவிண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.
8. விலைக்கேள்விகள் **20.06.2016** ஆம் திகதி **14.00** மணிக்கு முன்பதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாக இவ் திணைக்கள பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் இடுவதன் மூலம் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக் கேள்விகள் **20.06.2016** ஆம் திகதி **14.00** மணிக்கு திறக்கப்படும்.

தலைவர்,
திணைக்களபெறுகைகள் குழு,
சமூகசேவைகள் திணைக்களம் வ.மா
கண்டிவீதி,
கைதடி

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1938 . 03 . 11 | 2016 . 05 . 25 |

# சின்னத்துரை சிவஞானம்

அல்லைப்பிட்டி, மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவஞானம் கடந்த (25.05.2016) புதன்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அல்லைப்பிட்டி - மண்டைதீவைச் சேர்ந்த சின்னத்துரை - யோகம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் நெடுந்தீவு மேற்கை பூர்வீகமாகக் கொண்ட காலஞ்சென்றவர்களான கந்தையா - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர் - யாழ்ப்பாண மாவட்டச் செயலகம்), அன்னலட்சுமி இராசையா (அல்லைப்பிட்டி), காலஞ்சென்ற விநாயகமூர்த்தி, இராசலட்சுமி நல்லையா (மண்டைதீவு) நித்தியலட்சுமி பாலசிங்கம் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செந்தில்நாயகி (பிரான்ஸ்), சிறீதரன் (யாழ்ப்பாண மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்), சிறீகுகன் (சுவிஸ்), காலஞ்சென்ற சிறீபரன், காலஞ்சென்ற சிறீவரதன், நவநிதி (பிரான்ஸ்), சிறீறங்கன் (பிரான்ஸ்), சிவநிதி (கிளிநொச்சி), சிறீரூபன் (கனடா), காலஞ்சென்ற சிறீஅன்பன், சிறீவினோதன் (பிரான்ஸ்), கலைநிதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயபாபு, சிவஞானகுமாரி (ஆசிரியர் - கிளி / வட்டக்கச்சி மத்திய கல்லூரி ), பத்மலோசினி (சுவிஸ்), கேதீஸ்வரன் (பிரான்ஸ் - முன்னாள் கிராம அலுவலர்), அருட்செல்வி (பிரான்ஸ்), வேலவன் (வன்னி மலர்க்காடு - முன்னாள் உப தபாலதிபர்), சத்தியசிவம் (பிரான்ஸ் - முன்னாள் அலுவலக உதவியாளர் - முல்லைத்தீவு மாவட்டச் செயலகம்), தர்சினி (கனடா), கோசலாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2016.05.29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு வட்டக்கச்சி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் மம்மில் இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 882, ஆறுமுகம் வீதி,**
**வட்டக்கச்சி,**
**கிளிநொச்சி.**

**தகவல்: சி.சிறீதரன்,**
**(பாராளுமன்ற உறுப்பினர்,**
**யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்,**
**கிளிநொச்சி)**

(c 21312) (13.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கை இந்துமாமன்றம்
வைரவிழாமலர்வெளியீட்டுவைபவம்

| | |
|---|---|
| இடம்: | நல்லைஆதீனகலாமண்டபம்,நல்லூர்,யாழ்ப்பாணம் |
| காலம்: | துர்முகிவருடம் வைகாசித் திங்கள் 15 ஆம் நாள் (28-05-2016) சனிக்கிழமைகாலை 9.30 மணி |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அகில இலங்கை இந்துமாமன்றம்
211/17,கோவில் வீதி,நல்லூர்,யாழ்ப்பாணம்

## துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூஷணி அம்பாள்



வெள்ளவத்தையில் பெர்னாந்து வீதியில் அமைந்துள்ள நாகபூசணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் சனிக்கிழமையில் இருந்து திங்கட்கிழமை வரை (28,29,30 ) ஆம் திகதிகளில் ஞானவைரவர் ஆலயம் கலாசாலை வீதி. 2 ஆவது ஒழுங்கை. திருநெல்வேலி வடக்கு. யாழ்ப்பாணத்தில் அருள்வாக்குக் கூறுவார்.

★ ஞாயிற்றுக்கிழமை அன்னதானம் வழங்கப்படும்.

பூசை நேரம்: முற்பகல் 10.30 - 12.30 மணிவரை
மாலை 5.30 - 6.30 மணிவரை

குறிப்பு: கலாசார உடையுடன் வருகை தரவும்.
தொடர்பு: 021 221 9127, 077 801 2226 (J.1597) (13.18)

## மென்மேலும் சிறக்க வாழ்த்துக்கள்




பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நேற்று (26.05.2016) வியாழக்கிழமை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில்
**B.Com Second Class Upper Division**
பட்டம் பெற்ற
**செல்வி மகாதேவா ஆரணிக்கா**
அவர்கள் மென்மேலும் பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ மனமுவந்து பாராட்டுவதுடன் எதிர்காலம் சிறப்புற அமையவும் வாழ்த்துகின்றோம்.

**குடும்பத்தினர்.**
**மந்துவில் வடக்கு, கொடிகாமம்**

(சி/2100) (11,18)

## JOB OPPORTUNITY

A Leading Jaffna based business organization located in Jaffna is Looking for a suitable candidate to work as an "Accounts Assistant"

**Eligibility Criteria**

1. GCE A/L Commerce stream &AAT Intermediate level Completed.
2. English Passed in G.C.E O/L
3. Excellent Knowledge in Accounting & Quick book or other Accounting software.
4. Experience in Accounting.
5. Female candidates are expected.
6. Knowledge in computer typing in English & Tamil.

Plese Forward yourCV to **jaffnavacancies@gmail.com** on or before 5th June 2016.

**Email: jaffnavacancies@gmail.com**

## சமாதான நீதிவானுக்கு வாழ்த்துக்களும் ஆசீர்வாதங்களும்



சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்
**திரு.பொன்னையா தெண்டாயுதபாணி**

வடபிராந்திய போக்குவரத்துச்சபை ஓய்வு பெற்ற திீர் பரிசோதகரை முப்பது வருடத்துக்கு மேல் தெரியும். இவர் இறைபக்தியுள்ள ஆன்மீகவாதியுமாவார். இவர் ஆலயப்பணிகளுடன் சமூகப்பணிகளையும் நிறைவாக ஆற்றி வருபவர் ஆவார். இவர் வட்டு வடக்கு சித்தன்கேணிக் கிராமத்தில் புகழ்பூத்த பாரம்பரியமான படித்த பண்புள்ள குடும்பத்தில் பிறந்து எல்லோராலும் பாராட்டத்தக்க வகையில் வாழ்ந்து வருபவர் ஆவார். மக்கள் பணியை மிகுந்த ஆர்வத்துடன் ஆற்றும் இவர் பல சந்தர்ப்பங்களில் மக்களாலும் சமூகத்தலைவர்களாலும் பாராட்டப்பட்டவர் ஆவார். இவரது உயர்ந்த எண்ணமும் செயற்பாடுகளும் இவரை எல்லோருக்கும் முன்னுதாரணமாகத் திகழச் செய்கின்றது. இவருக்கு **01.09.2014 இல் சமாதான நீதிவான் பதவி** கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் இவர் சீரும் சிறப்புடன் நீடுழிகாலம் வாழ்ந்து மக்களுக்கு சிறந்த சேவையாற்ற வேண்டுமென பாராட்டி வாழ்த்துகின்றேன்.

சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள்
President
International Hindu Religious Priests' Organization
Srilanka.

(J 1616) (14,17,18)

## Majestic Cineplex Jaffna
## கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்




விசாரணை ☎ 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk


# கால்நடைகளை கடத்த முயன்ற நால்வர் கைது

## மூவருக்கு விளக்கமறியல்; ஒருவருக்குப் பிணை

யாழ்ப்பாணம், மே 27

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெலிஞ்சிமுனைப் பகுதியில் இருந்து, சட்ட விரோதமாக யாழ்.நகருக்குள் கடத்தப்பட விருந்த ஒரு தொகுதி கால்நடைகள் மீட்கப்பட்டுள்ளன என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஊர்காவற்றுறை, வேலணை உட்படப் பல இடங்களிலிருந்தும் கால்நடைகள் திருட்டுப் போகின்றன. அதனால் பல்லாயிரக்கணக்கான பணத்தை உரிமையாளர்கள் இழந்து வருகின்றனர். அவர்களது முதலீடுகளாக உள்ள கால்நடைகள் இழக்கப்படுவது அவற்றின் உரிமையாளர்களுக்கு பெரிய நட்டத்தை ஏற்படுத்தி வருகிறது.

இந்த நிலையில் குறித்த கால்நடைகளைத் திருடிய குற்றச்சாட்டில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இருந்து தினமும் சூட்சுமமான முறையில் கால் நடைகள் கடத்தப்படுகின்றன என்று கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம், பொலிஸார் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதன்போது சந்தேகத்துக்கிடமான வகையில் வாகனம் ஒன்று மூடிய நிலையில், மெலிஞ்சி முனைப் பகுதியில் இருந்து சட்டவிரோதமான முறையில் கால்நடைகளை ஏற்றியவாறு வந்தபோது ஊர்காவற்றுறைப் பொலிஸார் வழி மறித்தனர். வாகனத்தில் மூன்று மாடுகள் இரு கன்றுகள் , நான்கு ஆடுகள் என்பன இருந்துள்ளன.

குறித்த கடத்தலுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் வாகனத்தில் இருந்த யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியைச் சேர்ந்த 3 பேரும் , அவர்களுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவருமாக நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நால்வரும் நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை பதில் நீதவானிடம் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

அதன்போது, குறித்த சந்தேக நபர்களில் வாகனத்தில் பயணித்த மூவரையும் 14 நாள் விளக்கமறியலிலும் , கூடப் பயணித்தவரைப் பிணையிலும் விடுவித்தும் நீதிமன்று வழக்கை ஒத்திவைத்தது.

(ற-ஐ-4,10)


**வீடு /அறை வாடகைக்கு**

அமைதியான சூழலில் சகல வசதிகளுடன் கூடிய வீடு/ அறை பல்கலைக்கழக/ ஆசிரிய கலாசாலை மாணவர்களுக்கு வாடகைக்கு உண்டு. (J.1624) (13.18)

தொடர்பு : 077 450 7446

**வீடு வாடகைக்குத் தேவை**

3பேர் கொண்ட சிறிய குடும்பம் வசிக்க நல்லூர், கந்தர்மடம், ஆனைப்பந்தி ஆகிய பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை. (J.1609) (14,17,18)

தொடர்பு : 077 822 3017

**வெளிவந்து விட்டது**

SLEAS போட்டிப்பரீட்சை
கருத்தரங்கு கைநூல் (ஒப்பீட்டுக்கல்வி)
பேரா.சோ.சந்திரசேகரம்
போட்டிப்பரீட்சை வினாத்தாள்களுடன் சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

(கிளிநொச்சி - முல்லைத்தீவு) (J.1610) (14,17,18)
072 877 4886 /077 211 3326

**SPOKEN ENGLISH**

3 மாதங்களில் சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப்பயில வாரம் - நான்கு வகுப்புகள். மாதம் - 2000/= ஆசிரியர் ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி .
Dip in ENGLISH and SCIENCE LONDON
424 /3, K.K.S. வீதி, சங்கானை.

தொ.பே.077 675 1649 (J.1621) (13.18)

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

55 நாள்களுக்குள் தடுப்பூசி போடப்பட்ட "டாசன்" நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. (J.1616) (11,18)

077 434 1551

## பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் விற்பனைக்கு

| MODEL | REG.NO | CHASIS NO |
|---|---|---|
| WEGO | NP BBW - 40 XX | MD626AG48E1K91671 |
| DAWN | NP BBR - 47 XX | MBLHA11EYE9H00342 |
| DISCOVER | NP BBT - 50 XX | MD2A57B2XEWG42740 |
| DAWN | NP BBB - 70 XX | MBLHA11EYE9B00159 |
| ROAD MATE | NP QY - 38XX | 161FMJ8AC00012 |
| ROAD MATE | NP QY - 39XX | 161FMJ8AC00030 |
| FAZEER | NP BCD - 67 XX | MEI45SOD2F2013499 |
| DAWN | NP BBY - 41XX | MBLHA11EYE9M00201 |
| DELUXE | NP BAG - 57XX | MBLHA11EWD9A22232 |
| DAWN | NP BDB - 50 XX | MBLHA11EYF9H00076 |
| DAWN | NP BBR - 90XX | MBLJA05EPE9G00091 |

பணம் செலுத்தியவுடன் அனைத்து ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

நிபந்தனைகளுக்குட்பட்டது. (C/21311) (11,17,18)

மேலதிக விவரங்களுக்கு
021 228 0110, 021 228 0108,
077 166 1648, 077 109 2236


# விபத்தில் சிறுமி சாவு

கொழும்பு, மே 27

கொழும்பிலிருந்த யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த வான் ஒன்றுடன் மோதுண்ட நான்கரை வயதுச்சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன் அவருடன் சென்ற தந்தை படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மினுவாங்கொடையில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. கொழும்பு குருநாகல் பிரதான வீதியில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த வானுடன், தந்தையும் மகளும் மோதியுள்ளனர்.

விபத்தில் நான்கரை வயதான சிறுமி உயிரிழந்துள்ளதுடன், 39 வயதான தந்தை காயமடைந்த நிலையில் கம்பகா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(ற-ஐ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் - புங்கங்குளம் வில்லையடி

# ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த

# பொங்கல் விழாச் சிறப்பிதழ் - 27.05.2016

## வில்லையம்பதியில் வீற்றிருந்தே வினை தீர்க்கும் அன்னை

### அம்பாளின் அருட்பார்வை

யாழ். குடாநாட்டில் புங்கங்குளம் பகுதியில் தோன்றி அருள்பாலிக்கும் அம்மன் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் அருளாட்சியே ஆகும். ஆனால், இந்தப் புங்கங்குள அம்மனின் அருட்தோற்றம் நாட்டின் நிலையினால் ஏற்பட்ட தொன்றன்று, இன்றைக்கு சுமார் 50 வருடங்களுக்கு முன்னரே அம்பாளின் அருட்பார்வை இவ்விடத்தில் தோன்றியிருப்பதை அடியார்கள் அறிந்துகொள்வார்கள்.

### அம்பிகையின் தெய்வீகப் புதுமை

இந்த ஆலயத்துக்குள் பிரவேசித்ததும் அடியார்களுக்கு ஏற்படுகின்ற உணர்ச்சிப் பரவச நிலை, அம்பாளைத் தரிசிக்க வரும் போது காணக்கூடிய அற்புதக் காட்சிகள், அம்பாளுக்குப் பூசைக்காக அடியார்கள் கொண்டுவந்து வைக்கின்ற பால், பழங்கள், மலர்கள் மறைந்து விடுகின்ற தன்மை, அடியார்களின் நடமாட்டம் இல்லாதபோது இங்கு நடக்கிறதோர் இனம் தெரியாத தெய்வீக நடமாட்டம் அம்பாளுக்குச் செய்கின்ற நேர்த்திக் கடன்களினால் நோய், பிணி, தோஷங்கள் நீங்கிடும் தன்மை, அத்தனைக்கும் மேலாக அம்பாளுக்கு முன்னால் வளர்க்கப்பட்டிருக்கும் தீக்குழம் பின்மேல் அடியார்கள் ஆரவாரமின்றி அமைதியாக நடந்து செல்லும் தெய்வீகம் என்பன அம்பாள் இந்த ஆலயத்தில் விரும்பி உறைகின்ற தன்மையையே வெளிப்படுத்துகின்றன.



வில்லை மரத்தாளை வெவ்வினைகள் களைவாளை
அல்லும் பகலுமெங்கள் தொல்லையற அருள்வாளை
பொல்லா வினையகல புங்கங்குளத்தார் புகுந்து
கல்லும் கசிந்துருக பாவிகள் நாம் பணிந்திடுவோம்.

### அம்பிகையின் அருட்தோற்றம்

அழகிய பெருந்தெரு அதனை அண்டியிருக்கும் ஒரு புனிதமான குச்சொழுங்கை, அறிவும், ஆற்றலும், தெய்வீகமும் நிறைந்திருக்கும் மக்கள் சூழ்ந்த அயல். இத்தனைக்கும் நடுவிலே அமைந்திருக்கும் அற்புத மரத் தோப்புக்கள். இதிலே உயர்ந்து ஓங்கி வளர்ந்து நிற்கிறது அம்மனுக்குப் பிடித்தமான ஒரு வில்வமரம். இந்த மரத்தின் அடியிலேதான் அம்பாளின் வதிவிடம் தென்படலாயிற்று. அக்காலத்தில் ஆலய வளவுக்குள் குடியிருந்த அடியார்கள் அம்மனின் அருளையும் அருட்தோற்றத்தையும் தெய்வீக மேலீட்டினால் பல தடவைகள் கண்டு வியந்து அந்த இடத்தில் சிறியதோர் ஆலயத்தை அமைத்து ஆராதிக்க முற்படலாயினர். காலப்போக்கில் அயலவர்களும் அண்டி வாழ்பவர்களும் அம்பாளின் அற்புதங்களினால் அம்பாள் அடியார்கள் ஆயினர். யாழ். நகரில் புங்கங்குளப் பகுதியில் வில்வ மரத்தடியில் அம்பாளின் வதிவிடம் மிகச் சிறியதானாலும் அம்பாளின் அற்புதங்களினாலும் இந்த ஆலயம் தெய்வீக நிலையினால் மிக மிக மேலோங்கியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயம்.

### நம்பியே கை தொழுவோம் நாம்

அம்பாளின் வருடாந்தப் பொங்கல் தினம் இன்று வெள்ளிக்கிழமை ஆகும். அடியார்கள் அனைவரும் யாழ். நகரில் புங்கங்குளம் பகுதி வில்லை அடியிலே அமர்ந்து அருள்பாலிக்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் அருட் பெரும் தோற்றத்தை அணுகி பேரருள் பெற்று உயர்வார்களாக.

*"மேன்மை கொள் சைவ நீதி*
*விளங்குக உலகமெல்லாம்"*

அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாமே.
நம்பியே கைதொழுவோருக்குப் பிணி நீங்கிடுமே

- கே. வைத்திலிங்கம்


## பொங்கல் விழாச் சிறப்புறப் பிரார்த்திப்போரும், விளம்பர அனுசரணையாளர்களும்

கட்டடப் பொருள்கள்,
உழவு இயந்திரம், லான்ட்மாஸ்ரர்
உதிரிப்பாகங்கள் விநியோகஸ்தர்
**நந்தினி என்ரபிறைஸ்**
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**இளவரசி**
**சேலைச் சோலை**
(பட்டுப் புடைவைகளின்
சாம்ராஜ்யம்)
நவீனசந்தை யாழ்ப்பாணம்.
தொ.பே.
021 2222 503

கோவிலுக்குத் தேவையான பட்டு சரிகைத்
துணிகள், பட்டு வேட்டிகள், சால்வைகள் மற்றும்
நவீன சாறி வகைகள் முதலியவற்றுக்கு நாடுங்கள்
**அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
25, 4 ஆம் குறுக்குத்தெரு,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.

நவநாகரிக நங்கையர் விரும்பும்
அசல் 22
கரட் தங்க நகைகளுக்கு உத்தரவாதம்
மிக்க நம்பிக்கையான ஸ்தாபனம்
**சிறிநதியா நகைமாடம்**
டிஜிற்றல் கலர் லாப், விடியோ அன் ஸ்ருடியோ
20, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வில்லையடி
**ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்**
கச்சான் பிஸ்கட்
தயாரிப்பு: T.S. நாதன்
இல. 96/1, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 0542

**மஹா விஷ்ணு ஹாட்வெயர்**
கட்டடப் பொருள் விற்பனை நிலையம்
712,மாபழம் சந்தி,
தொ.பே.077 905 0185
510, நாவலர் வீதி, நல்லூர்.
தொ.பே.077 905 0185
புங்கன்குளம் சந்தி,
தொ.பே.077 847 0341

எல்லா அளவுகளிலும் நல்ல தரமான
மரங்களை எந்நேரமும் சகாய விலைகளில்
பெற்றிட நாணயம் மிக்க நிறுவனம்
**அன்னை மரக்காலை**
உரிமையாளர்: க. முருகேந்திரன்
174, ஆரியகுளத்தடி,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**மாருதி**
ரேடிங் சென்ரர்
16A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2932

**தம்பிப்பிள்ளைஅன் கோ**
**Thambippillai & Co**
(கால்நடை தீவனங்கள், மருந்து
வகைகள், கோழிக்குஞ்சுகள்
விற்பனையாளர்கள்)
343, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3353

உங்கள் இளமைக்கு மேலும்
மெருகூட்டும் கண்கவர் 22
கரட் தங்க நகைகளைப் பெற்றிட
சிறந்த ஸ்தாபனம்
**உதயா ஜூவல்லர்ஸ்**
தங்கப்பவுண் நகை வியாபாரம்
81, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தரமான குளிர்பான வகைகளுக்கும்
ஐஸ்கிறீம் வகைகளுக்கும்
நாடவேண்டிய இடம்
**ஐடியல் கிறீம் ஹவுஸ்**
22, மானிப்பாய் வீதி,
மருதனார்மடம்.

புதுப்புது டிசைன்களில் ஒளிரும்
நகைகளை ஓடருக்குப்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்
**சாணுகா நகைமாடம்**
64 , கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 3700

நியூ லக்கி ஹாட்வெயர்ஸ்
**NEW LUCKY HARDWARES**
**343, Kandy Road,**
**Ariyalai, Jaffna.**
**T.P. 021 373 4432,**
**077 237 8062**

நவீன வடிவமைப்புகளில் நவநாகரிக
முறையில் அழகிய தங்க நகைகளைக்
குறித்த தவணையில்
செய்துபெற்றுக்கொள்ள
**பூரணி நகைமாடம்**
1/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே. 3121

அழகுக்கு மெருகூட்டும் அழகிய
நகைகளுக்கு நம்பிக்கை
வாய்ந்த நல்ல இடம்
**சோபனா நகைமாளிகை**
118 V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**கொனிக்கா கலர் லாப்**
**சிறிராம் ஜூவல்லர்ஸ்**
158,193, கஸ்தூரியார் வீதி,
தொ.பே.
021 222 8334

**BANUJAN SAW MILL**
**STATE APPROVED TIMBER**
**DEALER**
**No.48, Punkankulam Road,**
**Jaffna.**

நவீன டிசைன்களில் நாகரிகத்திற்
கேற்ப தங்கப்பவுண் நகைகளை
நயமாகச் செய்துகொள்ள
**சிறி மீனாட்சி ஜூவல்லர்ஸ்**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சபேஸ்**
போட்டோ
105/1, புங்கங்குளம் அரியாலை,
யாழ்ப்பாணம்.
[illegible] 7877 760

**இராஜேஸ்வரி**
**ரெக்ஸ்ரைல்**
இல.105,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.
021 222 6953


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழிநீர் சொரிகின்றோம்



எமது கல்லூரியின் சகோதரத்துவ உறுப்பினர் **திரு. து. றஜித்குமார்** அவர்களின் அன்பு மகன்

**டனுஷாந்**

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்புச் செல்வத்தின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரிய சகோதரத்துவம்** (சி.21307) (13.18)

**யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

## வருஷாப்திய அழைப்பு

(ஓராண்டு நினைவஞ்சலி)



கடந்த 09.05.2015 சனிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்ப குலவிளக்கு

*அமரர்*

***கண்டி இரத்தினக்குருக்கள் ராதாகிருஷ்ணசர்மா***

அவர்களுக்கு வைகாசி மாதம் 14 ஆம் நாள் இன்று (27.05.2016) வெள்ளிக்கிழமை

அபரபக்ஷ சஷ்டித் திதி அன்று வருஷாப்தியம் செய்ய விருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து ஆத்மசாந்தி அடைய பிரார்த்தனை செய்யுமாறு வேண்டுகின்றோம்.

41/2, துரைராஜா வீதி,
வண்ணார்பண்ணை, யாழ். (J 1623) (14,17,18)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மகன் - இ.கிருபானந்தன்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**சிவராசா தவக்குமார்**



மண்ணில் 15.10.1980

விண்ணில் 07.06.2015

நீங்கள் இவ் உலகை விட்டு நீங்கி ஆண்டொன்று சென்றாலும்
எம்மைவிட்டு நீங்காத உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாகவே இருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாகபூஷணி அம்மன் வீதி,
நுணாவில் மத்தி, சாவகச்சேரி (சி.88) (11,18)

**மனைவி**
(கௌசல்யா)

## இருபத்தொன்பதாவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03 . 04 . 1930

மறைவு 27 . 05 . 1987

***அமரர் அருளம்பலம் முத்துராஜா***

(முன்னாள் உபதபாலதிபர். தொண்டைமானாறு)

**ஆண்டுகள் இருபத்தொன்பதானாலும் உம் திருமுகம்
எம் முன்னே நிழலாடுகின்றது – என்றும்
உம் பிரிவால் துயருறுகின்றோம்.
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

(J55) (14.17.18) ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

" முத்துவாசா "
கெருடாவில், தொண்டைமானாறு.

மனைவி, மக்கள்,
மருமகள், பேர்த்தி.

## முல்லைத்தீவில் நடைபவனி

முல்லைத்தீவு, மே 27

சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் தேசிய இளைஞர் மன்றம் ஆகியன இணைந்து நடத்திய நடைபவனி நேற்று முல்லைத்தீவில் இடம்பெற்றது.

எதிர்காலத்துக்கான இளைஞர்களின் சக்தி எனும் தொனிப் பொருளில் நடைபெற்ற நடைபவனி கரைதுறைப்பற்று பிரதேச செயலக முன்றிலில் இருந்து ஆரம்பமாகி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகவுள்ள பொது விளையாட்டு மைதானத்தைச் சென்றடைந்து, மாவட்ட சம்மேளனத் தலைவர் கே. தரணிதரன் தலைமையில் கூட்டம் ஆரம்பமானது. நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் அதிகாரிகள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், கரைதுறைப்பற்று பிரதேச செயலர், தேசிய இளைஞர் மன்ற அதிகாரிகள், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் யுவதிகள் கலந்துகொண்டனர். (வ-500)

## சிகிச்சை பயனின்றி மாணவன் சாவு

யாழ்ப்பாணம், மே 27

தூக்கிட்டு ஆபத்தான நிலை யில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 11 வயதுச் சிறுவன் சிகிச்சை பயனளிக்காது நேற்றுக் காலை உயிரிழந்தான்.

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த யதீஸ் பேனிசன் என்ற சிறு வனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

தெல்லிப்பழையிலுள்ள பாடசாலையில் கல்வி கற்கும் குறித்த மாணவன் கடந்த 16 ஆம் திகதி பாடசாலையில் கராட்டி வகுப்பில் பங்கு கொள்ள விரும்பியுள்ளான். அவ்வாறு பங்கு கொள்வதானால் பெற்றோரின் சம்மதக் கடிதத்தைச் சமர்ப்பிக்குமாறு பாடசாலை நிர்வாகம் கோரியது என்று தெரிவிக்கப்படுகின்றது. குறித்த சிறுவன் வீட்டுக்குச் சென்று சம்மதக் கடிதம் கோரியுள்ளான். எனினும் பெற்றோர் அனுமதிக்கவில்லை.

அதனால் மனமுடைந்த சிறுவன் வீட்டில் மறுநாள் மாலை 6 மணியளவில் தூக்கிட்டுத் தற்கொலைக்கு முயன்றுள்ளான். குறித்த சம்பவத்தை அவதானித்த மூத்த சகோதரன் தாயாரின் உதவியுடன் சிறுவனை மீட்டு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பித்துள்ளனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தான். இந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காது நேற்றுக் காலை சிறுவன் உயிரிழந்தான்.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேமகுமார் மற்றும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ற-4,101)

## சமஷ்டித்

யும் முன்வைத்தார்.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டின் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்த வரையில், தற்போது வெற்றியீட்டியிருக்கும் தமிழக முதலமைச்சர் எமது அரசியல், சமூக, பொருளாதார வேணவாக்களை நாங்கள் வென்றெடுக்க உறுதியான துணையாக இருப்பார் என்பது எதிர்பார்ப்பு.

சரித்திர ரீதியாகப் பார்த்தால் 1983 ஆம் ஆண்டுக் கலவரத்தின் பின், லட்சத்திற்கும் மேலான புலம்பெயர் தமிழர்கள் தமிழ் நாட்டில் சரணடைந்தனர். அன்று தொடக்கம் இன்று வரையில் மனம் கோணாமல் எம் மக்களை அங்கு வைத்துப் பார்த்துப் பராமரித்து வருவது சாதாரண விடயமன்று. தமது மக்களைப் பார்க்க வேண்டிய கடப்பாடுடையவர்கள், எமது மக்களையும் 33 வருட காலமாகப் பார்த்துப் பராமரித்து வருவது எமது மனப்பூர்வமான நன்றியறிதல்களுக்குரியது.

1987 ஆம் ஆண்டில் இலங்கை - இந்திய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போது, இலங்கைத் தமிழ் மக்கள் சார்பில் இந்திய அரசே முகவராக நின்று அதை முன்னேற்றியது. இந்திய அரசினாலும் தமிழ் மக்களாலும் எதிர்பார்க்கப்பட்டவை 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ்தராது விடப்பட்டது. இதனை விடத் தரப்பட்ட உரித்துக்களும் எமது ஒற்றையாட்சியாளர்களால் பின்னர் பறித்தெடுக்கப்பட்டன. போருக்குப் பின்னர் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது.

சிதைந்த 13 ஆவது திருத்தச் சட்டத்தில் இருந்து சிறந்த சமஷ்டி முறையொன்றிற்கு இந்த நாடு மாற வேண்டிய அவசியம் உண்டு. அதற்கு இந்திய அரசின் ஒத்துழைப்பும், பங்கும் மிக முக்கியமானது. இலங்கைத் தமிழ் மக்கள் சார்பில் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட இந்திய அரசுக்கு, எமது தற்போதைய நிலைமையும், எமது வருங்காலமும் தார்மீகப் பொறுப்புக்களாக அமைந்துள்ளன. இதனை இந்திய அரசுக்கு எடுத்துக் கூறக்கூடிய ஒரே தலைவர் செல்வி ஜெயலலிதா மட்டுமே. அவர் அதைச் செய்து சுமுகமான ஒரு தீர்வை நாம் பெற உந்து சக்தியாக இருப்பார் என்பது எமது கணிப்பும் எதிர்பார்ப்பும்.

இதன் பொருட்டு வடக்கு மாகாண சபையானது செல்வி ஜெயலலிதாவின் வெற்றியை வரவேற்றுப் பாராட்டும் அதே நேரம், அவரின் அரசுடன் கிட்டிய தொடர்பாடல்களை வைத்துக் கொள்வதற்கும் விரும்புகின்றது – என்றார்.

### எதிர்ப்பு

இதன்போது எதிர்க்கட்சி உறுப்பினர் ஜெயதிலக, அயல் நாட்டில் ஒருவர் பதவியேற்றதற்கு பாராட்டுத் தெரிவிக்கின்றீர்கள். எமது நாட்டில் இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்தவில்லை. இதனை நான் எதிர்க்கின்றேன் – என்றார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், நிகழ்ச்சி நிரல் ஒழுங்கில் அதுவும் உள்ளது. முதலில் முதலமைச்சரின் வாழ்த்து, அடுத்து அவர்களுக்கான அனுதாபங்களைத் தெரிவிக்கும் விடயம் நிகழ்சி நிரலில் உள்ளது – என்றார். இதனையடுத்து அனுதாபம் தெரிவிக்கும் விடயம் சபையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. (த-வ-5)

## வலயக்கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு ஒப்பந்த அடிப்படையில் சிற்றுண்டிச்சாலை குத்தகைக்கு வழங்குதல் 15.06.2016 தொடக்கம் 14.06.2017 வரை

வலயக்கல்வி அலுவலகம், வவுனியா தெற்கிற்குரிய சிற்றுண்டிச்சாலையை நடத்துவதற்கு தகுதியான/தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடத்துனர்களிடமிருந்து **15.06.2016** தொடக்கம் **14.06.2017** வரையான காலப்பகுதிக்கு வலயக் கல்வி அலுவலக பெறுகைக் குழுவினால் முத்திரையிடப்பட்ட பெறுகைகள் கோரப்படுகின்றன.

1. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் **வலயக் கல்வி அலுவலகம் வவுனியாவில்** கிடைக்கும் 'Application for Bid Documents' என்ற படிவத்தினைப் பூர்த்திசெய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா **500ஐ** காசாக அலுவலக காசாளரிடம் செலுத்தி பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாள்களில் **27.05.2016** தொடக்கம் **13.06.2016** வரையான காலப்பகுதியில் 09.00 மணிதொடக்கம் 16.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.
2. விலைக் கேள்விகள் **13.06.2016** ஆம் திகதி **03.00** மணிக்கு முன்பதாக **வலயக்கல்வி அலுவலக** வலயக்கல்வி பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
3. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினை அலுவலக நேரங்களில் கணக்காளர் **வலயக் கல்வி அலுவலகம் வவுனியா அவர்களின்** தொலைபேசி இலக்கம் **024-2222026** உடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
4. கிடைக்கப் பெற்ற விலைக் கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுப்பட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு திணைக்கள பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

திருமதி.எஸ்.அன்ரன் சோமராஜா
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
வவுனியா தெற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனமழையால் கிளிநொச்சியில் 5 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

## மாவட்ட செயலகம் தகவல்

> நாடாளாவிய ரீதியில் கிளிநொச்சி மாவட்டத்திலேயே அதிகளவாக 373 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று வானிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்திருந்தது.

கிளிநொச்சி, மே 27

அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்தில் பெய்த கன மழையால் 5 ஆயிரத்து 467 குடும்பங்களைச் சேர்ந்த 18 ஆயிரத்து 265 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சி மாவட்ட செயலக புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 23 வர்த்தக நிலையங்கள் உட்பட 11 கிணறுகள் சேதமடைந்துள்ளன என்றும் அந்த புள்ளி விவரத்தில் குறிப்பிடப்பட்டுள் ளது.

இது குறித்து அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கிளிநொச்சிமாவட்டத்தில்கனமழையால் 5 ஆயிரத்து 467 குடும்பங்களை சேர்ந்த 18 ஆயிரத்து 265 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 3 ஆயிரத்து 331 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 993 பேர் கடும் பாதிப்புகளை எதிர் கொண்டுள்ளனர். 7 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன. 60 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள பகுதிகளில் ஆயிரத்து 623 குடும்பங்களை சேர்ந்த 5 ஆயிரத்து 841 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 4 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன. 177 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. பரந்தன், உமையாள்புரம், ஊரியான் மற்றும் புன்னை நீராவியடி கிராமசேவையாளர் பகுதிகளிலேயே அதிகமான வீடுகள் பகுதியவில் சேதமடைந்துள்ளன. பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 180 குடும்பங்களைச் சேர்ந்த 470 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 2 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. 11 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பச்சிலைப் பள்ளி பிர தேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 333 குடும்பங்களைச் சேர்ந்த 961 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 3 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. 23 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

அத்துடன் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பரந்தன் கிராம சேவையாளர் பிரிவின் கீழ் உள்ள பகுதிகளில் 23 வர்த்தக நிலையங்களும், கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள பகுதிகளில் 11 கிணறுகளும் பாதிக்கப்பட்டள்ளன.

யாழ். மன்னார் செல்லும் ஏ-32 வீதியில் உள்ள மண்டைக்கல்லாறு பாலத்தை மேவி 2 அடி உயரத்துக்கு நீர் மட்டம் உயர்ந்ததால் பாலத்தினூடான போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. - என்றுள்ளது.

அதேவேளை நாடளாவிய ரீதியில் கிளிநொச்சி மாவட்டத்திலேயே அதிகளவாக 373 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று வானிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்திருந்தது.

(ற-21)



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் யாழ்.மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் கொடி வாரம் ஆரம்பிக்கப்பட்டது. யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தலைமையில் இந்த நிகழ்வு நடை பெற்றது. நிகழ்வில் மாவட்ட செயலருக்கு யாழ். மாவட்ட இளைஞர் சம்மேளனத் தலைவர் சுபாகரும் , நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்கு மாகாணப் பணிப்பாளரும் கொடியை அணிவித்தனர். (ற-ரி)

# வீட்டின் கதவைத் திறந்து 15 பவுண் நகைகள் திருட்டு

வீட்டு முன்கதவைத் திறந்து உள்ளே சென்ற திருடர்கள் 6 இலட்சத்து 63 ஆயிரம் ரூபா பெறுமதியான சுமார் 15 பவுண் நகைகளை திருடிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தெல்லிப்பழை துர்க்காபுரம் பகுதியில் கடந்த திங்கட்கிழமை பகல் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. தபாற்கந்தோரில் பணிபுரியும் உத்தியோகத்தர் வீட்டில் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. வழமைபோல் காலையில் முன் கதவைப் பூட்டிவிட்டு கணவனும், மனைவியும் அலுவலகம் சென்றுள்ளனர்.

முற்பகல் 11 மணி அளவில் உணவு எடுப்பதற்காக வீட்டுக்கு வந்த போது, முன்கதவு திறந்திருந்துள்ளது. உள்ளே சென்று பார்த்த வீட்டு உரிமையாளருக்கு தமது வீட்டில் திருட்டுப்போன விடயம் தெரியவந்தது.

இது தொடர்பில் தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்தில் செய்து கொண்ட முறைப்பாட்டை அடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற தட யவியல் பொலிஸார் கைரேகைகளை பதிவு செய்துள்ளனர். இது தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. விசாரணை மேற்கொள்ளப்படுகிறது எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-ஐ-4,107)

# பதவி குறைப்புத் தொடர்பில் கலந்துரையாட முதலமைச்சருக்கு கடிதம் மூலம் கோரிக்கை

## கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் அனுப்பியது

யாழ்ப்பாணம், மே 27

மாகாணப் பதவி நிலை அலுவலர்களாக இருந்த கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பதவி நிலை குறைக்கப்பட்டமை தொடர்பாக கலந்துரையாட முன்வருமாறு, கிராம அபிவிருத்திஉத்தியோகத்தர்கள் சங்கம், வட மாகாண முதலமைச்சரிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

வடக்கு மாகாண சபையால், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமூக சேவை உத்தியோகத்தர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் இந்த இரண்டு பதவி நிலைகளுக்கும் ஒரே அடிப்படைச் சம்பளமே வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் தற்போது இந்த இரண்டு பதவி நிலைகளுக்கும் வெவ்வேறு அடிப்படைச் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சமூகசேவை உத்தியோகத்தர் ஆட்சேர்ப்புக்குத் தரம் 11 பதவி நிலையிலும், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆட்சேர்ப்புக்கு தரம் 111 பதவி நிலையிலும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதனால், தற்போது பணியாற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மாகாண பதவி நிலை உத்தியோகத்தர்களாகவும், இனி நியமனம் செய்யப்படும் புதிய உத்தியோகத்தர்கள் மாகாண பதவிநிலை சாராத சாதாரண உத்தியோகத்தர்களாகவும் காணப்படுவார்கள். இது உத்தியோகத்தர்களை மன ரீதியாக பாதிப்பதுடன், எதிர் காலத்தில் அலுவலக வேலைகளிலும் சிக்கல்களை ஏற்படுத்தும்.

ஒரே தர நிலையில் இதுவரை பணியாற்றிய சமூகசேவை உத்தியோகத்தர் தர நிலையிலிருந்து, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தரக் குறைப்பு செய்யப்படுவது எவ்வகையிலும் பொருத்தமற்றதாகும். இதனைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

18 நாள்கள் தற்போது களப்பணி ஆற்ற வேண்டும். இதனை 12 நாள்களாகக் குறைக்க வேண்டும். அத்துடன் களப் பயணத் தூரம் 500 கிலோ மீற்றராக வரையிறுக்கப்பட்டுள்ளது. அதனை 200 தொடக்கம் 250 கிலோ மீற்றர் தூரத்துக்குள் வரையிறுக்க வேண்டும். போக்குவரத்துக் கொடுப்பனவை ஆயிரத்து 500 ரூபாவிலிருந்து அதிகரிக்க வேண்டும். ஏனைய மாகாணங்களில் அதிகரித்த கொடுப்பனவே வழங்கப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக விடுமுறை நாள் கொடுப்பனவு மற்றும் தொலைபேசிக் கட்டணக் கொடுப்பனவு தொடர்பிலும் ஆராயப்பட வேண்டும். - என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

(ற-ஐ-5-21)

# மது போதையில் மனைவியை கொட்டனால் தாக்கிய கணவன்

போதையில் வந்த கணவன் கொட்டனால் இடித்ததால், மனைவியின் கண் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அதனால் அவருக்கு சிகிச்சையளிக்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் எழுதுமட்டுவாழ் தெற்கில் கடந்த செவ்வாய்க் கிழமை நடந்துள்ளது.

மது போதையில் வந்த கணவன், கொட்டனால் தன்னைத் தாக்கினார் எனவும், முகத்தில் கொட்டனால் இடித்தபோது கண்ணில் காயம் ஏற்பட்டது என்றும் மனைவி தெரிவித்துள்ளார்.

பாதிப்புக்கு உள்ளான பெண் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொட்டனால் இடித்த போது, அது கண்ணை மோசமாகத் தாக்கியதால் சிலவேளை குறித்த பெண் கண் பார்வையை இழக்கக்கூடும் என்று வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ஐ-9)

# ஆயிரத்து 44 போத்தல் கோடா கட்டைக்காட்டில் சிக்கியது

## தர்மபுரம் பொலிஸாரின் திடீர் சோதனையில்

கிளிநொச்சி, மே 27

கசிப்புக் காய்ச்சுவதற்காக வைக்கப்பட்டிருந்த ஆயிரத்து 44 போத்தல் கோடா தர்மபுரம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது என்று தர்மபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கட்டைக்காடு பகுதியிலேயே குறித்த கோடா கைப்பற்றப்பட்டுள்ளது.

தர்மபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து கட்டைக் காட்டுப் பகுதியில் கசிப்புக் காய்ச்சப்படும் பகுதியை இனம் கண்டு சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸார் குறித்த இடத் தில் கசிப்புக் காய்ச்சுவதற்குத் தயாராக இருந்த நிலையில் காணப்பட்ட ஆயிரத்து 44 போத்தல் கோடாவை மீட்டுள்ளனர்.

[illegible]
[illegible] என்றும் பொலிஸார் வருவதை அறிந்த



குற்றவாளிகள் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் தெரிவித்த தர்மபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அவர்களைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெரிவித்தார்.

கசிப்பு உற்பத்தியைத் தடுப்பது தொடர்பாக கிளி நொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி பாலித்த ஆர் சிறீவர்தன பணிப் புரைக்கு அமைவாகவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ற-21,ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# 71 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட பயிரழிவுகள் கிளி. மாவட்டத்தில்

## அண்மையில் ஏற்பட்ட கன மழையால்

கிளிநொச்சி, மே 27
கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த வாரம் பெய்த கடும் மழையால் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு 71 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட பயிர் சேதங்கள் ஏற்பட்டுள்ளன என்று கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் தயாரூபன் தெரிவித்தார்.

மொத்த சேதங்களுக்குமான மதிப்பீடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றது என்றும் அதனால் சரியான அளவைக் கூறமுடியாதுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோகம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை வெளியிட்டிருந்தனர். அது குறித்துக் கேட்ட போதே உதவி ஆணையாளர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது–

கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகளிலும் சிறுபோக பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. பயறு, கௌபி, கச்சான், உட்பட பல சிறுதானிய பயிர்ச் செய்கைகளும் மற்றும் கிளிநொச்சியில் சில இடங்களில் விவசாயிகளால் சிறுபோக நெற்பயிர் செய்கையும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேட்டு நிலத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுதானிய செய்கையில் ஆயிரத்து 786 ஏக்கர் சிறுதானிய பயிர் செய்கை மழை காரணமாக முற்றாக அழிவடைந்துள்ளது. வயல் காணிகளில் மேற்கொள்ளப்பட்ட மேட்டு நில சிறுதானிய செய்கையில் ஆயிரத்து 491 ஏக்கர் நிலப்பரப்பிலான தானியங்கள் அழிவடைந்துள்ளன. மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற் பயிர்ச் செய்கையில் 3 ஆயிரத்து 164.5 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட பயிர்கள் முற்றாக அழிவடைந்துள்ளன. கிளிநொச்சியில் 109.5 ஏக்கரும், பூநகரியில் 76 ஏக்கரும், உருத்திரபுரத்தில் 474.5 ஏக்கரும், முழங்காவிலில் 76 ஏக்கரும், இராமநாதபுரத்தில் 58.2 ஏக்கரும், அக்கராயனில் 2 ஆயிரத்து 350.9 ஏக்கரும் மழையால் முற்றாக அழிவடைந்துள்ளன.

அக்கராயன் பகுதியில் மொத்தமாக 2ஆயிரத்து 920 ஏக்கரில் செய்யப்பட்ட நெற்பயிர்ச் செய்கையில் 2 ஆயிரத்து 350.9 ஏக்கர் சிறுபோக செய்கை முற்றாக அழிவடைந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள மொத்த அழிவுகளின் பெறுமதி 71 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்டதாகவே உள்ளது - என்றார். (ற-21)



இலங்கை வேதாகம புதிர்ப் போட்டிச் சபையின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் வை.எம்.சீ.ஏ. நடத்திய 52 ஆவது அகில இலங்கை வேதாகம புதிர்ப் போட்டி அண்மையில் யாழ். பரியோவான் கல்லூரியில் நடைபெற்றது. அதில் 12 வயதுக்குட்பட்ட பிரிவுகளில் 17 அணிகளும், 16 வயதுக்குட்பட்ட பிரிவுகளில் 15 அணிகளும் பங்குபற்றின. இரு பிரிவுகளிலும் உடுவில் மகளிர் அணி முதலிடத்தைப் பெற்று மாவட்ட மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. (ற-9)

## ரயில் பாதையால் வெள்ளம் தேங்கும் இடங்கள் விரைவில் சீர் செய்யப்படும்

நேரில் பார்வையிட்ட அதிகாரிகள் உறுதியளிப்பு

சாவகச்சேரி, மே 27
ரயில் பாதையை உயர்த்தி அமைக்கப்பட்டதன் காரணமாக, மழைவெள்ளம் வெளியேற முடியாத நிலையில் காணப்பட்ட 10 இடங்கள் பொது மக்களால் அடையாளம் காட்டப்பட்டதையடுத்து, அவற்றை விரைவில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகளால் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

ரயில் பாதை அமைக்கும் பணிகள் 2012 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டிருந்தன. தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் தொடக்கம் நாவற்குழி வரையான பகுதிகளை ஊடறுத்துச் செல்லும் ரயில் பாதை , முன்னைய காலத்தை விட ஒரு மீற்றர் தூரம் உயர்த்தப்பட்டதால் பல இடங்களில் மழை வெள்ளம் வழிந்தோட முடியாத நிலை காணப்பட்டது. இதனால் பல குடும்பங்கள் மழை காலங்களில் குடியிருப்புகளை விட்டு வெளியேற வேண்டிய நிலைகளும் ஏற்பட்டன.

இது தொடர்பாக பிரதேச செயலருக்குக் கிடைத்த முறைப்பாடுகளையடுத்து, இந்த விடயம் இலங்கை ரயில் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறான இடங்களைப் பார்வையிட வருவதாக ரயில்வே திணைக்களத்தினர் பிரதேச செயலருக்கு அறிவித்திருந்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை ரயில்வே அதிகாரிகள் வந்திருந்தபோது, வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் உள்ளூராட்சி சபைகள், பொது அமைப்புக்கள் கிராம அலுவலர்கள் ஆகியோர் குறித்த இடங்களைப் பார்வையிடச் சென்றனர். இதன் பிரகாரம் நாவற்குழி, சங்கத்தானை, இராமாவில், கொடிகாமம், மிருசுவில், உசன் போன்ற இடங்களுக்குச் சென்ற போது, வெள்ளம் தேங்கி நிற்கும் இடங்களில் பெரும் எண்ணிக்கையான மக்கள் காத்திருந்து அடையாளம் காட்டினர்.

அத்துடன் தச்சன்தோப்புப் பகுதியில் ஏ-9 வீதியிலிருந்து ஏ-32 வீதியை இணைக்கும் வீதியில் காணப்படும் கடவையில் பாதுகாப்பு கடவை அமைக்க வேண்டும் என்றும் உசன் பகுதி கடவையில் பொருத்தப்பட்டுள்ள அபாய விளக்கு தொடர்ந்து வெளிச்சம் வந்த நிலையில் காணப்படுவதையும் மக்கள் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தினர்.

இந்த விடயம் தொடர்பாக மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு வெள்ள நீர் வழிந்தோடக்கூடிய முறையில், விரைவில் சீர் செய்யப்படும் என்று அதிகாரிகளால் பொதுமக்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்டது. (ற-ஐ-9)

## உரையாடல் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 27
சிந்தனைக்கூடம் யாழ்ப்பாணம் எனும் ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு உரையாடல் நிகழ்வு ஒன்று, 2 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சிந்தனைக்கூட கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அதில் "மனக்கவலை மாற்றல் அரிதா" என்னும் தலைப்பில் பொறியியலாளர் மாவை நித்தியானந்தன் உரையாற்றவுள்ளார். (ற-ஐ-ரி)



சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த பெரிய விளம்பரத் தட்டி பொருத்தப்பட்டிருந்த இரும்புக் கம்பி நேற்றுமுன்தினம் மாலை வீசிய கடுங் காற்றால் உடைந்தது. இதனால் எந்த நேரமும் முறிந்து விழும் அபாய நிலையில் காணப்பட்டது. அதையடுத்து பொலிஸாரும், சாவகச்சேரி நகரசபையினரும் இணைந்து அபாய நிலை காணப்பட்ட பகுதிக்கு தடுப்பை ஏற்படுத்தி, பஸ் நிலையத்துக்கு வரும் வாகனங்களை வீதியோரத்தில் நிறுத்தி பயணிகளை ஏற்றிச்செல்ல ஏற்பாடுகள் மேற்கொண்டிருந்தனர். இந்தநிலையில் நேற்று பகல் திடீரென தட்டி முறிந்து வீழ்ந்தது. சாவகச்சேரி நகரசபையினர் உடனடியாகச் செயற்பட்டு வீழ்ந்து காணப்பட்ட விளம்பரத் தட்டியை அப்புறப்படுத்தினர். (ற-ஐ-9)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மே 27
யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் , சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜய கலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் இணைத் தலைமையில் கூட்டம் நடைபெறும் என்று மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் திணைக்களத் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார். (ற-ஐ-9)

## வாகன விபத்தில் இருவர் சாவு

மூதூர், மே 27
மூதூர் கிண்ணியா வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மூதூர் மத்திய கல்லூரி மைதானத்துக்கு அண்மையாக மூதூர் கிண்ணியா வீதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 6.30 மணியளவில், திருகோணமலை நோக்கிச் சென்ற பயணிகள் பஸ் ஒன்று மூதூர் நோக்கிச்சென்று கொண்டிருந்த ஓட்டோவுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன் போது ஓட்டோவில் பயணித்தவர்களில் ஒருவர் அதே இடத்தில் உயிரிழந்ததுடன், மற்றொருவர் திருகோணமலைப் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

விபத்து இடம்பெற்றதை அடுத்து, அங்கு ஒன்றுகூடிய மக்களால் பஸ் மீது கல் வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதையடுத்து விபத்துக்குள்ளான வாகனங்களை மூதூர் பொலிஸார் அப்புறப்படுத்தினர்.

விபத்தைத் தொடர்ந்து மூதூர் கிண்ணியா வீதியில் ஸ்தம்பித்திருந்த வாகனப் போக்குவரத்து சில மணித்தியாலங்களின் பின்பு வழமைக்கு திரும்பியிருந்தது. பஸ்ஸின் சாரதியை மூதூர் பொலிஸார் கைது செய்துள்ளதுடன், சம்பவம் தொடர்பில் விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர். (ற-ஐ-4)

## தங்கூசிவலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித்த மூவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,மே 27
சாவகச்சேரி கேரதீவுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபட்ட மூவருக்கு, சாவகச்சேரி நீதிமன்றம் ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபா குற்றப்பணம் விதித்து தீர்ப்பளித்துள்ளது என மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் ரமேஸ் கண்ணா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
கேரதீவுப் பகுதியில் தொடர்ச்சியாக தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தியும் மீன் பிடி அனுமதியின்றியும் பலர் தொழில் புரிவதாக எமக்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம், சாவகச்சேரி கடற்றொழில் பரிசோதகர் திடீர் சோதனையில் ஈடுபட்டார்.

இதன் போது சட்டத்துக்குப் புறம்பான வகையில் தொழிலில் ஈடுபட்டிருந்த 3 படகுகள் மற்றும் உபகரணங்களுடன் சாவற்கட்டுப் பகுதியைச் சேர்ந்த மூன்று மீனவர்களும், சந்தேக நபர்களாக இனம் காணப்பட்டனர். அதையடுத்து குறித்த மூவரும், சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப் பட்டனர். இவர்களில் ஒருவர் சட்ட விரோதமான தங்கூசி வலையைப் பயன்படுத்திய குற்றத்துக்காக 25 ஆயிரம் ரூபா குற்றப்பணம் விதிக்கப்பட்டது. ஏனைய இருவரும் படகுக்கான பதிவும், மீன்பிடி அனுமதியும் இன்றி தடை செய்யப்பட்ட தங்கூசி வலையைப் பயன்படுத்திய குற்றத்துக்காகத் தலா 45 ஆயிரம் ரூபா வீதம் குற்றப் பணம் விதிக்கப்பட்டது.

25 ஆயிரம் ரூபா குற்றப் பணம் விதிக்கப்பட்டவரின் படகு மீள கையளிக்கப் பட்டதுடன், ஏனைய இருவரும் படகுகளுக்காக ஆதாரங்களை சமர்ப்பித்து படகுகளை பெற்றுக் கொள்ளுமாறும் சட்ட விரோத வலைகளை அழிக்குமாறும் நீதிவான் சறோஜினி இளங்கோவன் உத்தரவு இட்டுள்ளார்- என்று தெரிவித்தார். (ற-ஐ-101,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைச்சிக்கு மாடுகளை வெட்டுவதற்கு அதிகாரிகளின் அனுமதிகள் கட்டாயம்

யாழ்ப்பாணம், மே 27

இறைச்சிக்காக மாடுகள் கொல்களத்தில் வெட்டப்படும்போது சட்டமுறைக்குட்பட்ட வகையில் அதற்கென நியமிக்கப்பட்ட அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே வெட்டப்படுதல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்பொழுது மாடுகள் வகைதொகையின்றி அழிக்கப்பட்டு வருகின்றன. சட்ட திட்டங்களை பின்பற்றுவது குறைவாகவும் உள்ளது. மற்றும் அதற்குரிய சட்டங்கள் தெரியாமலும், தெரிந்தும் தமது சுயநல நோக்கில் மறைத்தும் கொண்டு செல்லப்படுவதால் பல சிக்கல்களையும் இவர்கள் எதிர்கொள்கின்றனர்.

அரச கால்நடை வைத்தியர் அல்லது கால்நடை வைத்தியரால் கடிதம் மூலம் அனுமதியளிக்கப்பட்ட உத்தியோகத்தர், உள்ளூராட்சி மன்றங்களால் வேலைக்கு அமர்த்தப்பட்ட கால்நடை வைத்தியர், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களப் பணிப்பாளர் போன்றவர்கள் கொல்களத்தில் மாடுகளைவெட்டுவதற்கான அனுமதியை வழங்குவதெற்கென நியமிக்கப்பட்டுள்ளனர்.– என்று கால்நடைத் திணைக்கள அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இவர்களின் அனுமதியைப் பெற்ற பின்னரே மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுதல் வேண்டும். பசுமாடுகளை கொல்களத்தில் இறைச்சிக்காக வெட்டுவதாயின் திருத்தம் செய்யப்பட்ட விலங்குச் சட்டம் இல.46/ 1988 இன் பிரகாரம் சில சட்ட நிபந்தனைகள் கூறப்பட்டுள்ளன.

அதில் 12 வயதுக்கு மேற்பட்ட பசு, இனவிருத்திக்கு பயன்படுத்த முடியாத பசு, எந்தவிதமான விவசாய நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்த முடியாத பசு என உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்ட பின்புதான் அவை இறைச்சிக்காக வெட்டுவதற்கு அனுமதிக்கப்படும். அதுமட்டுமன்றிக் கால்நடை வைத்தியரால் காதிலும் அடையாளமிடப்பட்டு, அதற்குரிய விலங்குகளின் உறுதிச் சிட்டைகளும் வழங்கப்பட்டுள்ள நாம்பன் மாடு, உறுதிப்படுத்தப்பட்ட பசுமாடு மாத்திரம் இறைச்சிக்காக வெட்டப்படுதல் வேண்டும்.

இறைச்சிக்காக வெட்டப்படும் நாம்பன் மாட்டிலும், உறுதிப்படுத்தப்பட்ட பசு மாட்டிலும் எந்த விதமான தொற்று நோய்களும் இல்லையென்று, அரச கால்நடை வைத்தியரால் வழங்கப்படும் உறுதிப்படுத்தப்பட்ட சுகாதாரச் சான்றிதழ் பெறப்படுதல் வேண்டும்.

இறைச்சிக்காக வெட்டுவதற்காக கொல்களத்துக்கு நாம்பன் மாடு மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட பசு மாடு வாகனத்தில் கொண்டு செல்ல வேண்டுமாயின், அரச கால்நடை வைத்தியரிடமிருந்து வாகன அனுமதிப் பத்திரம் பெறப்படுதல் வேண்டும்.

ஒரு பிரதேச செயலக பிரிவினுள் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு அல்லது ஒரு பிரதேச செயலக பிரிவிலிருந்து, இன்னொரு பிரதேச செயலக பிரிவுக்கு, இறைச்சிக்கு வெட்டவதற்காக கொல்களத்துக்கு நாம்பன் மாடு மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட பசு மாடு கொண்டு செல்லப்படவேண்டுமாயின் பிரதேச செயலாளரிடம் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் பெறப்படுதல் வேண்டும்.

மேற்படி விடயம் தொடர்பில் கால்நடை மிருக வைத்திய அதிகாரி, உள்ளூராட்சி சபை, பொலிஸ் இணைந்த வகையில் செயற்படவேண்டும் – என்று தெரிவித்தார். (ற-ஐ-ரி)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், மே 27

புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி பெரியபுலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவில் எதிர்வரும் ஜூன் மாதம் 6 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ற-ஐ-ரி)

## விசாகப் பொங்கல்

யாழ்ப்பாணம், மே 27

தெல்லிப்பழை சித்தியம் புளியடி அண்ணமார் ஆலயத்தின் வைகாசி விசாகப் பொங்கல் விழா நாளை சனிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. (ற-ஐ-ரி)

## மன்னார் நகர சபை சேகரித்த கழிவுகளுக்கு தீயிட்ட விசமிகள்

### புகை மண்டலத்தால் மக்கள் அசௌகரியம்

மன்னார், மே 27

மன்னார் நகர சபையால் கொட்டப்பட்ட கழிவுகள் இனம் தெரியாத நபர்களால்கடந்த செவ்வாய்க்கிழமை திடீரென எரியூட்டப்பட்டுள்ளது. அதனால் அந்தப் பகுதியை அண்டி வாழும் சுமார் 40க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மன்னார் நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் மன்னார் நகர சபையால் சேகரிக்கப்படும் சகலவிதமானகழிவுப்பொருள்களும் மன்னார்–தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள மன்னார் பொது மயானத்தின் பின் பகுதியில் கொட்டப்படுவது வழமை. இந்த நிலையில் அங்கிருந்த ஒரு தொகுதி கழிவுகளுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை தீ வைக்கப்பட்டுள்ளது. அதனால் அந்தப் பகுதி புகை மண்டலமாக மாறியது.

புகைமண்டலத்தால் அந்தப் பகுதி மக்கள் பெரிதும் பாதிப்படைந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக பிரதான வீதியில் உள்ள ஜே.ஆர்.எஸ்.நிறுவனத்துக்கு பின் பகுதியில் உள்ள சுமார் 40 குடும்பங்கள் கடும் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிட்டது என்றும் – தெரிவிக்கப்பட்டது.

நீண்ட காலமாக குறித்த பகுதியில் தேக்கிவைக்கப்பட்டிருந்த கழிவுப்பொருள்கள் திடீர் என எந்தவித அறிவித்தல்களும் இன்றி எறியூட்டப்பட்டதால் சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள் என பலர் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர். தீயுடன் கழிவுகள் காற்றில் அடித்துவரப்பட்டு, தமது வீடுகளினுள் வீழ்ந்துள்ளன. கழிவுகளை எரியூட்டும் போது முன் அறிவித்தல்களை மேற் கொள்ள வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அது தொடர்பில் மன்னார் நகர சபையின் செயலாளர் லொனால்ட் லெம்பேட்டிடம் கேட்டபோது;

கழிவுகளுக்கு எரியூட்டப்பட்டமைக்கும் நகர சபைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. சுற்றுச் சூழல் பாதுகாப்பை கருத்தில் கொண்டு பல மாதங்கலாக மன்னார் நகர சபை குப்பைகளை தீ வைத்து எரிப்பது இல்லை. மாறாக உரம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. ஏனைய கழிவுகள் புதைக்கப்படுகின்றன. இரும்புப் பொருள்களை எடுப்பதற்காக வேறு எவராவது தீ வைத்திருக்க முடியும். குறித்த தீயை கட்டுப் படுத்த மன்னார் நகர சபை நடவடிக்கைகளை மேற்கொண்டது. எனினும் தீ முழுமையாக பரவியுள்ளது. இந்த விடயத்தில் நகர சபை கூடிய நடவடிக்கை எடுக்கும். இனி வரும் காலங்களில் அவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாத வகையில் மன்னார் நகர சபை உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.– என்றார். (ற-21,56)



## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச்செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் / மாவட்டச்செயலரால் **அளவெட்டி அஞ்சல் அலுவலகத்திற்கான அலுவலக கட்டடமும் தபாலதிபர் விடுதியும் -இரண்டு மாடி கட்டடம் - கட்டம்** 1 ஆகிய கட்டட வேலைக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்
2 தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் **மீள்குடியேற்ற பிரிவு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் **27.05.2016** தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரை விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் மேலதிக **மாவட்டச் செயலாளர்-காணி, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** (தொலைபேசி இல: 021 221 **2631)** அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றின் **மீள்குடியேற்ற பிரிவு மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து **27.05.2016 முதல் 13.06.2016 வரை** காலை 9.00 மணியிலிருந்து மாலை 2.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 2000/- கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் **தவிசாளர் பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு **14.06.2016 ஆம் திகதியன்று பி.ப 2.30மணிக்கு** அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் **அரச அதிபர் அலுவலகத்தில்** வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர், மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிட்டமுகவரில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் **14.06.2016 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு** திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச்சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்
7. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக் கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து **90 நாள்களுக்கு** செல்லுபடியாகும் விதத்திலும் கேள்விப்பிணை பொறுப்பு 120 **நாட்கள் இலக்கம்** இடப்பட்டும் இருத்தல் வேண்டும்
8. Prebid Meeting **10.06.2016** முற்பகல் **10.00 மணிக்கு** நடைபெறும்

| கேள்வி இல. | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்விப் பிணைத் தொகை | மீளளிக்கப்படாத தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| JF/MRR&H/RES/ 04/ DEV-PRO/2016 | அளவெட்டி அஞ்சல் அலுவலகத்திற்கான அலுவலக கட்டடமும் தபாலதிபர் விடுதியும் -இரண்டு மாடி கட்டடம் - கட்டம் 1 | 8.62 | 04 | C7 | 86,200.00 | **2000/-** |

**நா.வேதநாயகன்**
அரசாங்க அதிபர் / மாவட்டச். செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# கிழக்கு ஆளுநராலேயே பொறுமையை இழந்தேன்

## முதலமைச்சர் நசீர் அஹமட் விளக்கம்

கொழும்பு, மே 27

கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்னாண்டோவின் நடவடிக்கைகளாலேயே நான் பொறுமையிழந்தேன். – இவ்வாறு தெரிவித்துள்ளார் மாகாண முதலமைச்சர் நசீர் அஹமட்.

சம்பூர் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கடற்படை அதிகாரி ஒருவரைத் திட்டிய சம்பவம் குறித்து விளக்கம் அளிக்கும்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

மாகாண ஆளுநரின் நடவடிக்கை காரணமாகவே, ஆத்திரமுற்று நான் அவ்வாறு நடந்து கொண்டேன். மாகாண ஆளுநர் எனக்கு உரிய மரியாதை வழங்குவதில்லை. அடிக்கடி அதிகாரத்தில் தலையீடு செய்கின்றார்.

நிகழ்ச்சித் தொகுப்பாளர் உத்தியோகபூர்வமாக எனது பெயரை நிகழ்ச்சியில் கூறவில்லை. ஆளுநர் அழைத்த போது, நான் மேடையில் ஏற முயற்சித்தேன். அதன்போது நிகழ்ச்சித் தொகுப்பாளர் என்னைத் தடுத்தார்.

நான் முதலமைச்சர் எனவும் அதற்கான மரியாதையை வழங்குமாறும், ஆளுநர் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களிடம் கோரியிருந்தால் இவ்வாறான பிரச்சினை ஏற்பட்டிருக்காது. குறித்த கடற்படை அதிகாரி அப்பாவி. ஒட்டு மொத்தப் பிழையும் ஆளுநருடையது.

இந்த நிகழ்வு நடைபெறுவதற்கு முன்னதாக, நான் கிண்ணியாவில் ஒரு நிகழ்ச்சியில் ஆளுநருடன் பங்கேற்றிருந்தேன். சம்பூர் நிகழ்ச்சிக்கு உலங்கு வானூர்தி மூலம் செல்வது குறித்து கேட்ட போது, உலங்கு வானூர்தியில் இடமில்லை எனவும் நிகழ்ச்சி முடிவடையும் வரையில் இருக்காது முன்கூட்டியே தரை வழியாகச் சம்பூர் செல்லுமாறும் ஆளுநர் பணிப்புரை விடுத்திருந்தார். இதன்படி சம்பூர் சென்று காத்திருந்தேன். ஆளுநரும் அமெரிக்கத் தூதுவரும் உலங்கு வானூர்தியில் வந்திறங்கினர். எனது பெயரை நிகழ்ச்சியில் அறிவிக்கவில்லை. இவை அனைத்துக்கும் ஆளுநரே பொறுப்பு.

மாகாணத்தின் முதலமைச்சருக்கு மரியாதை வழங்கப்படாத நிலைமை ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல – என்றார்.

அதேவேளை கிழக்கு மாகாண முதலமைச்சரின் குற்றச்சாட்டை கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னான்டோ நிராகரித்துள்ளார்.

நான் நெறிமுறைகளின் அடிப்படையில் செயற்படும் ஒருவன். அனைவரையும் மதிக்கிறேன். முதலமைச்சரின் குற்றச்சாட்டுகளை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது – என்று அவர் தெரிவித்துள்ளார்.

கிண்ணியாவில் இருந்து சம்பூருக்கு உலங்குவானூர்தியில் ஏற்றிச் செல்ல மறுத்தது தொடர்பாக முதலமைச்சர் நசீர் அகமட் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுத் தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உலங்குவானூர்தியை நான் ஒழுங்கு செய்யவில்லை. அமைச்சர் பைசர் முஸ்தபாவின் அமைச்சின் செயலர் கமல் பத்மசிறி தான் அதனை ஒழுங்கு செய்திருந்தார். அவர், பிரதம செயலாளரையும், மாவட்டச் செயலரையும் அதில் ஏற்றிச் செல்லுமாறு கேட்டிருந்தார். அதனால்தான், உலங்கு வானூர்தியில் இடமில்லை என்றும், வீதியால் சம்பூருக்குச் செல்லுமாறும் முதலமைச்சரிடம் கூறினேன்.– என்று அவர் கூறியுள்ளார். (ற-ஜ-5)

### இயற்கை இடரால் 12 மாணவர்கள் சாவு

கொழும்பு, மே 27

சப்ரகமுவ மாகாணத்தில் ஏற்பட்ட இயற்கை இடர்களால் கேகாலை மாவட்டத்தில் உயிரிழந்தவர்களில், பாடசாலை மாணவர்கள் 12 பேர் உள்ளடங்குகின்றனர் 11 மாணவர்கள் காணாமல் போயுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

சப்ரகமுவ மாகாண சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இயற்கை அனர்த்தங்களால் கேகாலை மாவட்டமே கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாணத்தில், 63 பாடசாலைகள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன. அதில், கேகாலை மாவட்டத்தில் உள்ள 3 பாடசாலைகளில் மண் சரிவுகள் ஏற்பட்டுள்ளன. அந்தப் பாடசாலைகளை அந்த இடங்களில் இருந்து முழுமையாக அகற்றி, வேறு இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாகாணக் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். (ற-ஜ-4)

# இயற்கை இடரால் அழிவடைந்த பயிர்ச்செய்கைகளுக்கு இழப்பீடு

கொழும்பு, மே 27

வெள்ளம் மற்றும் மண்சரிவால் சேதமடைந்த பயிர்ச் செய்கைகளுக்கு நட்ட ஈடு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பாதிக்கப்பட்ட பயிர்ச் செய்கைகள் பற்றி, விவசாய அமைச்சுக்குத் தெரிவிப்பதற்கு அவசர இலக்கம் ஒன்றும் அறிமுகப் படுத்தப்படவுள்ளது. அந்த இலக்கத்துடன் தொடர்பு கொண்டு சேதவிவரங்களை விவசாயிகள் தெரிவிக்க முடியும். மேலும் பாதிக்கப்பட்ட விவசாயத்தைக் கட்டியெழுப்புவதற்கு விசேட செயலணி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

நாட்டில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு இடரால் பெரியளவில் விவசாய செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் குளங்கள், கால்வாய்கள் என்பனவும் சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட விவசாய செய்கையைக் கட்டியெழுப்புவதற்கு விவசாய அமைச்சால் செயலணி ஒன்றும் அமைக்பப்பட்டுள்ளது. அதில் அமைச்சர் என்ற வகையில் நானும், இராஜாங்க அமைச்சரும், எமது அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் தலைவர்களும் அங்கம் வகிக்கின்றோம்.

அத்துடன் சகல மாவட்டங்களுக்கும், பிரதிநிதிகளையும் நியமித்துள்ளோம். மாவட்ட ரீதியில் உள்ள விவசாயத் திணைக்கள உப அலுவலகங்கள், மாகாண சபைகள், மாவட்ட செயலாளர்களையும் இணைத்துக் கொண்டு இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

### நீர் நிலை சேதங்கள்

அதேவேளை அனர்த்தத்தால் கம் பகா மாவட்டத்தில் 172 கால்வாய்கள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், மாத்தளை மாவட்டத்தில் ஒரு குளம் முழுமையாகவும், நான்கு குளங்கள் பகுதியளவிலும், 7 கால்வாய்கள் முழுமையாகவும் சேதமாகியுள்ளன.

அநுராதபுரம் மாவட்டத்தில் முழுமையாக 12 குளங்களும் , பகுயளவில் 15 குளங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. களுத்துறை மாவட்டத்தில் 37 கால்வாய்கள் பகுதியளவில் சேதமாகியுள்ளன. குருநாகல் மாவட்டத்தில் 2 குளங்கள் முழுமையாகவும், 18 குளங்கள் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் 8 குளங்கள் முழுமையாகவும், 2 குளங்கள் பகுதியளவிலும் சேதமாகியுள்ளன. கேகாலை மாவட்டத்தில் 30 கால்வாய்களும், கண்டி மாவட்டத்தில் 33 கால்வாய்களும் சேதமாகியுள்ளன.

புத்தளம் மாவட்டத்தில் 18 குளங்கள் முழுமையாகவும், 53 குளங்கள் பகுதியளவிலும், 2 கால்வாய்கள் முழுமையாகவும், 7 கால்வாய்கள் பகுதியளவிலும் சேதமாகியுள்ளன.

கொழும்பில் 10 கால்வாய்கள் பகுதியளவில் சேதமாகியுள்ளன. நுவரெலியா மாவட்டத்தில் 2 நீர் நிலைகளும், 96 கால்வாய்களும் முழுமையாக சேதமாகியுள்ளன. வவுனியா மாவட்டத்தில் 18 குளங்களும், மன்னாரில் 6 குளங்களும், முல்லைத்தீவில் 6 குளங்களும், கிளிநொச்சியில் 14 குளங்களும் , யாழ்ப்பாணத்தில் 15 குளங்களும் முழுமையாகச் சேதமாகியுள்ளன. மொனராகலை மாவட்டத்தில் 3 கால்வாய்கள் பகுதியளவில் சேதமாகியுள்ளன.

சேதவிவரம் பற்றிய முழுமையான தரவுகளை இப்போது வெளியிட முடியாது. ஏனெனில் வெள்ள நீர் இன்னும் சீராக வடியவில்லை. வெள்ளநீர் முழுமையாக வடிந்த பின்னரே முழுத் தரவுகளையும் வெளியிட முடியும்.

### இரு திட்டங்கள்

சேதமடைந்துள்ள பயிர்ச் செய்கைகள் தொடர்பில் இரு வகையான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளோம். அதாவது முழுமையாக சேதமாகிய வயல், குளங்கள், கால்வாய்கள் என்பவற்றை முழுஅளவில் புனரமைக்க வேண்டியுள்ளது.

அடுத்ததாக பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ள விவசாய நிலங்களில் மீண்டும் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

இதுவரை கிடைத்த தரவுகளின் படி 4 ஆயிரத்து 490 ஏக்கர் நெற்செய்கை முழுமையாகச் சேதமாகியுள்ளது. 25 ஆயிரத்து 880 ஏக்கர் வேளாண்மை பகுதியளவில் சேதமாகியுள்ளது. எனவே பயிர்ச்செய்கை செய்ய முடியுமான நிலங்களில், மீண்டும் செய்கை பண்ணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம். – என்றார். (ற-ஜ-4)

# போகீல் தோட்டத்தில் மண்சரிவு எச்சரிக்கை

## 16 குடும்பங்கள் இடம்பெயர்வு

கொழும்பு, மே 27

நாவலப்பிட்டி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கெட்டபுலா போகீல் தோட்டத்தில் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால், 16 குடும்பங்களைச் சேர்ந்த 72 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தற்பொழுது கெட்டபுலா பாரண்டா தமிழ் வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப் பட் டுள்ளது.

இவர்களுக்கான நிவாரண உதவிகள் தோட்ட நிர்வாகம் மற்றும் பிரதேசசெயலகத்தின் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தத் தோட்டத்தில் 18 ஆம் இலக்கக் குடியிருப்புத்தொகுதியின் பின்பகுதியில், மண் மேடுகள் மற்றும் கற்பாறைகள் சரிந்து விழக் கூடிய நிலை காணப்படுகின்றது என்றும், ஏற்கனவே பெரிய அளவிலான கற்பாறைகள் அப்பகுதியை நோக்கி வந்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்டவர்களில் 19 சிறுவர்களும், குழந்தைகளும் அடங்குகின்றனர். இவர்களுக்கு நிவாரண உதவிகள் பலராலும், வழங்கப்பட்டு வருகின்ற போதிலும், தங்கி இருக்கும் இடத்தில் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் வாழ்ந்து வருவதோடு சிறுவர்கள் மற்றும் குழந்தைகள் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

மேலும் அதிகமான பெண்கள் தங்கியிருப்பதால் தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாத அளவுக்கு பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அங்கலாய்க்கின்றனர். தங்களை தற்காலிகமாக இடம்பெயரச் செய்திருந்தாலும், அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வீடுகளை அமைத்துக் கொடுக்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-ஜ-4)

# டுபாயிலிருந்து கடத்தப்பட்ட 90,000 சிகரெட்டுகள் மீட்பு

டுபாயிலிருந்து சட்டவிரோதமாக நாட்டுக்குள் எடுத்து வரப்பட்ட 90 ஆயிரம் சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவற்றைக் எடுத்து வந்த குற்றச்சாட்டில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்றுக்காலை கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் சுங்க ஊடகப் பேச்சாளர் தர்மசேன கஹதவ குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 31 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்கள் மட்டக்களப்புப் பகுதி யைச் சேர்ந்தவர்களாவர்.

விமான நிலைய சுங்கப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை விமான நிலைய சுங்கப் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர். (ற-ஜ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண் சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் குடியமர முடியாது

## கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவுறுத்து

கொழும்பு, மே 27

மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள 10 மாவட்டங்களில், ஏற்கனவே குடியிருந்த 2 ஆயிரத்து 866 குடும்பங்களை குறித்த பகுதிகளில் எந்தக் காரணம் கொண்டும் மீள்குடியமர்த்த முடியாது என கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் ஆர்.எம். எஸ். பண்டார தெளிவுபடுத்தியுள்ளார். இது குறித்து அவர் குறிப்பிட்டுள்ளதாவது-

மண்சரிவு காரணமாக பல இழப்புகளுக்கு இலங்கை முகங்கொடுக்க நேர்ந்துள்ளது. குறிப்பாக கடந்த வருடம் மீரியபெத்தை மண்சரிவால் பலர் உயிரிழந்தனர். அதேபோன்று கடந்த 17 ஆம் திகதி அரநாயக்க பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவால் மூன்று கிராமங்கள் முழுமையாகப் புதையுண்டன.

இதுவரைக்கும் 30 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. பலர் காணாமற் போயுள்ளனர். புளத்கொஹுப்பிட்டியவிலும் மண்சரிவு ஏற்பட்டு 16 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. அத்துடன் கடுகண்ணாவ இலுக்வத்தை பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவால் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த ஆறு பேர் புதையுண்டு உயிரிழந்தனர்.

மேற்குறிப்பிட்ட மண்சரிவு இடர்கள் ஏற்பட்ட இடங்கள் அனைத்தும், ஏற்கனவே கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால் அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்ட பிரதேசங்களாகும்.

> **மண்சரிவு இடர்கள் ஏற்பட்ட இடங்கள் அனைத்தும், கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால் அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்ட பிரதேசங்களாகும். மக்கள் வெளியேற மறுத்த தன் விளைவே இவ்வாறான அனர்த்தங்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது.**

மக்கள் வெளியேற மறுத்ததன் விளைவே இவ்வாறான அனர்த்தங்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

இந்த நிலையில் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பத்து மாவட்டங்களில், இனிமேல் மக்களை மீள்குடிமர்த்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் கேகாலை மாவட்டத்தில் ஆயிரத்து 762 குடும்பங்களும், கண்டியில் 652 குடும்பங்களும், இரத்தினபுரியில் 230 குடும்பங்களும், நுவரேலியாவில் 114 குடும்பங்களும், மாத்தளையில் 42 குடும்பங்களும், குருநாகலையில் 31 குடும்பங்களும், காலியில் 15 குடும்பங்களும் , கொழும்பு மற்றும் கம்பகாவில் 15 குடும்பங்களும், தற்போதைக்கு எச்சிரிக்கை விடுக்கப்பட்டுள்ள பிரதேங்களிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

பதுளை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் மண் சரிவு அபாயம் ஏற்படும் 661 இடங்கள் கண்டறியப்பட்டு, இது தொடர்பிலான ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்று தெரிவித்துள்ளார். (ற-ஜ-4)

# சிறப்புரிமை மீறப்பட்டது என விமல் வீரவன்ச சபையில் சீற்றம்



கொழும்பு, மே 27

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் கடிதத்தை விமல் வீரவன்சவுக்கு வழங்குவதற்காக, அதன் உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றத்துக்குச் சென்றுள்ளார். இதற்கு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு, நாடாளுமன்றத்துக்கு வந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எவ்வாறு அழுத்தம் கொடுக்க முடியும்?. எனவே, இது பற்றி ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறும் விமல் வீரவன்ச வேண்டுகோள் விடுத்துள்ளார். (ற-ஜ-4)

# கிழக்கு முதலமைச்சரின் செயற்பாட்டால் முஸ்லிம் தலைவர்களுக்குத் தலைக்குனிவு

## விக்கிரமபாகு கருணாரத்ன கூறுகின்றார்

மட்டக்களப்பு, மே 27

கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட் கடற்படை அதிகாரியுடன் நடந்து கொண்ட விதமானது , ஒட்டுமொத்த முஸ்லிம் தலைவர்களுக்கும் தலைக் குனிவை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் அவர் முஹம்மது நபியின் போதனையையும் மதிக்கத் தவறியுள்ளார். -இவ்வாறு நவசமசமாஜக்கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படுவோம் என்ற இயக்கத்தால் நேற்றுக் கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கிழக்கு மாகாணத்தில் கடற்படையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட விழாவொன்றுக்கு அமெரிக்கத் தூதுவர் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டும், முதலமைச்சருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கவில்லை எனத் தெரி விக்கப்படுகின்றது.

மாகாணத்தில் இடம்பெறக் கூடிய விழாக்களுக்கு வெளிநாட்டுத் தூதுவர்கள் கலந்து கொள்வதென்றால் அந்த நிகழ்வுகளுக்கு மாகாணத்தின் முதலமைச்சருக்கும் அழைப்பு விடுப்பதுதான் முறையாகும்.

என்றாலும் முதலமைச்சர் அந்த நிகழ்வில், தான் ஏன் அவ்வாறு நடந்து கொண்டார் என்பது தொடர்பாக நிகழ்வில் தெரிவிக்கவும் இல்லை.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற விழா முதலமைச் சருக்கு தெரியாமல் ஆளுநர் ஏற்பாடு செய்திருந்தால் அது இன வாதச் செயலாகும். அவ்வாறான செயல்களுக்கும் இடமளிக்க முடியாது.

ஆனால் வெளிநாட்டு தூதுவர் ஒருவருக்கு முன்னால், கடற்படை அதிகாரியொருவரை முதலமைச்சர் மேடையில் கடிந்து கொண்டமையானது நாட்டின் கௌரவத்துக்குப் பாதிப்பாகும். அவ்வாறு முதலமைச்சருக்கு அநீதி ஏற்பட்டிருந்தால் அதனை முறையாக அணுகி பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொண்டிருக்கலாம் - என்று தெரிவித்துள்ளார். (ற-ஜ-4)

# கிழக்கு முதலமைச்சர் நஸீர் அஹமட் படைத் தளங்களுக்குள் செல்ல தடை!

கொழும்பு, மே 27

கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட்டுக்கு முப்படை தளங்களுக்குள் பிரவேசிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சம்பூர் மகாவித்தியாலயத்தில் கடந்த 20 ஆம் திகதி நடந்த ஆய்வுகூடத் திறப்பு விழாவில், சம்பூரில் உள்ள விதுர கடற்படைத் தளத்தின், கட்டளை அதிகாரியான கப்டன் ரஞ்சித் பிரேமரத்னவை, கிழக்கு மாகாண முதலமைச்சர் முட்டாள் என்று கடுமையாகத் திட்டியிருந்தார்.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற வேளையில், கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்ணாண்டோ மற்றும் அமெரிக்க தூதுவர் அடுல் கெசாப் ஆகியோர் பிரசன்னமா கியிருந்தனர்.

இந்த விவகாரம் தொடர்பாக, கடற்படை விசாரணை நடத்தி, அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளது. இந்த அறிக்கை பாதுகாப்புச் செயலரிடம்



கையளிக்கப்பட்டது.

இந்த அறிக்கையைத் தாம் ஆராய்ந்த பின்னர், ஜனாதிபதியின் ஆலோசனைக்காக உடனடியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று சிறிலங்கா பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெற்றியாராச்சி தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் இந்தச் சம்பவம் தொடர்பிலான அறிக்கை பாதுகாப்புச் செயலாளருக்கு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து கிழக்கு மாகாண முதலமைச்சருக்கு இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று கடற்படைப் பேச்சாளர் தெரிவித் துள்ளார். (ற-ஜ-4)

# அரநாயக்கவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேறிடத்தில் வீடுகள்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மே 27

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு, ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தித் தீர்மானத்தை எடுத்துள்ளோம். அதற்கமைவாக அரநாயக்கவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேறு இடத்தில் புதிய வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும்.

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் சபையில் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்ட மழை வெள்ளம், மண்சரிவு அனர்த்தம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சபை ஒத்தி வைப்புப் பிரேரணை மீதான விவாதத்தில், கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அனர்த்தத்தால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களையும், கவலையையும் தெரிவித்துக் கொள்கிறோம். நாடாளுமன்றத்தை நிர்மாணிக்கும் போது ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு தண்ணீர் தேங்கி நிற்பதற்காக ஒதுக்கப்பட்டது. ஆனால் இன்று அதில் 500 ஏக்கரே எஞ்சியுள்ளது. ஏனையவற்றில் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. மண் நிரப்பப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பாக நாம் கவனம் செலுத்த வேண்டும். புதிய திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். திட்டங்களும் தேவையாகவுள்ளது. 1975 ஆம் ஆண்டு தொடக்கம் மழை



வெள்ளம் தொடர்பில் எனக்கு அனுபவம் உள்ளது.

கடந்த காலங்களில் இடர் முகாமைத்துவம் தொடர்பில் பெரிய குறைபாடுகள் காணப்பட்டன. அந்தக் குறைபாடுகள் அனைத்தும் நீக்கப்பட வேண்டும். அதற்கான திட்டங்களை நாம் தயாரிக்க வேண்டும். அனர்த்தம் ஏற்பட்ட நாள் தொடக்கம் அனைத்து மத அமைப்புக்களும், பொது மக்களும் சுயேச்சை அமைப்புக்களும் எனப் பல தரப்புக்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்கின.

அதேபோன்று வெளிநாடுகளும் உதவின. எதிர்க்கட்சித் உறுப்பினர்களும் தம்மாலான அனைத்து உதவிகளையும் செய்தனர். இவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறோம். அதே வேளை முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா, மகிந்த ராஜபக்ச ஆகியோரும், உதவிக்குத் தமது ஆதரவை வழங்கினார்கள்.

நீண்ட காலத்துக்குப் பிறகு நாட்டில் இவ்வாறான பெரிய வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆரம்பக் கட்டமாக உணவு வழங்கப்பட்டது. பெரியளவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏனைய அடிப்படை வசதிகளை வழங்க வேண்டும். அதேபோன்று மக்களுக்கான வசிப்பிடங்களை நிர்மாணித்துக் கொடுக்க வேண்டும். இவையனைத்தையும் அரசு முன்னெடுக்கும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கும், ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தி தீர்மானத்தை எடுத்துள்ளோம்.

இந்த அனர்த்தத்தின் போது முப்படையினரும் பொலிஸாரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள், மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். இவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்றில்லாமல் அனைவரும் உதவிகளைச் செய்தனர்.- என்றார். (ற-ஜ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## காணாமற் போனோர் அலுவலகம் எதிர்பார்க்கும் பலனைத் தருமா...?

காணாமற்போன, அல்லது கண்டுபிடிக்க இயலாத நிலையில் உள்ளவர்களின் விவகாரத்தைக் கையாளும் பொருட்டு, காணாமற்போனோர் அலுவலகம் ஒன்றை, விசேடமாக அமைப்பதற்கு முடிவாகி உள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இது குறித்து முன்வைத்த யோசனைக்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி உள்ளது என்பது பிந்திய தகவல்.

இதேவேளை--

மேற்குறித்த கருத்து அரச தரப்பில் இருந்து முன்னரும் வெளிவந்தமை ஞாபகத்தில் உள்ளது.

பயங்கரவாதச் சட்டம் இனித் தேவை அற்றது. அனைத்துலக நாடுகள் ஏற்கும் சட்டம் விரைவில் எமது நாட்டில் கொண்டு வரப்படும் என்று வெளிவிவகார அமைச்சர், மங்கள சமரவீர அறிவித்திருந்தார்.

அத்தோடு அவர் தரிக்கவில்லை. பயங்கரவாதச் சட்டம் தேவைப்பட்ட யுகம் மறைந்து விட்டது. அனைத்து மக்களும், இந்த நாட்டில் சுதந்திரமாக வாழவல்ல சட்டமே தேவை; பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டு விடும். அதற்கான தேவை இனி இல்லை என்று அறுத்து உறுத்துக் கூறியிருந்தார்.

மேலும், கடந்த மகிந்த அரசுக்கு விரோதமானவர்கள், கேட்டுக் கேள்வி இன்றி, பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர் என்ற நிலையையும் அழுத்திக் கூறியிருந்ததும் ஞாபகத்தில் கொள்ளத்தக்கது.

அனைத்துலக நாடுகள் ஏற்றுக்கொள்ளத்தக்க சட்டம் ஒன்றைத் தாமதிக்காமல் நடைமுறைக்குக் கொண்டு வரப்போவதாகவும், அடித்துச் சொன்னது ஞாபகம். புதிய சட்டத்தைக் கொண்டு வருவதற்கான, வேலைத்திட்டம் ஜனாதிபதியின் சட்டத்தரணி றொமேஸ் டி சில்வா தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர், ஐயம் திரிபின்றி எடுத்துக் கூறி இருந்தார்.

அது விரைவில் செயல் வடிவம், பெறுவதே இப்போதைய உடனடித் தேவை. இந்த நாட்டுக்கு வெள்ளையர்களிடமிருந்து சுதந்திரம் கிடைத்த கையோடு, அனைத்து அரசியல் கட்சிகளும் இணைந்து--ஒருமித்து-- இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டிருக்க வேண்டும்; ஆனால், அதற்குப் பதிலாக இனவாதமும், ஒடுக்குமுறைகளுமே மேலெழுப்பப்பட்டன.

பிரித்தானியரிடம் இருந்து சுதந்திரம் பெற்ற கையோடு, இந்த நாட்டின் பூர்வீகக் குடிகளான தமிழ் மக்கள் கீழே தள்ளிவிடப்பட்டமை, இந்தத் தேசத்தின் சாபக்கேடாயிற்று!

சிறுபான்மையினரான ஈழத்தமிழ் மக்களை, புறந்தள்ளி ஓரங்கட்ட வேண்டும் என்று ஒக்ஸ்பேர்ட் (புகழ்) எஸ்.டபிள்யூ. ஆர். டி.பண்டாரநாயக்க போட்ட திட்டமே, இந்த நாட்டின் அனாதிக் குடிகள் கையறு நிலைக்குத் தள்ளப்பட்ட கேவலத்துக்கு அடிவேர்.

அந்த நிலையை மாற்றுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் வல்லமை உள்ளவர்களா என்பதற்குக் காலம் தான் பதில் சொல்ல நேரிடும்.

அதற்கு முன்னர் நல்லது நடக்கும் என்று எதிர்பார்க்க வல்ல ஆக்கபூர்வமான செயற்பாடுகள் மிக மிகக் குறைவாகவே தென்படுகின்றன...!

# பயனற்றுப் போய்விட்ட மகிந்தவின் சாணக்கியம்

சிங்களமூலம் – மவ்பிம
தமிழில் – வீ.எஸ்.ரீ.

மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியேற 2005 ஆம் ஆண்டு முதல், நீண்ட காலமாக மக்களது அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் எரிபொருள்கள் என்பவற்றில் விலைக்குறைப்பு எதனையும் மேற்கொண்டதில்லை. அதேசமயம் திடீர் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி அதில் வெற்றி பெற்ற பின்னர் மீண்டும் பொருள்களின் விலைகளைக் கூட்ட வேண்டியுள்ளதென்பதை அவர் உணர்ந்திருந்த அதேவேளை, தமது வெற்றி குறித்தும் கடும் நம்பிக்கையும் கொண்டிருந்தார்.

மொசம்பிக் நாட்டின் அரசுக்கு இன்று ஏற்பட்டுள்ள நிலை போன்றதொரு நிலையே, இலங்கை அரசுக்கும் ஏற்பட்டிருக்கும். மொசம்பிக் அரசும், மகிந்த அரசு போன்று இரகசிய கடன் என்ற வகையில் வேறு நாடுகள், நிறுவனங்களிடமிருந்து பெருந்தொகை நிதியைக் கடனாகப் பெற்றிருந்தது.

மொசம்பிக் நாட்டின் புதிய ஜனாதிபதியாக 2014 ஆம் ஆண்டில் தெரிவானவர் பிலிக் ஆவார். அவருக்கு முன்னர் இருதடவைகள் ஜனாதிபதியாகப் பதவிவகித்த அமந்துறோ, சுவிஸ் வங்கிகள், ரஷ்யாவின் வி.ரீ.பி வங்கி மற்றும் தமது பெயர்களை வெளிப்படுத்தாத நாடுகள் சிலவற்றிலிருந்தும் கடன் பெற்றிருந்தார். 2014 ஆம் ஆண்டில் புதிதாகப் பதவியேற்ற ஜனாதிபதி பிலிக், நாட்டின் கடன் நிலுவைகளைச் செலுத்தி முடிக்க சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி கோரிய வேளையில் கடும் இக்கட்டுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

உங்களது கடன் கோரிக்கை தொடர்பாக பரிசீலிப்பதானால், கடந்த இரு ஆண்டுகளில் முன்னைய ஜனாதிபதி அமந்துறோவினால் வெளிநாடுகள், நிறுவனங்களில் பெற்றுக்கொண்ட கடன் விவரங்களைச் சமர்ப்பியுங்கள் என சர்வதேச நாணய நிதியம் புதிய ஜனாதிபதி பிலிக்குக்கு நிபந்தனை விதித்தது.

அதேவேளை, முன்னாள் ஜனாதிபதி அமந்துறோ, தம்மால் வெளிநாடுகளில் பெற்றுக்கொண்ட கடன்களை ஊழல் மோசடிகள் மிக்க விதத்தில் செலவிட்டதாகவும் குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது.

"இது பயங்கரமானதோர் நிலை. முன்னாள் ஜனாதிபதியால் பெறப்பட்ட வெளிநாட்டு இரகசியக்கடன்களை இந்த அரசு, செலுத்த வேண்டுமானால் நாட்டின் அத்தியாவசியச் சேவைகளை குறைத்தாக வேண்டும். அரச சொத்துக்களை விற்க வேண்டி ஏற்படலாம்" என்று புதிய அரசின் நிதி அமைச்சர் நாட்டு மக்களுக்கு விளக்கமளித்தார். கனேடிய அரசு, மொசம்பிக் நாட்டுக்கு நிதியுதவி அளிப்பதை இடைநிறுத்துவதாக அறிவித்ததையடுத்தே அவ்விதம் தெரிவித்திருந்தார். வெளிநாடுகளுக்குச் செலுத்த வேண்டிய கடனைச் செலுத்த இயலாத நிலையில் மொசம்பிக் நாட்டு அரசு தற்போது தனது நாட்டின் சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்பதற்குத் தயாராகி வருகிறது.

உண்மையில் மகிந்த அரசும் தனது கடைசிக் காலத்தில் சீன அரசுடன் மேற்கொண்ட கொழும்பு துறைமுக நகர்த்திட்டத்தின் மூலம் வெளிநாடுகளுக்குச் செலுத்த வேண்டியிருந்த கடன்களைச் செலுத்தவும், புதிதாகக் கடன்களைப் பெறவும் குறித்த திட்டத்துக்காக கடலை நிரப்பி நிலமாக்கப்படும் பகுதியையும், சீனாவுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கவே முனைந்தது. அந்தவித உடன்பாடு கையெழுத்திடப் பட்டிருந்திருக்குமேயானால், குறித்த அந்த நிலப்பகுதி மற்றும் ஆகாயப்பிராந்தியத்துக்குள் பிரவேசிப்பதற்கு இலங்கை அரசு, குறித்த சீன நிறுவனத்தின் அனுமதியைப் பெற வேண்டியிருந்திருக்கும். ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த வெற்றி பெற்றிருந்திருப்பாரேயானால், பெற்றகடன்களை செலுத்தி முடிக்க நாட்டின் நிலத்தையும் ஆகாயப்பிராந்தியத்தையும் சீனா, சீசெல்ஸ், உகண்டா போன்ற நாடுகளுக்கு மகிந்த விற்பனை செய்ய இடமிருந்தது. அது மட்டுமன்றி, சுகாதாரம், கல்வி போன்ற



அத்தியாவசிய சேவைகளுக்கான செலவீனத்தை அரசு வெட்டிக் குறைக்க நேரிட்டிருக்கும். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அரசு ஒப்பந்தகாரர்களுக்குச் செலுத்த வேண்டியிருந்த கோடிக் கணக்கான ரூபா கொடுப்பனவுகள் குறிப்பாக இராணுவத்தினருக்கு உணவு விநியோகிக்கும் ஒப்பந்தகாரர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படாது நிலுவையில் இருந்தன. அதற்கான நிதியைத் தேடிக் கொள்ள மகிந்த அரசுக்கு இருந்த ஒரேயொரு மார்க்கம் அரச நிலத்தை வெளிநாடுகளுக்கோ, நிறுவனங்களுக்கோ விற்பனை செய்வதேயாகும். மகிந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றிருந்தால் சர்வதேச நாணய நிதியம் இலங்கை பக்கம் ஏறெடுத்தும் பார்க்க முன்வந்திருக்காது.

2012 ஆம் ஆண்டில் மகிந்த சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறுவதற்கு முயன்ற வேளையில், முதலில் நீங்கள் வெளிநாடுகளிடமிருந்து பெற்ற கடன்கள், அவற்றைத் திருப்பிச் செலுத்தும் நடைமுறை என்பவற்றைத் தெளிவுபடுத்துங்கள். அதன் பின்னரே உங்களது கோரிக்கை குறித்துப் பரிசீலிக்க முடியும் என பதிலளிக்கப்பட்டது. இதனால் மூக்குடைபட்ட மகிந்த அரசின் சார்பில், இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட்கப்ரால் "சீச்சீ இந் தப்பழம் புளிக்கு" மெனக் கூறிய நரிபோன்று சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிந்து கடன்பெற நாம் தயாரில்லை எனக் கூறியிருந்தார்.

ஒருவேளை அந்தத் தேர்தலில் மகிந்த வெற்றிபெற்றிருந்தால், நாட்டு மக்களுக்கு உசுப்பேத்தும் விதத்தில் கீழ்க்காணும் விதத்தில் கருத்து வெளியிட்டிருந்திருப்பார்.

"அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் எமக்கு கடன் வழங்குவதானால் போரில் பங்குகொண்ட இராணுவத்தினரை விசாரணை செய்து தண்டிக்க வேண்டுமென நிபந்தனை விதிக்கின்றன. அதற்கு நாம் தயாராக இல்லை. நாட்டையும் இராணுவத்தினரையும் பாதுகாக்க நாட்டு மக்கள் தியாகம் செய்ய முன்வரவேண்டும். இவ்விதம் பேசி மக்களது மனங்களைத் திசை திருப்பும் கலை மகிந்தவுக்கு கைவந்ததொன்றே.

மேற்குலக நாடுகளுக்கு அடிபணிந்து தலைகுனிந்து வாழ்வதைவிட, சீனா, உகண்டா போன்ற நாடுகளுடன் நேருக்கு நேர் நின்று கௌரவத்துடன் உதவிகள் பெறுவது மதிப்பு மிக்கதாகும். இவ்வாறு கூட மகிந்த சிங்கள மக்களது ஆதரவைப் பெறமுயன்றிருக்கக் கூடும். எமது தாய் நாட்டை எமது படைவீரர்கள் பாதுகாத்துத் தந்துள்ளனர். அவர்களுக்காக நாம் உதவத் தயாராயிருக்கிறோம். எமது நிலம் நீச்சுக்களை விற்பதற்கும் நாம் தயார்.

மேற்கண்டவாறு கூறி சிங்கள மக்களை மேன்மேலும் உணர்ச்சி வசப்படுத்த நாட்டுப் பற்றாளர் தரப்பும் தமது பங்குக்கு மகிந்தவுக்குக் கொடி பிடித்திருந்திருப்பர். மகிந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றிருந்தால் கடந்த 2015 ஆம் ஆண்டில் இடம்பெற்ற மேதின ஊர்வலத்தின் பிரதான கோசமாக,

"சீனி இல்லாமல் தேநீர் அருந்துவோம், மிளகாய் இல்லாமல் குழம்பு ஆக்குவோம், ராஜபக்சமார் ஆணை இடுவார்களானால், வைக்கோல் என்றாலும் அதை நாம் உண்ணத் தயார்" என்ற விதத்தில் அமைந்திருந்திருக்கும்.

என்ன செய்வது? நாட்டு மக்களின் தீர்ப்பு தலைகீழாகிப் போனதால் மகிந்தவின் சாணக்கியச் செயற்பாடுகள் சகலதும் வீணாகிப் போய் விட்டனவே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி அ.தி.மு.கவிடம் கடிவாளம் தி.மு.கவிடம்

கருத்துக் கணிப்புக்கள் அனைத்தையும் பொய்யாக்கி வித்தியாசமான ஒரு முடிவைத் தந்திருக்கின்றது தமிழக சட்டசபைத் தேர்தல். இரண்டு பிரதான திராவிடக் கட்சிகளையும் பின்தள்ளிவிட்டு மூன்றாவது அணி ஆட்சியைப் பிடிக்கும் என்று ஒரு கருத்துக் கணிப்புச் சொன்னது. தேர்தல் முடிந்து முடிவுகள் வெளிவருதற்கு முன் நடத்தப்பட்ட சில கருத்துக் கணிப்புக்கள் கருணாநிதி தலைமையிலான தி.மு.க. ஆட்சியைப் பிடிக்கும் என்றன.

தமிழக அரசியலைப் பொறுத்தவரை ஒரு கட்சி தொடர்ச்சியாக இரண்டு தடவைகள் ஆட்சி அமைத்த வரலாறு 30 வருடங்களாக இல்லை. அ.தி.மு.கவும் தி.மு.கவும் மாறி மாறியே ஆட்சி அமைத்து வந்தன. அதன் அடிப்படையிலும் இந்த முறை தி.மு.கவே ஆட்சி அமைக்கும் என எதிர் பார்க்கப்பட்டது.

ஆனால், அந்த ஊகங்கள் - கருத்துக் கணிப்புகள் எல்லாவற்றையும் பொய்யாக்கி 30 வருடங்களின் பின் ஒரு கட்சி தொடர்ச்சியாக இரண்டு தடவைகள் ஆட்சியைப் பிடித்த சாதனையை ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. இந்தத் தேர்தலில் நிலைநாட்டியுள்ளது.

அ.தி.மு.க. ஒருபுறம் அந்தச் சாதனையைப் படைத்தாலும் மறுபுறம் அது வீழ்ச்சியைச் சந்தித்திருப்பதைக் காணலாம். அதேபோல், தி.மு.க. தோல்வியைத் தழுவினாலும் அது கணிசமான அளவு முன்னேறி இருப்பதையும் காணலாம்.

இந்த இரண்டு கட்சிகளையும் அவற்றின் கூட்டணிக் கட்சிகளையும் தவிர, வேறு எந்தக் கட்சியும் ஓர் ஆசனத்தைக் கூடப் பெறாமை அதிசயமாகும். அதிலும், ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாகப் பார்க்கப்பட்ட விஜயகாந்த் கட்சியின் படுதோல்வியானது பரிதாபகரமானதும், ஆச்சரியம் அளிக்கக்கூடியதுமாகும்.

இந்தத் தேர்தல் ஆறு முனைத் தேர்தலாக அமைந்திருந்தது. அ.தி.மு.க., தி.மு.க., மக்கள் நலக் கூட்டணி, பா.ஜ.க., நாம் தமிழர் கட்சி மற்றும் பா,ம.க. ஆகிய கட்சிகள் கூட்டணி அமைத்தும் தனித்தனியாகவும் களமிறங்கின.

### தூக்கி வீசப்பட்டார் விஜயகாந்த்

இந்தத் தேர்தலில் ஆட்சியைத் தீர்மானிக்கும் கட்சியாக விஜயகாந்தின் தே.மு.தி.க. பார்க்கப்பட்டது. அவர் இணையும் கட்சி ஆட்சி அமைக்கும் என எதிர்வு கூறப்பட்டது. அ.தி.மு.கவை தவிர எல்லாக் கட்சிகளும் அவருடன் கூட்டணி அமைப்பதற்கு முயற்சி செய்தன; பேச்சுக்களில் ஈடுபட்டன. ஆனால், அவர் தனித்துப் போட்டியிடப் போவதாக அறிவித்து



பின்பு மக்கள் நலக் கூட்டணியுடன் இணைந்து கூட்டணி அமைத்துக் கொண்டார். இதனால் அந்தக் கூட்டணி ஆட்சியைப் பிடிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அந்தக் கூட்டணி ஓர் ஆசனத்தைக் கூடப் பெறாமல் மண் கவ்வியமைதான் பரிதாபத்திலும் பரிதாபம். தனது ஆசனத்தைக் கூட விஜயகாந்தால் காப்பாற்ற முடியாமல் போனது. 2011ஆம் ஆண்டு தேர்தலில் அ.தி.மு.கவுடன் இணைந்து போட்டியிட்டு வெற்றியீட்டிய பின் ஜெயலலிதாவுடன் முரண்பட்டுக் கூட்டணியில் இருந்து வெளியேறினார் விஜயகாந்த். அப்போது அவரது கட்சி 29 ஆசனங்களைக் கொண்டிருந்தது. 23 ஆசனங்களைக் கொண்டிருந்த தி.மு.கவை மூன்றாவது இடத்துக்குத் தள்ளி சட்டசபையில் பிரதான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தை விஜயகாந்தின் கட்சி பெற்றது.

இந்த அந்தஸ்துதான் அவரை ஒரு பெரிய - மக்கள் செல்வாக்குமிக்க அரசியல்வாதியாகக் காட்டியது. அவரிடம் கணிசமான வாக்குப் பலம் இருக்கின்றது என அனைவரும் நம்பினர். கருத்துக் கணிப்புகளும் அவ்வாறுதான் கூறின. ஆனால், அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டதால்தான் - ஜெயலலிதாவின் தயவால்தான் அவருக்கு ஆசனங்கள் கிடைத்தன என்ற உண்மை இப்போது தெரிய வந்துள்ளது.

அதுபோக, அவர் தேர்தல் மேடைகளில் உளறிய உளறல்கள் அவரை மக்கள் மத்தியில் ஒரு செல்லாக்காசாக மாற்றின. அவர் முதலைமைச்சர் பதவிக்குத் தகுதியற்றவர் என்பதை உணர்ந்த மக்கள் அவரைத் தோற்கடித்தனர். விஜயகாந்தின் உளறல்கள் தினமும் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### தலை நிமிர்ந்தது தி.மு.க.

அடுத்ததாக இந்தத் தேர்தலில் தி.மு.கவின் நிலைமையை எடுத்துப் பார்த்தால் அது கணிசமான அளவு முன்னேறி இருப்பதை அவதானிக்கலாம். 2011ஆம் ஆண்டு தேர்தலில் 23 ஆசனங்களை மாத்திரம் பெற்று பிரதான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தைக் கூட இழந்த தி.மு.க. இந்தத் தேர்தலில் 89 ஆசனங்களைப் பெற்று முன்னேறி இருக்கின்றது. தி.மு.க. கூட்டணிக்கு 98 ஆசனங்கள் கிடைத்தன. கடந்த காலங்களில் தி.மு.கவின் குடும்பச் சண்டை உச்சத்தில் இருந்தும்கூட, அடிமட்டத்தில் இருந்து கட்சியை மீளக் கட்டியெழுப்பும் பணியை தி.மு.க. செவ்வனே செய்து வந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அந்தச் செயற்பாடுகள் தி.மு.கவுக்கு நல்ல பயனை கொடுத்திருக்கின்றன.

### அ.தி.மு.கவின் சரிவுக்கு காரணம் என்ன?

இந்தத் தேர்தலில் வெற்றிபெற்று தொடர்ச்சியாக இரண்டு தடவைகள் ஆட்சியைப் பிடித்த பெருமையை அ.தி.மு.க. தட்டிச் சென்றபோதிலும் மறுபுறம், அந்தக் கட்சி கடும் வீழ்ச்சியையே சந்தித்துள்ளது. 2011ஆம் ஆண்டு தேர்தலில் அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணி 203 ஆசனங்களைப் பெற்று அபார வெற்றியீட்டியது. அவற்றுள் 150 ஆசனங்களை அ.தி.மு.க. தனதாக்கிக் கொண்டது. ஆனால், இந்த முறைத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி 134 ஆசனங்களை மாத்திரமே பெற்றது. அவற்றுள் 131 ஆசனங்கள் அ.தி.மு.கவுக்கு உரியது.

அதுபோக, இந்த முறை ஜெயலலிதா போட்டியிட்ட ஆர்.கே.நகர் தொகுதியில் அவர் 39,537 வாக்குகள் வித்தியாசத்தில்தான் வெற்றி பெற்றார். ஆனால், 2015இல் அந்தத் தொகுதியில் நடத்தப்பட்ட இடைத் தேர்தலில் அவர் ஒன்றரை லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அதனுடன் ஒப்பிடுகையில் ஜெயலலிதா இந்த முறை தேர்தலில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான வாக்குகளால் பின்தள்ளப் பட்டுள்ளார்.

அவரது கட்சியும் வீழ்ச்சியைச் சந்தித்து அவரும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ள நிலையில், வெறும் ஒரு சதவீத வாக்கு வித்தியாசத்தாலேயே தி.மு.கவை பின்தள்ளி அ. தி.மு.க. ஆட்சியைத் தக்க வைத்துள்ளது. அ.தி.மு.க. 40.8 வீத வாக்கையும் தி.மு. க. 39.8 வீத வாக்கையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அ.தி.மு.கவின் இந்த வீழ்ச்சிக்குக் காரணம் ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு விவகாரம் என்பதில் சந்தேகமில்லை. சொத்துக் குவிப்பு வழக்கில் இருந்து அவர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டபோதிலும், மக்கள் அவரை குற்றவாளியாகவே பார்க்கின்றனர் என்பது இந்தத் தேர்தலில் தெளிவாகத் தெரியவந்துள்ளது.

அதுபோக, இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளை வைத்து அவர் நடத்திய அரசியலும் எடுபடவில்லை. ராஜீவ் காந்தியின் கொலையாளிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும், தான் வெற்றி பெற்றால் தமிழீழத்தை உருவாக்குவேன் என்றும் ஜெயலலிதா கூறிய எவையும் எடுபடவில்லை என்பதும் இதில் இருந்து விளங்குகின்றது. இதனால், ஜெயலலிதா 19 ஆசனங்களை இழந்திருக்கின்றார். ■

# வடமாகாண ஆளுநரும் சுத்தமான குடிதண்ணீரும்

கொழும்பிலிருந்து சுத்தமான குடிதண்ணீரை எடுத்து வந்தே தாம் யாழ்ப்பாணத்திலும் பருகுவதாக கொழும்பில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில் வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே குறிப்பிட்டிருந்தார். ஆளுநர் தொடர்ந்தும் தூயநீரைப்பருகி தேக ஆரோக்கியத்துடன் எமது பிரதேசத்தில் பல்லாண்டுகள் பணியாற்ற வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

மேல் மாகாணத்தில் அரசியல்வாதியாகவும், வினைத்திறன் மிக்க நிர்வாகியாகவும் அளப்பெரிய சேவையாற்றி, தற்போது வடமாகாணத்தின் உயர் அரச அதிகாரியாக, ஆளுநராக தமிழ் பேசும் மக்களின் இதயங்களில் இடம்பிடித்துள்ளார். அன்னார் தமிழ்மக்களின் பழக்கவழக்கங்கள் பண்பாடுகள், கலை, கலாசாரம் என்பவற்றை நன்கறிந்த ஒருவராவார், அதனால்தான் சிங்களத் தமிழ் கலப்பு மணம் மூலம் இன ஒற்றுமையும் சமூக மேம்பாடும் ஏற்படும் என அவர் எண்ணியிருக்கலாம். எனினும் அது எந்தளவுக்கு நடைமுறைச் சாத்தியமாகும் என்பது கேள்விக்குரியதே. எப்படியிருப்பினும் அவர் முன்வைத்த கலப்பு மண ஆலோசனை ஆரோக்கியமானதே.


இறுதிப்போரில், 2009இல் தமது உறவுகளையும், சொத்துக்களையும் இழந்து ஏதிலிகளாக நொந்துபோய் இருந்த தமிழர் ஆளுநரின் உதவியையும் ஆதரவையும் பெரிதும் எதிர்பார்த்துள்ளனர். முதலமைச்சரும் வடமாகாண சபை உறுப்பினர்களும் தனிநாடு கேட்கவில்லை. ஒன்றிணைந்த நாட்டுக்குள் சமஷ்டி அமைப்பின் கீழ் இன ஒற்றுமையையும் சுயநிர்ணய உரிமையையுமே கேட்டார்கள். திரும்பவும் போரோ, உயிர் பறிப்போ வேண்டாம். நீதியான ஆட்சியே வேண்டும் என்பதையே முதலமைச்சர் வலியுறுத்தினார்.

கொழும்பில் இருந்து எடுத்து வரும் சுத்தமான குடி தண்ணீரையே தாம் யாழ்ப்பாணத்திலும் பருகுவதாக ஆளுநர் கூறியுள்ளார். யாழ். தண்ணீர் மாசடைந்தும் மலக்கழிவு கலந்தும் இருப்பதாலேயே கொழும்பில் இருந்து தண்ணீர் கொண்டு வருவதாகக் காரணம் காட்டியுள்ளார். மக்கள் மாசடைந்த தண்ணீரைக் குடிக்கும் போது ஆளுநர் மட்டும் தூய தண்ணீரை அருந்துவது முறையாகுமா? உயிர் வாழ்வதற்கு தண்ணீர் இன்றியமையாதது. தேகாரோக்கியத்துடன் வாழ்வதற்கு தூய தண்ணீர் பருகவேண்டும். மக்களுக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளை வழங்கி, அவர்களுக்கு ஆதாரமாக இருக்க வேண்டியது மன்னனது கடனாகும். எனவே, யாழ் குடாநாட்டு மக்களுக்கு நன்னீர் வழங்க வேண்டிய பெரிய பொறுப்பு ஆளுமை மிக்க ஆளுநருடையதாகும். உரிமைகள் பற்றியோ நாட்டைப் பிரிப்பது பற்றியோ, பேசுவதற்கு முன் சுத்தமான தண்ணீரை வழங்குவதுக்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பது ஆளுநரின் அவசியப் பணியாகும்.

எங்களுக்கும் கொழும்புத் தண்ணீர் வேண்டும் என நாங்கள் கேட்கவில்லை. இழுபறியில் இருக்கும் இரணைமடுக்குளத்து நீரை யாழ். குடாநாட்டுக்கும் வழங்குவதற்கு விரைவான நடவடிக்கை எடுத்து, மக்களின் தேகாரோக்கியத்தையும் பேணிப் பாதுகாப்பதுக்கு வழிவகை செய்வது ஆளுநரின் கடமைமட்டுமல்ல - புண்ணிய காரியமும் ஆகும். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே எனப் போற்றப்படுகின்றார்கள். அப்படியானால் குடி தண்ணீர் கொடுத்தோர் உண்டி கொடுத்தோரிலும் ஒரு படி மேலானவர்களல்லவா? செவிக்குணவில்லாதபோது, சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும் என்ற வள்ளுவனின் உயர் தத்துவத்தை வாழ்க்கையில் செயற்படுத்துவது மிகக் கடின காரியமே. ஆனால் நீரின்றி உலகமையாது என்பது முற்றிலும் உண்மையே. எனவே ஆளுநர் உண்டி கொடுக்காவிட்டாலும் அதனிலும் உயர்ந்த குடி தண்ணீரையாவது விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உங்களின் நன்முயற்சிகளை நன்றியுள்ள தமிழர்கள் என்றும் ஏற்றிப் போற்றுவர். வடபகுதியில் உங்கள் நாமம் என்றும் நிலைக்கும்.

மு.தர்மலிங்கம் ஜே.பி.
பருத்தித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தக்காளி நோய்த் தொற்று நெருக்கடியில் நைஜீரியா

அபுஜா, மே 27
நைஜீரியாவில் தக்காளிக்குக் கடும் தட்டுப்பாட்டு நிலை ஏற்பட்டுள்ளது. உள்ளூர்ச் சந்தையில் ஒரு தக்காளி 2 டொலர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. ஒரு கூடை தக்காளியை மொத்த விற்பனையாளர்கள் 212 டொலர்களுக்கு விற்பனை செய்கின்றனர் என விவசாயத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார். இதனால் தக்காளியில் உருவாக்கப்படும் நைஜீரியப் பாரம்பரிய உணவுகள் உச்ச விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. குறித்த ஒரு அந்துப் பூச்சியின் தாக்கத்தால் இந்தத் தட்டுப்பாட்டு நிலை ஏற்பட்டுள்ளது. விசேடமாகக் கடுனா மாநிலம் இந்தத் தாக்கத்தால் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலை மிகமோசமானது, அந்துப் பூச்சியின் தாக்கத்தால் தக்காளி உற்பத்தி பாதிப்படைந்ததுடன், தட்டுப்பாடும், பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது என அந்த மாநில அதிகாரி தெரிவித்தார். குறித்த மாநிலத்தில் இருந்தே ஒட்டு மொத்த நைஜீரியாவுக்கும் தக்காளி விநியோகிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தாக்கத்தால் மில்லியன்கள் டொலர் அளவுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது. நாட்டில் பலரது வாழ்வாதாரத் தொழிலாகத் தக்காளிப் பயிர்ச் செய்கை இடம்பெறுகின்றது. குறித்த தாக்கத்தால் அனைவரின் வருமானமும் பாதிக்கப்பட்டுள்ளது. மக்களின் பிரதான உணவுகளில் ஒன்று தக்காளி எனவும் மேலும் அவர் தெரிவித்தார்.

தக்காளியின் விலை மாற்றத்தாலும் வருமான நெருக்கடியாலும், பொருளாதார மந்தநிலை ஏற்பட்டுள்ளது. பிரதான உணவில் ஏற்பட்ட தட்டுப்பாட்டினால், மக்கள் மத்தியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. விற்பனை செய்யப்படும் தக்காளிகளின் தரம் குறித்து மக்கள் கவலை தெரிவித்தனர். இந்த நிலையில், உள்ளூர் உற்பத்திகள் கழிவாகக் கொட்டப்படும் சந்தர்ப்பமும் ஏற்பட்டுள்ளது. ஆபிரிக்காவில் தக்காளி உற்பத்தியில் நைஜீரியா இரண்டாவது இடத்தை வகிக்கிறது. 1.5 மில்லியன் தொன் தக்காளி அறுவடை செய் யப்பட்ட போதிலும், களஞ்சியப் படுத்தும் வசதியின்றி கொட்டப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஐ.நாவின் சுற்றுச்சூழல் அமைப்பு தக்காளி ஏற்றுமதிக்காக 1 பில்லியன் டொலர் செலவு செய்துள்ளது. இருப்பினும் 75 சதவீதமான உற்பத்தி கழிவாக வீசப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிலையில் ஏனைய மாநிலங்களில் தொடர்ந்து பயிரிடப்படும் தக்காளிகளில் நோய்த் தொற்று ஏற்படாமல் இருக்க மேலதிக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என அந்த அதிகாரி தெரிவித்தார். (த-ரி4)

# கென்ய இராணுவத் தாக்குதலில் 21 அல்-பாப் போராளிகள் சாவு



தெற்கு சோமாலியாவில் 21 அல்-பாப் படையினர் கென்ய இராணுவத்தின் தாக்குதலில் கொல்லப்பட்டனர் என நேற்று முன்தினம் கென்ய இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

தெற்கு சோமாலியப் பகுதியில் திடீர் தாக்குதலுக்கான சதி வேலைகளில் ஈடுபட்ட இவர்கள், அல்-பாப் அமைப்பைச் சார்ந்தவர்களாக இருக்கலாம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்தத் தாக்குதல் இடம்பெற்றது. ரப்டா எனும் பகுதிக்குச் செல்லும் வழியில் திடீர் தாக்குதலுக்கான இடத்தை ஆயத்தம் செய்து கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது என இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கென்ய இராணுவப்படையினர், ஆபிரிக்க ஒன்றியப் படையினர் இணைந்து அல்-பாப் போராளிக் குழுவுக்கு எதிராக தாக்குதல் நடத்தி வருகின்றனர். அல்-பாப் அமைப்பு, அல்-குவைதாவுடன் தொடர்புடையதாகும். அல்-பாப் அமைப்பு ரியா மதச் சட்டத்தைக் கடைப்பிடிப்பதுடன், உடல் உறுப்புக்களைத் துண்டாடும் தண்டனைகள், சாவுத் தண்டனைகள் என்பவற்றை வழங்கி வருகின்றது. சோமாலியாவில் பல பிரதேச நிலப்பரப்புக்களை இழந்த போராளிக் குழுவினர், தற்போது சோமாலியாவிலும், அயல் நாடுகளிலும் வன்முறைச் சம்பவங்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (த-ரி4)

# தமிழ் மொழியை அ…
# உலகத் தமிழ் மாநா…

## தமிழக அரசிடம் உயர் நீதிமன்ற நீதி…

சென்னை, மே 27
அடுத்த தலைமுறைக்குத் தமிழ் மொழியைக் கொண்டுசெல்லாமல் கோடிக்கணக்கில் பணம் செலவழித்து 'உலகத் தமிழ் மாநாடு' நடத்துவதால் என்ன பயன்? எனக் கேள்வி எழுப்பியுள்ள உயர்நீதிமன்ற நீதிபதிகள், தமிழ் மொழியை அஞ்சல் வழியில் உலகம் முழுவதும் பரப்பு வது தொடர்பாக 5 கட்டளைகளைப் பிறப்பித்துள்ளனர்.

மதுரையைச் சேர்ந்த ஆர்.லட்சுமி நாராயணன் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவொன்றில் கூறியிருப்பதாவது:-

தமிழ் செம்மொழி அந்தஸ்துப்பெற்று தன்னிகரில்லாத மொழியாக உள்ளது. ஆனால், தமிழ்நாட்டைத் தவிர வேறு மாநிலத்தில் தமிழ் தெரிவதில்லை. மத்திய மனித ஆற்றல் மேம்பாட்டு அமைச்சகம் ரூபா 50 மற்றும், ரூபா 200 கட்டணத்தில் இந்தி மொழியை இந்தியா முழுவதும் அஞ்சல் வழியில் போதித்து வருகின்றது. அதுபோலத் தமிழையும் சலுகைக் கட்டணத்தில் இந்தியாவில் மட்டுமின்றி உலகம் முழுவதும் உள்ளவர்கள் கற்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்குக் கோரிக்கை மனு அனுப்பினேன். இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம் 37.36 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு கோரியுள்ளதாகவும், இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தமிழ் வளர்ச்சித்துறைச் செயலர் மற்றும் இயக்குநர் தெரிவித்துள்ளார். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே தமிழை வளர்க்க, உலகம் முழுவதும் பரவச் செய்யத் தகுந்த உத்தரவு பிறப்பிக்க வேண்டும்- என அந்த மனுவில் கோரப்பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் வி.ராமசுப்பிரமணியன், என்.கிருபாகரன் ஆகியோர் அடங்கிய அமர்வு பிறப்பித்த உத்தரவு வருமாறு:-

செம்மொழி அந்தஸ்துப்பெற்ற தமிழ் மொழியை அடுத்த தலைமுறைக்குக் கொண்டுசெல்லாமல் கோடிக் கணக்கில் பணம் செலவழித்து உலகத் தமிழ் மாநாடுகளை நடத்தி என்ன பயன்?

முதல் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம், முதலாம் நூற்றாண்டில் தோன்றியது என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே தமிழ் பிராமி எழுத்துகள் புழக்கத்தில் இருந்தமைக்கு பல்வேறு ஆதாரங்கள் உள்ளன. 6 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 11 ஆயிரம் ஓலைச் சுவடிகள், தமிழ் தொன்மை வாய்ந்த செம்மொழி என்பதற்குக் கூடுதல் ஆவணங்கள். தமிழ்நாடு, புதுச்சேரி, அந்த மான், மலேசியா, சிங்கப்பூர், கனடா, பிஜி, மியான்மர், ஆபிரிக்கா, மாலைதீவுகள், அமெரிக்கா என தமிழ் பல்வேறு நாடுகளில் பரவியுள்ளது. ஆனால் தமிழ் மொழி பக்கத்து மாநிலங்களில் இருப்பவர்களுக்குக்கூடத் தெரியவி[illegible]லை. ஹரியானா உள்ளிட்ட [illegible] வட மாநிலங்களில் தமிழ்தான் இரண்டாவது அலுவல் மொழியாகக் கடந்த 2010 வரை இருந்துள்ளது. தமிழ் மொழியை உலகம் முழுவதும் பரவிக்கிடக்கும் தமிழர்களுக்கும் கொண்டுசேர்க்க வேண்டிய கடமையும், பொறுப்பும் அரசுக்கு உள்ளது.

எனவே தமிழ் மொழியின் வளர்ச்



# தொழிலாளர் வேலை நிறுத்தம்; பெரும் நெருக்கடியில் பிரான்ஸ்

## எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் நிலை

பாரிஸ், மே 27
பிரான்சில் அரசுக்கும் தொழிலாளர் வர்க்கத்தினருக்கும் இடையில் கடும்போக்கு ஏற்பட்டுள்ளது.

தொழிலாளர் சீர்திருத்தச் சட்டத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. நேற்று முன்தினம் 24 மணிநேரம் அணு உலையில் தொழிலாளர்களின் வேலைப் புறக்கணிப்பு இடம்பெற்றது. இதனையடுத்து மூலோபாய எரிபொருள் இருப்புக்களைப் பயன்படுத்தவேண்டிய கட்டாய சூழலுக்குப் பிரான்ஸ் தள்ளப்பட்டுள்ளது.

இவர்களுடன், மின்சாரம், மற்றும் ஏனைய எரிபொருள் உலைகளில் பணிபுரிவோரும் நேற்று வேலை நிறுத்தத்தில் இணைந்துள்ளனர். கடந்த வாரம் பிரான்ஸ் அரசு தொழிலாளருக்கு இயற்றிய சட்டதிட்டங்களை எதிர்த்து அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் எரிபொருள் விநியோகங்களையும் நிறுத்தியுள்ளனர்.

இதனால் பிரான்சில் 2 ஆயிரத்து 200 எரிபொருள் நிலையங்களில், 348 நிலையங்களில் இருப்பு அற்ற சூழல் நிலவுகின்றது. 3 மாதங்களுக்கு மட்டுமே மூலோபாய எரிபொருள் போதுமானதாக இருக்கும் என பிரான்சின் எண்ணெய் விநியோகத் தலைவர் தெரிவித்தார்.

பாரிஸில் உள்ள 40 சதவீதமான வாயு நிலையங்கள் எரிபொருள் இன்றி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். வாகன ஓட்டிகள் எரிபொருளின்றி அவதிப்பட்டு வருகின்றனர். அரசினால் தொழிலாளர்களுக்குச் சாதகமான உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் பட்சத்தில் வேலை நிறுத்தங்கள் முடிவுக்கு வரும் எனத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இதனால் பிரான்சில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்த சூழ்நிலை இஸ்லாமியப் போராட்டங்களுக்கு வழிவகுக்கும் என அஞ்சப்படுகின்றது. (த-ரி4)

# அகதி…

ரோம், மே.27
லிபியாவின் கட…
களை ஏற்றி வந்…
ளானது. கிட்டத்…
ஏற்றி[illegible]ந்த மீ…
குள்ளானதில் 5…
என இத்தாலிய…
துள்ளது.
படகு கவிழும் …
யப்பட்டுள்ளது.
கடலோரப் பாது…
களை காப்பாற்…



பிரிட்ட…
கப்பட்…
தகச் சே…
3 புத்த…

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுத்த தலைமுறைக்குப் பரப்பாமல் ாட்டை நடத்துவதால் என்ன பயன்?

## திபதிகள் கேள்வி

சிக்கும், அது சார்ந்த ஆராய்ச்சி களுக்கும் மத்திய, மாநில அரசுகள் மட்டுமின்றி ஒவ்வொரு தமிழரும் தங்களது பங்களிப்பைச் செய்ய வேண்டும்.

மாநில அரசு, தமிழ் மொழி வளர்ச்சிக்கு குறிப்பிட்ட நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். தமிழ் ஆராய்ச்சி மாணவர்களுக்கு ஊக்கத் தொகையுடன் சிறப்புச் சலுகைகள் வழங்க வேண்டும். தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளுக்கும், பிற இலக்கியங்களை தமிழிலும் மொழி பெயர்க்க நிதி ஒதுக்க வேண்டும். தமிழறிஞர்களை அங்கீகரித்து ஊக்குவிக்க வேண்டும். தமிழகம் மட்டுமன்றி பல்வேறு பல்கலைக் கழகங்களில் தமிழ் இருக்கைகளை ஏற்படுத்தவேண்டும்.

அத்துடன் தஞ்சை தமிழ் பல்கலைக் கழகம் அஞ்சல் வழியில் தமிழை சலுகைக் கட்டணத்தில் உலகம் முழுவதும் கொண்டு செல்ல கோரியுள்ள நிதி ஒதுக்கீட்டை உடனடியாகச் செய்து கொடுத்து, மனுதாரரின் கோரிக்கையை 12 வாரத்துக்குள் நடைமுறைப்படுத்த வேண்டும் என உத்தரவிட்டனர். (து)

> "தமிழ் மொழியை உலகம் முழுவதும் பரவிக் கிடக்கும் தமிழர்களுக்குக் கொண்டுசேர்க்க வேண்டிய கடமையும், பொறுப்பும் அரசுக்கு உள்ளது. எனவே தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், அது சார்ந்த ஆராய்ச்சிகளுக்கும் மத்திய, மாநில அரசுகள் மட்டுமின்றி ஒவ்வொரு தமிழரும் தங்களது பங்களிப்பைச் செய்ய வேண்டும்."



## திகள் வந்த படகு கவிழ்ந்து 5 பேர் சாவு

27

கடலோரப் பகுதியில் அகதி வந்த கப்பல் விபத்துக்குள் ட்டத்தட்ட 550 அகதிகளை மீ டிப் படகு விபத்துக் ல் 5 பேர் உயிரிழந்துள்ளனர் லியக் கடற்படை தெரிவித்


ம் சம்பவம் கமராவில் பதி து. உடனடியாக விரைந்த ாதுகாப்புக் குழுவினர் அகதி பாற்றினர். ஆனால் அகதிகள் குறித்த விவரங்கள் வெளியிடப்படவில்லை.

அளவுக்கு அதிகமான எண்ணிக்கையில் அகதிகளை ஏற்றிவந்தபடியால், கப்பல் பாதுகாப்பு அற்றிருந்தது என கடற் படையினர் தெரிவித்தனர்.

பல மோட்டர் படகுகள் மூலம் அகதிகள் மீட்கப்பட்டனர். கடந்த திங்கள் மற்றும் செவ்வாய் ஆகிய இரு தினங்களில் மட்டும் 5 ஆயிரத்து 600 அகதிகள் கரையை வந்தடைந்ததாக இத்தாலியக் கடற்படை தெரிவித்துள்ளது.

அதேவேளை, தொடர்ந்தும் போர்ச் சூழல் - மோசமான காலநிலை நிலவுமாக இருந்தால், கரையேறும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இத்தாலியில் கடந்த இரண்டு வருடங்களில், 3 லட்சத்து 20 ஆயிரம் படகுகள் வந்தடைந்துள்ளன என்றும், இவற்றில் பயணித்த 7 ஆயிரம் அகதிகள் உயிரிழந்துள்ளனர் என்றும் சர்வதேச அகதிகள் அமைப்பு தெரிவித்துள்ளது. (டு-ரி4)



ிட்டன் எழுத்தாளரான ஷேக்ஸ்பியரின் முதல் பதிப்பு நூல் 1.87 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்டுகளுக்கு ஏலம் எடுக் பட்டுள்ளது என ஏல நிறுவனம் தெரிவித்துள்ளது. 1623 ஆம் ஆண்டு பதிப்பான இந்த நூலை அமெரிக்கப் புத் ச் சேகரிப்பாளர் ஒருவர் கொள்வனவு செய்துள்ளார். 1632, 1664 மற்றும் 1685 ஆம் ஆண்டுகளில் அச்சிடப்பட்ட ுத்தகங்களையும் 2.48 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்டுகளுக்கு அவர் கொள்வனவு செய்துள்ளார். (டு-ரி4)

## காரைப் பின் தொடர்ந்து சென்ற ஆயிரக்கணக்கான தேனீக்கள்



லண்டன், மே 27

பிரிட்டனில் 24 மணிநேரத்துக்கும் அதிகமாக, 2 தினங்களாக ஆயிரக் கணக்கான தேனீக்கள் கார் ஒன்றைப் பின் தொடர்ந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கிட்டத்தட்ட 20 ஆயிரம் தேனீக்கள் குறித்த காரைப் பின்தொடர்ந்துள்ளன. கடந்த ஞாயிற்றுக்கிழமை 65 வயதான கரோல் என்ற மூதாட்டியின் காரில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கரோல் பொருள்கள் கொள்வனவுக்காகக் கடைக்கு முன்பாகக் காரை நிறுத்தியபோது இதனை அவதானித்தார். உடனடியாக தேனீ பிடிப்பவர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து தேனீக்களைப் பிடித்துச் சென்றனர்.

சங்கடம் தீர்ந்தது என எண் காரை வீட்டுக்குச் செலுத்தி கரோல். ஆனால் திங்கள் கா வாகனத்தைப் பார்த்து அதி யுற்றார். மீண்டும் ஆயிரக்க கான தேனீக்கள் காரின் பின் யைச் சூழ்ந்து கொண்டிருந் மீண் டும் தேனீ பிடிப்பவர்களு அழைப்பை ஏற்படுத்தி நிலை சரி செய்யப்பட்டது. காருக் ராணித் தேனீ அகப்பட்டிருக்க என்று தேடியபோது அவ் ஏதும் கிடைக்கவில்லை என் குறிப்பிடத்தக்கது. இரு தின ளாகத் தேனீகள் தொடர்ந்து னத்தைப் பின்தொடர்ந்தமை ரப்பை ஏற்படுத்தியுள்ளது.

(டு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# பிறப்பு முதல் இறப்பு வரை பிறந்த எண்ணின் பலன்கள்

## 1

**(பிறந்தஎண்ணின் பலன்கள் என்ற தொடரில் நேற்றைய உதயனில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி இது.)**

**நண்பர்கள்**

இவர்களுக்கு, 1, 2, 3, 4, 5, 9 ஆகிய திகதிகளில் பிறந்தவர்கள் தான் நல்ல கூட்டாளிகளாகவும், நண்பர்களாகவும் இருப்பார்கள். 2, 7 திகதிகளில் பிறந்தவர்களிடம்கவனமாகஇருக்கவேண்டும்.

**திருமணம்**

இவர்கள் 3, 5, 6 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களையும் மணந்து கொள்ளலாம். 4, 8 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களையும் மணந்து கொள்ளலாம். முதலாம் எண்காரர்களை (பெண்கள்) தவிர்க்க வேண்டும். காரணம் முதலாம் எண் சூரியன் (ஆண்) அடுத்தவருக்கும் இதே சூரியன்(பெண்) அதிபதியாக வரும் போது அங்கு கௌரவப் பிரச்சினைகளும் குடும்ப அன்னியோன்னியக் குறைவும் ஏற்படும்.

**திருமணத் திகதி**

1, 10, 19, 28 ஆகிய திகதிகளிலும் 6, 15, 24 திகதிகளிலும் கூட்டு எண் 1 அல்லது 6 வரும் திகதிகளிலும் திருமணம் செய்ய வேண்டும்.

(இவர்களுக்குத் தேன் மிகவும் சிறந்தது. அடிக்கடி உணவில் தேனைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். பொன்னாங்கண்ணிக் கீரையும் மிகவும் ஏற்றது. கீரையைத் தொடர்ந்து உணவில் சேர்த்து வர உடலில் பித்த நீர் ஓட்டம் சமப்படும். நோய்களின் கடுமை குறைந்து வரும். இயற்கை வைத்தியத்தில்தான் இவர்களது நாட்டம் செல்லும்.)

**நோய்களின் விவரங்கள்**

சூரியன் ஒரு நெருப்புக் கோளம். இதனால் இந்த எண்காரர்கள் பெரும்பாலும் வெப்பத்தால் பாதிக்கப்படுவார்கள். மலச்சிக்கல் அடிக்கடி உண்டாகும். பித்த நீர் ஓட்டம் மிகுந்து விடும். எனவே, குருதியோட்டம் சம்பந்தமான பலவித நோய்களும் குறைபாடும் உண்டாகும். கண் பார்வை குறைபாடுகளே பெரும்பாலும் இவர்களுக்கு ஏற்படும். பலருக்கு அடிக்கடி தலைவலியும் ஏற்படும். அடிக்கடி கண்ணாடிகளை மாற்றிக் கொள்வார்கள். இரத்தக் கொதிப்பு, ஜீரணக்கோளாறுகள், படபடப்பு ஆகியவையும் ஏற்படும். பித்த சம்பந்தமான நோய்களும் ஏற்படலாம்.

எனவே இவர்கள் பழவகைகளை அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். காரம், புளிச்சுவையையும், ஜீரணத்தை மந்தப்படுத்தும் உணவுகளையும் குறைத்துக் கொள்ள வேண்டும். திராட்சை வற்றல், குங்குமப்பூ, இஞ்சி ஆகியவற்றையும் அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். முன்பே சொன்னபடி தேனைத் தினந்தோறும் உண்டு வந்தால் மிக்க நலம்பெற்று வாழ முடியும்.

**வேண்டாத நாள்கள்**

8, 17, 26 ஆகிய திகதிகளும், கூட்டு எண் 8 வரும் நாள்களும் புதிய முயற்சிகளில் ஈடுபடக்கூடாது. தோல்வியே ஏற்படும்.

**தொழில்கள்**

இவர்கள் பொதுவாக நிர்வாக சக்தி நிரம்பியவர்கள். எப்போதும் அதிகாரமுள்ள பதவிகளை வகிப்பதற்கு ஏற்றவர்கள். தங்களுக்கு கீழே உள்ளவர்களை ஏவி, வேலை வாங்கும் சக்தி நிறைந்தவர்கள். உழைப்பில் பின் வாங்காதவர்கள். எதையும் அதற்குரிய சட்டப்படி செயற்படவே விரும்புவார்கள். அரச அலுவலகங்கள், தர்ம ஸ்தாபனங்கள், கூட்டுறவுக் கழகங்கள், பொது நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் போன்றவற்றில் நிர்வாகியாக அமைவார்கள். எண்ணின் பலம் குறைந்தவர்கள் நம்பிக்கையானவர்களாக இருப்பார்கள்.

தனியாக நிறுவனங்களை நடத்தும் திறமைமிக்கவர்கள். ஆனால், வளைந்து கொடுக்கவோ, அனுசரித்துப் போகவோ தெரியாதவர்கள். இலாப நோக்கை விட, மனித நேயமும், தொழில் நியாயமும், இவர்களது நோக்கமாக இருக்கும். போட்டிகளில் விட்டுக் கொடுக்கத் தயங்க மாட்டார்கள். இவர்களுக்கென ஒரு வசிய சக்தி உண்டு. இதுவே இவர்களைச் சிறந்த நிர்வாகியாகவும், முதலாளியாகவும் காட்டிவிடும். தொழிலில் ஏற்படும் சங்கடங்கள், போட்டிகளால் அடிக்கடி மனச்சோர்வு அடைந்தாலும், உடனே சமாளித்து விடுவார்கள். புகழ்பெற்ற மருத்துவர்கள், வியாபாரிகள் போன்ற தொழில்களும் ஒத்து வரும். விஞ்ஞானத்துறை, பொறியியல் துறை, இரசாயனத் துறை, நீதித்துறை போன்றவையும் இவர்களுக்கு ஒத்து வரும். வெங்காயம், புகையிலை, கொள்ளு, உளுந்து, கோதுமை, பழவகைகள், காய்கறி வகைகள், ஆபரணங்கள், செயற்கை நூலிழைகள், மூலிகைகள் சம்பந்தப்பட்ட வியாபாரங்கள், பிராணிகள் பராமரிப்பு, தங்கம் சம்பந்தப்பட்ட தொழில்களும் இவர்களுக்கு ஏற்ற தொழில்கள். இவர்கள் தங்களது வியாபார யுக்திகளையும், விளம்பர யுக்திகளையும் காலத்துக்கேற்ப படிமாற்றிக் கொண்டு செயற்பட்டால், தங்களது தொழிலில் பெரும் வெற்றிகளைக் குவிக்கலாம்.

(தொடரும்)

# ஈழம் தந்த முத்து ஆத்மஜோதி நா.முத்தையா

நா.நடேசன்

**1918** ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 25 ஆம் திகதி வடமாகாணத்தில் ஏழாலை கிழக்கில் நாகமணிக்கும்– பொன்னுப்பிள்ளை தம்பதியினருக்கும் நான்காவது குழந்தையாக இவர் பிறந்தார். பெற்றோர் முத்தையா எனப் பெயரிட்டனர். முத்தையா ஆசிரியராகி, அதிபராகி பலவிதமான சமூகத் தொண்டுகளில் ஈடுபட்டார். அதன் விளைவாக பெற்றோரிட்ட பெயர் அருகி, சமய சமூகப் பணிக்கு அவர் ஆரம்பித்த ஆத்மஜோதி என்ற பத்திரிகையின் திருநாமத்தை வைத்தே பொதுமக்கள் அழைத்தனர். அவரது வாழ்நாளின் முக்கால் பங்கு மத்தியமலை நாட்டில் உள்ள தமிழ் பேசும் மக்களின் மேம்பாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. அதன் காரணமாக நாகமணி முத்தையா என்பது நாவலப்பிட்டி முத்தையா என மருவியது. சுவாமி பித்துக்குளி முருகதாஸ் ஆத்மஜோதியைப் பற்றிக் குறிப்பிடும் வேளைகளில், ஈழம் தந்த முத்து எனக் குறிப்பிடுவார். சுத்தானந்த பாரதியார் அன்பு மணி என அழைப்பார். பல சமய சமூக ஸ்தாபனங்கள் அமுத சுரபி, ஆன்மிகத் தந்தை எனப்பல பட்டங்களைச் சூட்டி மகிழ்ந்தன. எனினும் அன்று தொட்டு இன்றுவரை ஆத்மஜோதி என்ற திருநாமமே நிலைத்திருக்கிறது. அந்தப் பெயரே என்றும் அன்னாருக்கு நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இதற்கெல்லாம் காரணம் அவருடைய பெற்றோரின் சொல்லை மீறாமை, குருபக்தி, இறைபக்தி என்பவையே. அத்துடன் நல்லாரிணக்கம், ஞானிகளின் தொடர்பு, நல்லறிஞர்களின் நூல்கள் என்பவையே. கற்பதுடன் நின்று விடவில்லை. கற்றபடி வாழ்ந்து காட்டினார். நாவலப்பிட்டியில் உள்ள இந்து வாலிபர் சங்கமும் இதற்குப் பேருதவி புரிந்தது. இந்தச் சங்கம் 1919 ஆம் ஆண்டு நாவலப்பிட்டி புகையிரத நிலையம், அஞ்சல் நிலையம், நகர காவல் நிலையம் போன்றவற்றில் கடமையாற்றிய யாழ்ப்பாணம் மட்டக்களப்புப் போன்ற பிரதேசத்து தமிழ் இளைஞர்களால் நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்கம் என்ற பெயரில் ஸ்தாபிக்கப்பட்டது. அந்தக் காலத்தில் அனேகமான அரச அலுவலகங்களிலும் தொண்ணூறு வீதமான தமிழர்களே கடமையாற்றினர். இன்று அந்த நிலையங்களில் ஒரு வீதமான தமிழரைக் காண்பதே அரிது. மலையகத்திலே முதன்முதலாக, ஸ்தாபிக்கப்பட்ட இந்தச் சங்கம் நாவலப்பிடி நகரைச் சுற்றி அமைந்ததேயிலை, இறப்பர்தோட்டங்களில் பணியாற்றிய இந்தியத் தமிழரின் சமயம், கல்வி, பண்பாடு என்பவற்றை வளர்த்தெடுத்தது. அதற்காக 1924 ஆம் ஆண்டு கதிரேசன் தமிழ் வித்தியாலயம் என்ற பெயரில் ஒரு பாடசாலையை ஆரம் பித்து வைத்தது. அத்துடன் அந்தப் பாட சாலை ஆசியர்களுக்கு இந்தச் சங்கத்தில் உள்ள உறுப்பினர்களே தங்கள் தொழில் மூலம் கிடைத்த ஊதியத்திலிருந்து ஒரு பகுதியை ஒன்று திரட்டி சம்பளமாகக் கொடுத்தனர். 1939 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 15 ஆம் திகதி நாவலப்பிட்டி சென்மேரிஸ் கல்லூரியில் தமிழ் ஆசிரியராக இவர் இணைந்துகொண்டார். கத்தோலிக்கப் பாடசாலையில் கல்வி புகட்டிய போதும் தனது பண்பாடு, சமயம், மொழி என்பவற்றைப் பேணிக் காத்தார். இதன் காரணமாக இந்து வாலிபர் சங்கம் தங்கள் சங்கத்தின் வளர்ச்சிக்கும், கதிரேசன் வித்தியாசாலையின் வளர்ச்சிக்கும் பொருத்தமானவராகக்கருதி அவரைக்கதிரேசன்கல்லூரிக்கு பணிமாற்றம் வரச் செய்தனர். 1948 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கதிரேசன் கல்லூரியில் ஆசிரியராக இணைந்து கொண்டார். 1948 முதல் 1981 வரை இந்து வாலிபர் சங்கத்தில் செயலாளராகவோ அன்றித் தலைவராகவோ, போசகராகவோ பணிபுரிந்தார். வசாவிளான் கல்லூரியின் அதிபராகவிருந்த தமது இறுதிக் காலத்தில், ஈழப்போரில் பாதிக்கப்பட்டோருக்கு கருணை உள்ளங்கள் என்ற அமைப்பின் மூலம் பெருந்தொண்டாற்றிய நடராசா ஆசிரியர் 1969 ஆம் ஆண்டு நாவலப்பிட்டியில் கடமையாற்றினார். அந்தக் காலத்தில் இந்து வாலிபர் சங்கத்தின் செயலாளராக நடராஜா கடமையாற்றினார். இந்து வாலிபர் சங்கத்தின் 50 ஆவது ஆண்டு விழா வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

**இன்று அன்னாரது 98 ஆவது ஜனனதினம்**

1948 ஆம் ஆண்டு முதல் 1981 வரை நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்கத்தின் பொற்காலம் எனலாம். இந்து வாலிபர் சங்கத்தின் மூலம் பாரத நாட்டில் உள்ள அறிஞர்கள், சமயப் பெரியோர் கள் போன்றவர்களை வரவழைத்து நாவல் நகரிலும் ஏனைய தோட்டப் புறங்களிலும் சமயம், மொழி போன்றவற்றில் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் ஆத்மஜோதி முத்தையா. அது மட்டுமல்ல இந்திய மக்களுக்கும் யாழ்ப்பாண மக்களுக்கும் உறவுப் பாலமாக அமைந்தார். நாவல் நகரின் இரு கண்களாக அமைந்துள்ளவை இரு இந்து ஆலயங்கள். முதலாவது ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம். ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயமாகும். இந்த ஆலயங்களில் வெள்ளிக்கிழமைகளிலும் விசேட தினங்களிலும் கூட்டுப் பிரார்த்தனையும் சமய சொற்பொழிவுகளும் இடம்பெற வழி வகுத்தவரும் இவரே. ஆத்மஜோதி பூத உடலை நீத்து இருபத்தொரு ஆண்டுகளாகின்றன. அவர் என்றும் எம்முடன் வாழ்வார்.

(கட்டுரையாளர்: முன்னாள் அதிபர், ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> விவசாயிக்குக் கிடைக்க வேண்டிய விவசாய உரங்கள் உரிய நேரத்தில் வழங்கப்படாது காலம் தாழ்த்தி வழங்கப்படுவதால் விவசாய அறுவடையின்போது எதிர்பார்த்த விளைவை பெறமுடியாதுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# உரம் மற்றும் களைநாசினி, கிருமிநாசினிகளால் விவசாயிகள் எதிர்கொள்ளும் அவல நிலை

தனம்

தற்போது தமது ஜீவனோபாயத்தொழிலாக விவசாயத்தொழிலை மேற்கொண்டுவரும் வேளைவிவசாயிகள் அனைத்து விவசாய இரசாயனங்களின் விலைகள் உயர்வடைந்த நிலையிலும் விடாமுயற்சியுடன் செயற்பட்டு வரும் விவசாயி, விவசாயத்துக்குரிய உள்ளீடுகளை உரிய காலத்தில் பெற முடியாமலும் பயனளிக்கக் கூடிய கிருமிநாசினி மற்றும் களை நாசினிகளை பெற முடியாமலும் திண்டாடி வருவதுடன் விவசாயத்தில் பெரும்நட்டத்தையும் அடைந்து வருகின்றனர். கமநலசேவை நிலையங்களால் மானிய உரங்கள் கால அட்டவணைக்குள் வழங்கப்படுவது இல்லை. இதனால் அடி உரத்தை எவரும் போடக் கிடைப்பதில்லை. அத்துடன் 21 நாள்களுக்குள் போட வேண்டிய யூரியாவும் கிடைப்பதில் காலதாமதமாகி உரிய நேரத்தில் இடப்பட வாய்ப்பு ஏற்படுவதில்லை. இதற்கு கமக்கார அமைப்பினர் அல்லது கமநலச் சேவை நிலையத்தின் மீது குற்றஞ்சுமத்த முடிவதில்லை. காரணம் உரமானது நேரடியாக சில நிலையங்களுக்கு கிடைப்பதில்லை. இன்னொரு இடத்திலிருந்து ஏற்றிவரப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது. இதனாலும் தாமதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. தற்போது மானிய உரத்துக்குப் பதிலாக பணம் வழங்கப்படுவதற்காக கமநலச் சேவை நிலையம் ஊடாக படிவங்கள் வழங்கப்பட்டுப் பூர்த்தி செய்யப்பட்டு, இதற்கென வங்கியில் புதிதாக கணக்கொன்றை ஆரம்பித்து கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்டு படிவம் ஒப்படைக்கப்பட்டது. சிறுபோக நெற்செய்கை மேற்கொண்டு ஒரு மாதத்துக்கு மேலாகியும் இதுவரையிலும் உரத்துக்கான பணம் வழங்கப்படாமமையால் உரம் இடாமலே செய்கை பண்ணப்படுவதால் நெற்பயிர்கள் பாதிப்புற்றுக் காணப்படுகின்றன. விவசாயிக்குக் கிடைக்க வேண்டிய விவசாய உரங்கள் உரிய நேரத்தில் வழங்கப்படாது காலம் தாழ்த்தி வழங்கப்படுவதால் அறுவடையின்போது விவசாய எதிர்பார்த்த விளைவைப் பெறமுடியாதுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இந்த நிலையை மேலதிகாரிகள் கண்டு கொள்வதில்லை. உரம் காலம் தாழ்த்தி வழங்கப்படும்போது அதற்கான பணமும் விரயமாகி விடுகிறது. இதனால்சிலர் அதனை இன்னொருவருக்கு விற்றுவிடுகின்றனர். இல்லையேல் எடுக்காது விடுகின்றனர். தற்போது வழங்கப்பட இருக்கும் மானிய உரத்துக்கான காசோலையும் அநாவசியமான செலவுக்கே பயன்படப் போகின்றது. இறுதியிலே விவசாயத்தில் நட்டமேற்பட்டு விவசாயி கடனாளியாகிறார். எனவே விவசாயிக்கு வழங்கப்படுகின்ற எந்த வகை உதவியாயினும் உரிய காலத்தில் வழங்கப்பட மேலதிகாரிகள் ஆவன செய்ய வேண்டும்.



**களைநாசினி, கிருமிநாசினி**

2012 ஆம் ஆண்டு முதல் இன்று வரை பலதரப்பட்ட நிறுவனங்களால் களைநாசினி, கிருமிநாசினி என்பவை முகவர்கள் மூலம் விற்பனைக்கு விடப்படுகின்றன. ஒவ்வொரு மருந்தும் சராசரியாக ஆயிரத்து ஐநூறில் இருந்து இரண்டாயிரம் ரூபா வரை விற்கப்படுகின்றது. விவசாயி, கடன்பெற்றோ அல்லது நகைகளை அடகு வைத்தோ அந்த மருந்தை வாங்கி விசிறினால் எந்தக்களையும் அழிவதில்லை. கோரை, நெற்சப்பி மொண்டி என்பவை மருந்து அடித்ததன் பின் உஷார் அடைந்தது போல் மிகவும் வீரியமாக வளர்கின்றன. ஒரு விவசாயி ஒவ்வொரு களைக்கும் ஒவ்வொரு மருந்தாக எடுக்கும் போது ஏறக்குறைய ஒரு ஏக்கருக்கு 5 ஆயிரம் ரூபா செலவாகின்றது. ஆனால், களைகள்கட்டுப்படுவதில்லை. இதனை நிறுவனக்காரர்களுக்கு எடுத்துக் கூறி ஒரு விவசாயியான சி.சிங்கராசா என்பவரது வயலில் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட நாசினியை – அவர்களின் அளவுப்படி விசிறப்பட்டதோடு, அவர்களாலேயே மருந்து கலந்து கொடுக்கப்பட்டது. ஆனால் அவையும் பயனளிக்கவில்லை. அவர்கள் 3 நாள்களால் வருவதாகக் கூறியும் வரவே இல்லை. இந்த முறை சிறுபோகச் செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயி களுக்கு புதிய மருந்து எனக் கூறப்பட்டுவிற்பனைசெய்யப்பட்ட மருந்தும் பயனளிக்கவில்லை. விவசாயியான சி.சிங்கராசா கொடுத்த மருந்துகளை விசிறி இறுதியில் பயிர்கள் யாவும் அழிவடைந்த நிலையில், அதனை மீண்டும் பண்படுத்தி விதைப்பை மேற் கொண்டுள்ளார். இதுவரையில் இவருக்கு ஒரு ஏக்கருக்கு செலவு நெல் தவிர்த்து. 12 ஆயிரம் ரூபா செல வாகியுள்ளது. எனவே விவசாயத்தை மேற்கொள்ளும் விவசாயி வர்த்த கர்கள் மீது சீற்றமடைந்து ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் களை மற்றும் கிருமிநாசினிகளை விசிறக் கூடாது என அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து நட்டம் அறவிடப்பட வேண்டும் எனவும் வர்த்தகர் மீது மிகவும் ஆத்திரமடைந்தது நிலையிலும் உள்ளனர்.

மூன்று நான்கு வருடங்களாக மருந்துகள் எவையும் பயனளிக்காத நிலையில், விவசாயிகள் நட்டமடைந்து வருகின்றனர். கிருமிநாசினிகளும் கூடப் பயனளிக்கவில்லை. எனவே இத்தகைய மருந்துகள் எவற்றையும் விற்பனை செய்யக்கூடாது. மீறினால் விற்பனையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் என விவசாயிகள் அச்சுறுத்தி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரலாற்றில் இன்றைய தினம்

1153 - நாலாம் மல்கம் ஸ்கொட்லாந்தின் அரசரானார்.
1199 - இங்கிலாந்தின் அரசராக ஜோன் முடி சூடினார்.
1813 - கனடாவில் அமெரிக்கப் படைகள் ஜோர்ஜ் கோட்டையைக் கைப்பற்றின.
1883 - ரஷ்யாவில் சார் மன்னனாக மூன்றாம் அலெக் ஸாண்டர் முடி சூடிக்கொண்டார்.
1896 - சென் லூயிஸ், மிஸோரியில் சூறாவளிதாக்கி 255 பேர்சாவு 2.9மில்லியன்டொலர்அளவுக்குசொத்தழிவு
1907 - புபோனிக் பிளேக் நோய் சான் பிரான்ஸிஸ்கோவில் பரவத் தொடங்கியது.
1930 - மனிதனால் ஆக்கப்பட்ட மிக உயர்ந்த கட்டட அமைப்பான 319 மீற்றர் உயரமுடைய கிறிஸ்லர் கட்டடம் நியூயோர்க்கில் மக்கள் பாவனைக்குத் திறந்து விடப்பட்டது.
1940 - இரண்டாம் உலக மகா யுத்தம். ஜேர்மன் படையிடம் சரணடைந்த றோயல் நோபோல்க் படைப் பிரிவைச் சேர்ந்த 99 பேர் சுடப்பட்டனர். 2 பேர் உயிர் தப்பினர்.
1941 - வட அத்திலாந்திக் சமுத்திரத்தில் ஜேர்மன் கடற்படைக் கப்பல் பிஸ்மார்க் மூழ்கடிக்கப்பட்டதில் அனேகமாக அதில் பயணித்த 2100 பேரும் சாவு.
1967 -ஆஸ்திரேலிய பழங்குடி மக்கள், சட்ட நன்மைகள் அனுபவிக்கவும் தேசிய கணக்கெடுப்பில் உட்பட வும் ஆன அரசியல் யாப்புக் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புக்குச் சார்பாக மக்கள் வாக்களித்தனர்.
2002 - போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவால் கடலிலும் கண்காணிப்புப் பணி எனத் தெரிவிப்பு. இதற்கான 12 பேர்கொண்ட குழு கடற்படையின் கப்பல்களி லிருந்து செயற்படும் எனவும் தெரிவிப்பு.
2002 - பூரண ஹர்த்தால் நடத்தியமைக்காக சவப்பெட்டி களைத் தயாராக வைத்திருக்குமாறு மட்டக்களப்பு வீரமுனைப் பகுதி மக்களுக்கு அதிரடிப்படை அச்சுறுத்தல்.
2006 - இந்தோனேஷியாவில் நிலநடுக்கம். 3ஆயிரம் பேர்வரை சாவு.
2006 - டோக்கியோ, ஒஸ்லோ உடன்படிக்கையின் படி சமா தானத்தை நகர்த்தினால் ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைக்கும் என அறிவிப்பு.
2006 - அரசின் மீது சில தடைகளை ஐரோப்பிய ஒன்றியம் விதிக்கும் என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் கிரியெல்ல தெரிவிப்பு.
2006 - இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களின் விவரத்தை வெளியிடுமாறு நாடாளுமன்றில், நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் கோரிக்கை.

# 'பச்சோந்தி'க் கல்

நகரில் கல்லால் ஆன வீதி ஒன்று இருந்தது. அதன் மேல் வேகமாகப் போன வண்டியின் சக்கரம் ஒன்று ஒரு கல்லைப் பெயர்த்து உருட்டி விட்டுப் போய் விட்டது. அந்தக் கல் தனக்குள் சொல்லிக் கொண்டது. என்னைப் போன்ற மற்றவர்களுடன் பிணைக்கப்பட்டிருந்த நான் இப்படி ஒரே இடத்தில் கிடப்பானேன்? நான் தனியாகவே வாழ்ந்து பார்க்கிறேன்!

தெருவோடு போன ஒரு பையன் அந்தக் கல்லைத் தன் கையில் எடுத்துக் கொண்டான். கல் தனக்குள் எண்ணிக் கொண்டது. நான் பிரயாணம் செய்ய விரும்பினேன். பிரயாணம் செய்கிறேன். தீவிரமாக எதையும் விரும்பினாலே போதும். விரும்பியபடி நடக்கும்!

கல்லை ஒரு வீட்டை நோக்கி எறிந்தான் பையன். ஹா! நான் பறக்க விரும்பினேன்; பறக்கிறேன். என் விருப்பம் போலத்தான் நடக்கிறது எல்லாம்.



ஒரு ஜன்னல் கண்ணாடியில் 'டண்' என்று கல் மோதி உடைத்துக் கொண்டு உள்ளே போனது, கண்ணாடி உடையும்போது அது சொல்லியது போக்கிரி, நான் போகும் வழியில் விலகிக் கொள்ளாமல் நிற்கிறாயே?! என்னை மறிப்பவர்களை எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. என் சௌகரியத்துக்காகத்தான் எல்லாம் இருக்கிறது. ஆகவே இனி மேல் கவனமாக இரு!

வீட்டின் அறைக்குள் இருந்த ஒரு மெத்தையின் மேல் விழுந்தது கல். இவ்வளவு நேரம் பிரயாணம் செய்ததில் அலுப்பாகி விட்டது. சற்று ஓய்வு தேவை என்று நினைத்த பட்சத்திலேயே படுக்கை கிடைத்து விட்டதே. ஆஹா! என்று நினைத்துக் கொண்டது.

ஒரு வேலைக்காரன் அங்கே வந்தான். படுக்கையில் இருந்த கல்லைத் தூக்கி ஜன்னல் வழியே திரும்பவும் தெருவில் எறிந்து விட்டான்.

அப்போது கல் தன்னுடன் பதிந்திருந்த ஏனைய கற்களிடம் சகோதரர்களே! சௌக்கியமா? நான் இப்போது பெரிய மனிதர்களைப் பார்க்க அவர்களின் மாளிகைக்குப் போய் விட்டுத் திரும்புகிறேன். பெரிய மனிதர்களையும் பணக்காரர்களையும் எனக்குப் பிடிப்பதில்லை. என்னைப் போன்ற சாதாரண மக்களிடம்தான் எனக்கு உண்மையில் ரொம்பப் பிரியமும் மரியாதையும் இருக்கிறது. அதனால்தான் திரும்பி விட்டேன் என்றது.

சொல்லிக் கொண்டிருக்கும் போதே சரக்கு ஏற்றி வந்த ஒரு வண்டியின் சக்கரம் தனியாகக் கிடந்த கல்லின் மேல் ஏறியது. அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா! என்று சொல்லிக் கொண்டே துண்டு துண்டாகச் சிதறிப் போனது அந்தப் பச்சோந்திக் கல்.

# சாதனை படையுங்கள்



பள்ளி செல்லும் பறவைகளே! - உங்கள்
பாடத்தில் கவனம் வையுங்களே!
துள்ளித் திரியும் பருவத்திலே - நல்ல
தொண்டுகள் செய்து பழகுங்களே!

அண்ணன் தம்பிகள் நாமென்று - உலகை
அன்பால் வென்றிட முயலுங்களே!
திண்ணைப் பேச்சு வீரர்களே - மிகத்
தெளிவாய்ப் புரிந்து கொள்ளுங்களே


வன்முறைச் சேற்றில் இறங்காமல் -புது
வரலாறு எழுத முயலுங்களே!
நன்முறை காந்தி பாதையில் - நம்
நாட்டைக் காத்திட விரையுங்களே!

சாதிகள் பெயரை நீக்கி அதில் - உயர்
சமத்துவ புரங்கள் அமையுங்களே!
நீதியைப் போற்றி நேர்மையுடன் - நீங்கள்
நித்தமும் சாதனை படையுங்களே

உதயன் சிறுவர் பகுதியில் 'வர்ணம் தீட்டுவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாகமூட்டும் வகையில் கச்சிதமான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் வெள்ளிக்கிழமைகளில் இந்தப் பகுதியில் வெளியிடப்படும்.



சு.நிலானி, தரம் 4.
யா/ஏழாலை சைவ சன்மார்க்க வித்தி.



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இடித்துரைப்பதற்கு இதுவே சந்தர்ப்பம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு வாக்களித்தபடி அரசு காணாமற்போனோர் குறித்த அலுவலகத்தை அமைக்கும் பணியை தீவிரமாக்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன

இந்த விடயம் குறித்து அரசு சிவில் அமைப்புகளுடன் கலந்தாலோசனைகளை மேற்கொண்டுள்ளது.

அந்தக் கலந்துரையாடல்களின் பின்னர் வெளியாகிக் கொண்டிருக்கும் கரிசனைகளின் மூலமே காணாமற்போனோர் குறித்த விவகாரங்களைக் கையாள்வதற்கான அலுவலகத்தை அமைக்கும் பணிகள் சூடு பிடித்துள்ளதை அறியமுடிகின்றது.

தமிழ் அமைப்புகள் வெளிவிவகார அமைச்சருக்குக் கடிதமொன்றின் மூலம் இந்த விடயம் கையாளப்படும் விதம் குறித்த தமது கரிசனத்தை வெளிப்படுத்தியிருப்பது போன்று, இலங்கையைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர்களும், சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் சில வாரங்களுக்கு முன்னர் ஜனாதிபதிக்குக் கடிதமொன்றை எழுதியிருந்தனர்.

இந்தக் கடிதங்களில் காணப்படும் முக்கிய ஆதங்கம், பாதிக்கப்பட்ட மக்களிடம் கலந்தா லோசனைகளை மேற்கொள்ளாமை குறித்தது.

இலங்கையில் நிலைமாற்றுக்கால நீதிப் பொறிமுறைகள் அமைக்கப்படவேண்டும் என்ற வேண்டுகோள்களுக்குக் காரணம், பாதிக்கப்பட்ட மக்கள் என்பது முக்கியமானது. அவர்கள் மீதான கரிசனை, அவர்களுக்கு நீதி வழங்கப்படவேண்டும், அவர்களின் மனக்காயங்கள் ஆற்றப்படவேண்டும் என்ற பெரும் அவாவே நீதிப் பொறிமுறைகள் குறித்த எண்ணங்கள் உதிப்பதற்கான முக்கிய காரணம். சர்வதேச அனுபவங்களும் அவ்வாறானதாகவே காணப்படுகின்றன.

கடந்த காலங்களில் நிகழ்ந்தவற்றை ஏற்றுக்கொண்டு அங்கீகரிப்பது நல்லிணக்கத்துக்கு மிகவும் அவசியமான விடயம். அவ்வாறு செய்யத் தவறினால் அது எதிர்மறையான சூழலை உருவாக்கும் என்பது ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளர் ஒருவரின் கருத்து.

எனினும், இலங்கை அரசு இந்தத் திசையில் பயணிக்கவில்லை என்பதே அரசுடன் பேச்சுகளை மேற்கொண்டவர்களின் கருத்தாகக் காணப்படுகின்றது.

காணாமற்போனவர்கள் குறித்த விவகாரத்தைக் கையாளும் அலுவலகத்தை ஏற்படுத்தும் பொறுப்பை எடுத்துக் கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சு அக்கறையில்லாத ஒரு வகைக் கலந்தாலோசனைகளை முன்னெடுக்கின்றது என்பது அவர்கள் வாதம்.


இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களைப் புறந்தள்ளி, முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் பலவித சந்தேகங்களை ஏற்படுத்தக்கூடியவை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகத்தின் அடுத்த அமர்வுக்கு முன்னதாக சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்துவதற்காக அரசு இந்த அலுவலகத்தை ஏற்படுத்தும் பணியை தீவிரப்படுத்துகின்றதா என்பது முக்கியமான ஐயம்.

முழுமையான அக்கறையுடனும், இதய சுத்தியுடனும் கையாளப்படவேண்டிய ஒரு விவகாரத்தை அரசு தனது நலன்களை அடிப்படையாக வைத்து முன்னெடுப்பது மேலும் நம்பிக்கையீனங்களை உருவாக்கலாம்.

இறுதி நோக்கம் எதுவோ அதற்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம். தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தரப்பினர் நல்லாட்சி அரசுக்கு இடித்துரைக்கவேண்டிய விடயம் இது.



## திருஞானசம்பந்தராகத் தோன்றிய

# முருகக் கடவுள்

காரை எம்.பி. அருளானந்தன்

முருகக் கடவுளே திருஞான சம்பந்தராகத் தோன்றியதாகச் சமயச் சான்றோர் கூறுவர். அத்தகைய திருஞான சம்பந்தருக்கு மூன்றாம் ஆண்டு நடந்து கொண்டிருந்தது. சிவபாதவிருதயர் ஒரு நாள் காலை சம் பந்தரை அழைத்துக் கொண்டு சீர் காழியில் உள்ள தோணியப்பர் கோயில் குளத்துக்கு நீராடச் சென்றார்.

சிவபாதவிருதயர் தம் மைந்தரைக் குளக்கரையில் உட்கார வைத்து விட்டுக் குளத்துள் இறங்கி நீராடினார். அப்பொழுது திருஞானசம்பந்தர் அச்சமுற்று அழத் தொடங்கினார்.

**அம்மையும் அப்பனும் வருகை தந்தனர்**

குளத்துள் மூழ்கி நீராடிக்கொண்டிருந்த தந்தையாருக்கு மைந்தனின் அழுகை கேட்கவில்லை. ஆனால் அவ்வழுகை உலக உயிர்களுக்கு எல்லாம் தந்தையாக விளங்கும் இறைவனது திருச் செவிக்கு எட்டியது. உடனே சிவபெருமான் உமைஅம்மையாருடன் குளக் கரைக்கு வந்தார். அழும் குழந்தையை அம்மையார் தம் மலர்க் கைகளால் எடுத்து அணைத்துக் கண்ணீரைத் துடைத்தார். ஆறுதல் கூறினார்.

**ஞானப்பால் உண்டார் சம்பந்தர்**

பிறகு அம்மையார், சிவபொருமான் ஆணைப்படி தமது திருமுலைப் பாலைப் பொற் கிண்ணத்தில் கறந்து சிவ ஞானத்தைக் கலந்து குழந்தைக்கு ஊட்டினார். இங்ஙனம் சிவஞானப் பால் உண்ட காரணத்தால் திருஞான சம்பந்தர் எனவும், சிவபெருமானால் நேரில் வந்து ஆட்கொள்ளப்பட்டதால் ஆளுடைய பிள்ளையார் எனவும் பின்னாளில் பெயர்கள் வரலாயின.

நீராடி முடித்துக் குளத்திலிருந்து கரை ஏறிய சிவபாதவிருதயர் தம்மைந்தர் பொற் கிண்ணத்தில் பால் குடிப்பதைக் கண்டார். உடனே சிறு கம்பைக் கையில் எடுத்துக்கொண்டு, உனக்கு இப் பாலைத் தந்தது யார் என்று அதட்டிக் கேட்டார். அப்பொழுது திருஞான சம்பந்தர் ஆகாயத்தை நோக்கினார். காளை வாகனத்தில் சிவபெருமான் உமாதேவியாருடன் காட்சி கொடுத்தார். உடனே திருஞானசம்பந்தர் தம் கைவிரலால் அறியாத இறைவனை சுட்டிக் காட்டிப் பின்வருமாறு பாடத் தொடங்கினார்.

**தோடுடைய செவியன் விடை**
**யேறியோன்**
**தூவெண் மதி சூடிக்**
**காடுடைய சுடலைப் பொடி பூசி என்**
**உள்ளம் கவர் கள்வன்**
**ஏடுடைய மலரான் முனை நாட்பணிந்து**
**ஏத்த அருள் செய்த**
**பீடுடைய பிரமபுரம் மேவிய பெம்மான்**
**இவன் அன்றே**

ஞானப் பால் குடித்த காரணத்தால் தந்தையார் வினாவுக்கு மைந்தர் தேவாரப் பாவடிவில் விடை கூறினார். இப்பாடலே சம்பந்தரால் மூன்று ஆண்டிலே முதல் முதலில் பாடிய பதிகமாகும். திருஞானசம்பந்தர் சிவபெருமான் மீது பாடிய பதிகங்கள் ஒவ்வொன்றும் ப[illegible]னொரு பாடல்களைக் கொண்ட[illegible] யாகும். இவர் பாடிய தேவாரப் பாட[illegible]கள் முதல் மூன்று திருமுறைகளாக[illegible] தொகுக்கப்பெற்றுள்ளன.

சைவசமயத்தின் முதற்காவலராக தி[illegible] முறையை தந்த வேந்தராக விள[illegible]கினார். மேன்மை கொள் சைவ நீ[illegible] என்ற சைவசமய மகுடவாசகத்து[illegible]கமைய அளப்பரிய சைவசமய[illegible] பணிகளை மேற்கொண்டார். இவருட[illegible] திருநாவுக்கரசரும் இணைந்து ம[illegible]களுக்காக மக்கள் வாழ்வின் ம[illegible] மலர்ச்சி காண உழைத்த உத்த[illegible]கள் இவர்கள். இத்தகு திருஞா[illegible] சம்பந்தரின் குருபூசை வைகா[illegible]மாத மூல நட்சத்திரத்தில் கொ[illegible]டாடப்படுகின்றது. நாமும் நலமுட[illegible] வாழ சம்பந்தர் ஓதிய திருமு[illegible]களை ஓதிப் பயன்பெறுவோமாக.

உலக உயிர்களுக்கு எல்லாம் தந்தையாக விளங்கும் இறைவர் திருச் செவிக்கு எட்டியது. உடனே சிவபெருமான் உமைஅம்மையாருடன் குளக் கரைக்கு வந்தார். அழும் குழந் தையை அம்மையார் தம் மலர்க் கைகளால் எடுத்து அணைத்துக் கண்ணீரைத்துடைத்தார் ஆறுதல் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். உறவினர்களால் உதவி உண்டு. பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**இடபம்:** உறவினரிடம் விரக்தியுடன் பேசவேண்டாம். தொழில், வியாபாரத்தில் மட்டான மூலதனம் போதும். இலாபம் சுமார். உடல்நலனில் அக்கறை தேவை. நிலுவைப் பணம் பெற்றுக் கொள்வதில் இதமான அணுகுமுறை தேவை.

**மிதுனம்:** வீண் பேச்சில் இருந்து விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறைச் சரி செய்வீர்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**கடகம்:** முக்கியமான செயல் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும். தாராள அளவில் பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு இடம்பெறும்.

**சிங்கம்:** எதிர்கால வாழ்வில் நம்பிக்கை கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழிப்பால், வருமானம் உயரும். புதிய சொத்து வாங்க முயல்வீர்கள். உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும்.

**கன்னி:** இனிய நிகழ்வால் மனதில் ஊக்கம் பிறக்கும். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் பெற விடாமுயற்சியும், உழைப்பும் தேவை. தாய்வழி உறவினர்களிடம் கேட்ட உதவி கிடைக்கும்.

**துலாம்:** நம்பகத்தன்மை இல்லாதவரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை பெற முயற்சிப்பர். மாணவர்கள் கல்வியில் ஆர்வத்துடன் ஈடுபடுவர்.

**விருச்சிகம்:** மனதில் புத்துணர்வு மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் விற்பனை அதிகரிப்பால் இலாபம் உயரும். வெகுநாள் காணாமற் தேடிய பொருள் கிடைக்கும். நண்பருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள்.

**தனுசு:** சோம்பலைத் தவிர்ப்பது நன்மையளிக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சராசரி அளவில் இருக்கும். உடல் நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும். பெண்கள், தாய் வீட்டாரிடம் உதவி கேட்டுப் பெறுவர்.

**மகரம்:** பெற்றோரின் சொல்லுக்கு மதிப்பளிப்பீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். ஆதாயம் பன்மடங்கு உயரும். பெண்கள் புத்தாடை, நகை வாங்க யோகம் உண்டு.

**கும்பம்:** முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் விடா முயற்சி தேவைப்படும். இலாபம் மிதமாக இருக்கும். உடல்நலனில் கவனம் செலுத்துவீர்கள்.

**மீனம்:** எதிரியின் தொல்லை சுவடு தெரியாமல் மறையும். தொழில், வியாபாரம் வளர்ச்சிக்காக அதிகம் பாடுபடுவீர்கள். இலாபம் படிப்படியாக உயரும். பெண்கள் தர்ம சிந்தனையுடன் செயற்படுவர்.




## அடுத்த கட்டத்துக்கு நகரும் லிங்குசாமி

"அஞ்சான்" வெளிவந்து கிட்டத்தட்ட 2 வருடங்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால், தனது அடுத்த படத்தைத் தொடங்குவதில் ரொம்பவே கவனமாக இருக்கிறார் இயக்குநர் லிங்குசாமி. விஷாலை வைத்து "சண்டைக்கோழி" படத்தின் 2 ஆம் பாகத்தை எடுக்க முதலில் திட்டமிட்டிருந்தார். சிற்சில காரணங்களால் அந்தப் படம் கைவிடப்பட்டது. அதன் பிறகு அல்லு அர்ஜுன் படத்தை லிங்குசாமி இயக்கவிருக்கிறார் என்ற செய்தி கிட்டத்தட்ட நான்கைந்து மாதங்களுக்கு முன்பே வெளிவந்து விட்டது.

அல்லு அர்ஜுன் படத்துக்கான ஸ்கிரிப்ட் உருவாக்கும் பணிகளில் அவசரமாக இருந்த லிங்குசாமி தற்போது அந்த வேலைகள் அனைத்தையும் முடித்து விட்டாராம். இதனால், ஜுன் மாதத்தில் படப்பிடிப்பு தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அல்லு அர்ஜுன் நடிப்பில் வெளியாகியிருக்கும் "சராய்நோடு" தெலுங்குப் படம் தற்போது திரையரங்குகளில் ஓடிக் கொண்டிருக்கிறது. இந்தப் படத்துக்குப் பிறகு "24" இயக்குநர் விக்ரம் குமார் இயக்கத்திலும் ஒரு படத்தில் நடிக்கவிருக்கிறார் அல்லு அர்ஜுன்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 8 | | 2 | | | |
| | 2 | 1 | | 9 | | | 3 | |
| 9 | 4 | | | | 7 | | | 5 |
| 1 | | | | 8 | | | 7 | |
| | | 6 | | 7 | | | 5 | |
| | 5 | | | 6 | | | | 1 |
| 4 | | | 7 | | 8 | | 9 | 3 |
| | 7 | | | 4 | | 5 | 8 | |
| | | | 3 | | 6 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 1 | 8 | 9 | 3 | 7 | 2 | 4 |
| 4 | 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 9 | 1 |
| 3 | 7 | 9 | 2 | 4 | 1 | 8 | 5 | 6 |
| 2 | 8 | 3 | 1 | 7 | 6 | 5 | 4 | 9 |
| 1 | 4 | 6 | 9 | 5 | 8 | 2 | 3 | 7 |
| 5 | 9 | 7 | 3 | 2 | 4 | 6 | 1 | 8 |
| 7 | 6 | 5 | 4 | 3 | 9 | 1 | 8 | 2 |
| 9 | 1 | 2 | 5 | 8 | 7 | 4 | 6 | 3 |
| 8 | 3 | 4 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தைஏற்படுத்தவேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.

2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

இளவல் விஜி @Asaittu · 6h

தூக்கி எறியப்படும் தருணங்களில்தான் சிறகை விரிக்க வாய்ப்பு கிடைக்கிறது










ஒரு நாள் ஆசிரியர் மாணவர்களிடம் ஒரு கேள்வி கேட்டார்.

ரொட்டியை எப்படிச் சாப்பிட்டால் மிகவும் சுவையாக இருக்கும்?

'வெண்ணெய் தடவிச் சாப்பிட்டால் சுவையாக இருக்கும்' என்றான் ஒரு மாணவன்.

'ஜாம் தடவிச் சாப்பிட்டால் மிகவும் சுவையாக இருக்கும்' என்றான் இன்னொரு மாணவன்.

'பாலுடன் சாப்பிட்டால் நன்றாக இருக்கும்'.

'தேனுடன் சாப்பிட்டால் நன்றாக இருக்கும்'.

'பஞ்சாமிர்தத்தோடு சாப்பிட்டால் நன்றாக இருக்கும்' எனப் பலரும் பல கருத்துகளைச் சொன்னார்கள்.

இறுதியாக ஒரு மாணவி எழுந்து, ரொட்டியை மற்றவருடன் பகிர்ந்து கொண்டு சாப்பிட்டால் தான் மிகவும் சுவையாக இருக்கும் என்று கூறினாள். ஆசிரியர் மிகவும் மகிழ்ந்து போய் அந்த மாணவியைப் பாராட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 800 | 800 | 800 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 450 | 400 | 300 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 700 | 800 | – |
| பாரை | 550 | 600 | 500 | 600 | 600 | 600 | 450 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 1000 | 600 | – |
| சீலா | 300 | 500 | 400 | 500 | 500 | 400 | – |
| விளை | 650 | 500 | 400 | 500 | 700 | – | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 500 | 400 | 400 |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 500 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1100 | – | – | 600 | 400 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 500 | 400 | 350 |
| திரளி | 300 | 250 | 200 | 200 | 300 | 300 | 350 |
| நகரை | 250 | 300 | – | 250 | 400 | – | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 150 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | 250 | 400 | 300 | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 500 | 300 | 200 |
| மதனம் | 150 | 250 | 180 | 300 | 400 | 300 | 250 |
| கொய் | 100 | 150 | 60 | 80 | 100 | 100 | – |
| பாலை | 400 | 250 | 250 | 350 | 500 | – | – |
| வாழை | 100 | 200 | 200 | 400 | 400 | – | – |

# வெல்வெட் "சேர்ட்"

வெல்வெட் சேர்ட்டுகள் அறிமுகமாகியுள்ளன. ஆண்களுக்கான இரு வித மானவர்ணங்கள், துணிகளில் சேர்ட்டுக்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. பட்டும், வெல்வெட்டும் கலந்து உருவாக்கப்பட்டுள்ள இந்த சேர்ட் 2,200 ரூபா வில் இருந்து 2,500 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.



## நாளை

வைகாசி-15
சனிக்கிழமை - 28.05.2016
திதி: ஸப்தமி பி.இ.03.01 வரை
நட்சத்திரம்: அவிட்டம்
பி.இ.01.02 வரை
ராகுகாலம்: 08.52-10.22 வரை
சுபநேரம்: 02.52-04.22 வரை
அக்கினிநாள் முடிவு



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 100 | 120 | 120 | 80 | – | 40 | 70 |
| கத்தரி | 200 | 140 | 200 | 200 | 200 | 200 | 70 | 80 |
| கரட் | 150 | 100 | 100 | 120 | 160–200 | 250 | 70 | 140 |
| மரவள்ளி | 60 | 60 | 60 | 60 | 50–60 | 80 | 40 | 40 |
| பயிற்றை | 160 | 200 | 170 | 120 | 180–200 | 240 | 90 | 100 |
| பாகல் | 200 | 120 | 300 | 120 | 200 | 120 | 120 | 120 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 120 | 160 | 100 | – | 60 | 60 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 80 | 100 | 110 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 120 | 120 | 100 | 140 | 120 | 200 | 100 | 120 |
| பூசணி | 40 | 40 | 40 | 50 | 40 | 60 | 15 | 35 |
| தக்காளி | 250 | 200 | 200 | 180 | 200 | 240 | 140 | 180 |
| வாழைக்காய் | 40 | 30 | 30 | 50 | 40 | 80 | 35 | 30 |
| கீரை | 60 | 30 | 40 | 30 | 40 | 40 | 25 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 35 | 30 | – | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 400 | 400 | 400 | 400 | 400–500 | 600 | 400 | 200 |
| புடோல் | 140 | 80 | 140 | 120 | 100 | 120 | 30 | 80 |
| கோவா | 250 | 140 | 180 | 160 | 160 | 240 | 90 | 100 |
| வெண்டி | 150 | 80 | 140 | 120 | 120 | 160 | 50 | 80 |
| போஞ்சி | 250 | 200 | 200 | 200 | 200–220 | 300 | – | 180 |
| லீக்ஸ் | 200 | 160 | 160–200 | 160 | 220 | 240 | 100 | 140 |
| தேங்காய் | 40 | 20 | 50 | 40–50 | 30–40 | 40 | 15–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 | 110 | 100 | 75 | 120 |
| தேசிக்காய் | 400 | 350 | 300 | 350 | 300 | 200 | 350 | 350 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 12 |
| கறிமிளகாய் | 200 | 140 | 300 | 180 | 160–300 | 240 | – | 150 |
| இராசவள்ளி | 180 | 160 | 160 | 160 | 120–140 | – | 110 | 120 |
| முருங்கைக்காய் | 150 | 120 | 100 | 140 | 200 | 200 | 150 | 150 |

# தேங்காய்ப்பால் தேன்குழல்



**தேவையானவை**

பச்சரிசி – இரண்டரைக் கோப்பை
முழு வெள்ளை உளுத்தம் பருப்பு – அரைக் கோப்பை
தேங்காய்ப்பால் –அரைக்கோப்பை
உப்பு – சுவைக்கேற்ப
சீரகம் –1 கரண்டி
வெண்ணெய் –50 கிராம்
பெருங்காயம் – அரைக்கரண்டி
தேங்காய் எண்ணெய்– பொரிக்க

**செய்முறை**

அரிசியையும், பருப்பையும் அரைக்கும் ஆலையில் கொடுத்து மாவாக அரைத்துக் கொள்ளவும். ஆறியதும், அரித்தெடுத்து, எல்லா பொருள்களையும் சேர்த்து, தேங்காய்ப்பாலை சிறிது சிறிதாக விட்டு நன்றாக கட்டிபடாமல் கெட்டியாகப் பிசையவும். தேவைப்பட்டால் சிறிது தண்ணீர் சேர்த்துக் கொள்ளலாம். சுட்டியில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், தேன் குழல் அச்சில் மாவைப் போட்டு, தேங்காய் எண்ணெயில் பிழியவும். இருபுறமும் திருப்பிப் போட்டு, பொன்னிறமாகப் பொரித்தெடுக்கவும்.

# உங்கள் சமையலறையில்...

1. காய்கறி சூப்புக்குக் காய்கறிகளில் தோல்களை நீக்காமல் உபயோகிக்க வேண்டும்.
2. அளவாகத் தண்ணீர் வைத்து காய்கறி சமைக்க வேண்டும். மிகுதியான தண்ணீரை வீணாக்கக் கூடாது.
3. வாயுத் தொல்லை, குடல் புண் உள்ளவர்களுக்கு துவரம் பருப்பு சாம்பாரை விட பாசிப்பருப்பு சாம்பார் நலம் தரும்.
4. கருணைக்கிழங்கு தவிர ஏனைய கிழங்கு வகைகள் நன்மையைவிட அ... கம் கெடுதல் தரக்கூடியவை.
5. வீட்டில் பழச்சாறு செய்யும்போது, வெள்ளைச் சர்க்கரைக்குப் பதி... வெல்லம் அல்லது தேன்மட்டுமே சேர்க்க வேண்டும். ஏனெனில் வெ... ளைச் சர்க்கரை நல்ல உயிர்ச் சத்துக்களைச் கொல்லும் தன்மையுடைய...
6. சமையலில் கூடியவரை அடுப்பை விட்டு இறக்கும் போது தேங்காய் சேர்... வேண்டும்.
7. காய்கறிகளை எண்ணெயில் பொரிப்பது மற்றும் வதக்குவதை விட நீரி... அல்லது நீராவியில் வேக வைப்பது நலம்.
8. இரவில் கண்டிப்பாகத் தயிரும், கீரையும் உணவில் சேர்க்கக் கூடாது.
9. நறுக்கியவுடன் காய்கறிகளைச் சமைத்துவிட வேண்டும். அதேபோ... பழங்களை நறுக்கியவுடன் சாப்பிட்டுவிட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

## சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம்



மீசாலை மேற்கைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் நேற்று (26. 05.2016) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-விசாலாட்சி தம்பதியினரின் மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் குணாநிதி (சுவிஸ்), ஜெனாநிதி (பிரான்ஸ்), அருணாநிதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வகுமார் (சுவிஸ்), கனகேஸ்வரன் (பிரான்ஸ்), குமரன் (ஜேர்மனி), ஆகியோரின் அன்பு மாம னாரும் காலஞ்சென்றவர்களான கோவிந்தபிள்ளை, கந்தையா, இராசம்மா மற்றும் ஆச்சிப்பிள்ளை (கனடா) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் நாகம்மா காலஞ்சென்றவர்களான கதிரவேலு குமாரசாமி மற்றும் திருச்செல்வம் (அப்பர்), புலேந்திரன், அம்பிகை, ரதிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சகானா, சர்மிலன் (சுவிஸ்), அமலன், ஆருஷன், அஸ்வின் (பிரான்ஸ்), அஸ்னா, அஸ்வினா, அபினா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.05.2016 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மீசாலை மேற்கு,**
**மீசாலை.**

தகவல்: **குடும்பத்தினர்.**

## நடராசா லிங்கநாதன்

**(லிங்கா - வவுனியா)**

**அன்னையின் மடியில்**
**1962 . 02 . 11**



**ஆண்டவன் அடியில்**
**2016 . 05 . 13**

இல.156, முதலாம் குறுக்கு வீதி, வவுனியாவைச் சேர்ந்தவரும் இல.12-3/3, அருத்துஷா வீதி, வெள்ளவத்தை, கொழும்பில் வசித்தவரும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் சிரேஷ்ட மாணவ முதல்வரும் முன்னாள் கொமர்ஷியல் வங்கி (City Office) உத்தியோகத்தரும் தற்போதைய The Saudi British Bank - Saudi Arabia Card Center முகாமையாளருமான நடராசா லிங்கநாதன் அவர்கள் 13.05.2016 வெள்ளிக்கிழமை சவுதி அரேபியாவில் காலமானார்.

அன்னார்ஜெயலலிதா(பொறியியலாளர் - பேராதனைப்பல்கலைக்கழகம்) வின் அன்புக் கணவரும் நரேன், நரேஷ்(Gatway International College, Dehiwala) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான நடராசா(வவுனியா - பொன்னுத்துரை) - புவனேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற இளையதம்பி - தவமணி தம்பதியரின் அன்பு மருமகனும் சத்தியலட்சுமி, சீவரட்ணம், கனகரட்ணம்(ஆஸ்திரேலியா), சந்தானலட்சுமி, காலஞ்சென்ற தனலட்சுமி (பூவார்), ஜெயரட்ணம்(ஆசிரியர் - ஆஸ்திரேலியா), பாலச்சந்திரன் (வவுனியா வைன் ஸ்ரோர்ஸ், வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோயில் தர்மகத்தாசபை செயலாளர்), மங்களேஸ்வரி(கனடா), நந்தகுமார் (கனடா), பிரபாகரன்(UK ), பிறேமளா( வவுனியா), ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மாணிக்கவாசகர், தயாநிதி, புஸ்பராணி(ஆஸ்திரேலியா), மயில் வாகனம், றஞ்சனி(ஆஸ்திரேலியா), மகேந்திரன் (கனடா), நாகதீபா(UK ), புஸ்பவதி, ஜெயலட்சுமி, காலஞ்சென்ற Dr.பராசக்தி, காலஞ்சென்ற தணரெத்தினம், குணதாசன்(ரவி, பொறியியலாளர்,RDA H.O ) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கோபிராஜ்(கணக்காளர் UK), கல்பனா(ஷம்பியா), கணேஸ்(வங்கி உத்தியோகத்தர் - ஆஸ்திரேலியா), சுமதி, Dr.சியாமளா (ஆஸ்திரேலியா), சுஜீவன்(கனடா), சாகித்தியா(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சதீஸ்(கணக்காளர்), பிரதீஷ்(கணக்காளர் - ஆஸ்திரேலியா), முரளி தரன்(பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), சுபாஷினி(ஆஸ்திரேலியா), பாகவன்(ஆஸ்திரேலியா), ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் டேனுஷா( UK), விப்பிரஜா(UK ) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.05.2016) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை கொழும்பு, பொரளை, ஜயரட்ண மலர்ச்சாலையிலும் மறுநாள் சனிக்கிழமை இல156, முதலாம் குறுக்குவீதி, வவுனியாவிலுள்ள அன்னாரின் இல்லத்திலும் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படும்.29.05.2016 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணி முதல் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக அன்னாரது பூதவுடல் இறம்பைக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**156,முதலாம் குறுக்கு வீதி,**
**வவுனியா.**

(C 21515)
(14.17.18)

தகவல்:
K.N.**பாலச்சந்திரன்(சகோதரன்)**

**077 775 1162 - பாலச்சந்திரன்**
**077 366 2337 - ஜெயலலிதா**
**077 613 9668 - குணதாசன்(ரவி)**
**077 378 7280 - சீவரட்ணம்**

## மரண அறிவித்தல்கள்

**தோற்றம்**
**30 . 12 . 1955**



**மறைவு**
**26 . 05 . 2016**

## பொன்னையா குமாரசாமி

மட்டுவில் வடக்கு, தோப்பு வீதியைப் பிறப்பிடமாகவும், மன்னார், உப்புக் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா குமாரசாமி (மாம்பழம்) நேற்று (26.05.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வைத்திலிங்கம்- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், அப்புத்துரை, சிவலிங்கம், யுகேந்திரராஜா மகேஸ்வரி, மல்லிகா, காலஞ்சென்ற ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கமலாதேவி, சிவமலர், சிவராஜேஸ்வரி, பரஞ்சோதி, ஜெயராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், காண்டீபன், சுபாஷினி, சுதர்ஷன், மகிழினி, நிரோஷன் ஆகியோரின் அன்புத் தகப்பனும், நளாயினி, சிவதர்ஷன், கிருஷாந்தன் ஆகியோரின் அன்பு மாமனும், நிகேஷ், யக்ஷரா, நர்த்தனா, இசானிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மட்டுவில் ஊருப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தோப்பு வீதி, மட்டுவில்**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## தியாகராஜா கனகசிங்கம்

(செல்வசிங்கம் -செல்வசிங்கம்
திருமண சேவை நிறுவனர்)

**தோற்றம்**
**19 . 01 . 1935**



**மறைவு**
**23 . 05 . 2016**

யாழ்.வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட தியாகராஜா கனகசிங்கம் 23.05.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராஜா - நாகம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், ராஜ்குமார், ராஜ்மோகன், ராஜ்செல்வம், கார்த்திகா, ராதிகா ஆகியோரின் ப்ாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, பூபாலசிங்கம் மற்றும் திலகவதி, காலஞ்சென்ற குணசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கீதா, மஞ்சுளா, நிமலசொரூபன், சசிகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தளையசிங்கம், சத்தியசீலன், குஞ்சுமணி மற்றும் மகாதேவன், காலஞ்சென்ற சிறீஸ்கந்தராஜா, ஞானதயா ஆகியோரின் அன்பு மைத்துனரும், மிதுனா, ஆதித்தனா, சொரூபனா, ஹரீஷ், சேரன், வருண், கிருசான், கிருஸ்மிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் நாளை (28.05.2016) சனிக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 6 மணிவரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 29.05.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இறுதிக்கிரியை நடைபெற்று பின்னர் பிற்பகல் 2 மணியளவில் கல்கிசை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C21316)
(11.17.18)

**தகவல்:குடும்பத்தினர்.**

**071 521 3154**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்கத்துடன்

நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொரலஸ்கமுவவில் உள்ள வீடு ஒன்றில் வைத்தே இவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர் நாமல் ராஜபக்சவின் இணைப்புச் செயலாளராகவும் பணியாற்றியதாகக் கூறப்படுகிறது.

மகிந்த ராஜபக்ச, ஜனாதிபதியாக இருந்த போது, அவரது இணைப்புச் செயலாளராக இருந்து கொண்டே, அரசுத் துறை நிறுவனங்களான, துறைமுக அதிகாரசபை மற்றும், தேசிய லொத்தர் சபை ஆகியவற்றிலும் பதவிகளை வகித்து, அரசசொத்துக்களை மோசடி செய்த குற்றச்சாட்டில், சம்பிக்க கருணாரத்ன, ஏற்கனவே கடந்த நவம்பர் மாதம் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

## வடக்கு

வடக்கு மாகாண முதலமைச்சர் நிதியத்தை உருவாக்குவதற்கான நியதிச் சட்டத்தை முதலாம் வாசிப்புக்குச் சபையில் சமர்ப்பித்தார்.

இதன்போது அதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப்படவில்லை. இதன் மீதான இரண்டாவது வாசிப்பு, அடுத்த அமர்வு இடம் பெறும் ஜுன் 14 ஆம் திகதி எடுத்துக்கொள்ளப் படவுள்ளது.

இதேவேளை 2014 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபை யில் முதலமைச்சர் நிதிய நியதிச் சட்டம் சமர்ப்பிக்கப்பட்டு நிறை வேற்றப்பட்டது. இருப்பினும் அப்போதைய ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி அதற்கு ஒப்புதல் வழங்கவில்லை. அதனால் அந்த நியதிச் சட்டம் கிடப்பில் போடப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையிலேயே, மீண்டும் ஒரு தடவை முதலமைச்சர் நிதியத்தை உருவாக்குவதற்கான நியதிச் சட்டத்தை முதலமைச்சர் சபையில் முன்மொழிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

## மரண அறிவித்தல்

### திருமதி மீனாட்சி பாலசுப்பிரமணியம்



பிறப்பு 25.10.1927 இறப்பு 25.05.2016

சுன்னாகம், பெரிய மதவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மீனாட்சி பாலசுப்பிரமணியம் 25.05.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும், கிருபாநிதி (முன்னாள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்), கருணா நிதி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கதிர்காமநாதனின் (சுவிஸ்) சிறிய தாயாரும், சந்திரவதனா, சந்திரகாந்தா (சுவிஸ்), சாரதாஅம்பிகை ஆகியோரின் அன்பு மாமியாரும், கிருஷாந், தேவரூபி, பிரசாந், பிரசன்னா, பிரசாத், அபி, ஷேபா, யூனியா, சுவிசேசகன்(சுவிஸ்), பிரணவன், பிருந்தன், பிரதீஷா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கிருஸ்ணரூபி, சாலோம்ஜோய் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (27.05.2016) வெள்ளிக்கிழமை நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் பூதவுடல் நல்லடக்கத்துக்காக மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(j/1619)(11,18)

தகவல்: **குடும்பத்தினர்.**

### மாரிமுத்து இராசரத்தினம் (சின்னத்தம்பி)

பிறப்பு 1945 . 02 . 03



இறப்பு 2016 . 05 . 26

உரும்பிராய் வடக்கு உரும்பிராயைப் (விளாத்தியடி) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து இராசரத்தினம் (சின்னத்தம்பி) (26.05.2016) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் சத்தியபாமாவின் அன்புக் கணவரும் சுரேஸ், பாமினி, ரமேஸ், றமாகினி ஆகியோரின் அன்புத் தந்தையும் தமிழ்மலர்செல்வி, கஜேந்திரன், கிருபானந்தராசா ஆகியோரின் அன்பு மாமனாரும் சாருஜன், சாருஜா, ஆர்ணிகா , அனந்திகா, ரேனுஜன் , நிலோஜன், தமிழினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2016) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப ஒரு மணிக்கு உரும்பிராய் இருளன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உரும்பிராய் வடக்கு,**
**உரும்பிராய்**
(விளாத்தியடி)

தகவல்: **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்



### திருமதி தோமாஸ் பிரான்சிஸ்கா

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற இராயப்பு தோமாஸ் (சின்னத்துரை சம்மாட்டி) அவர்களின் பாசமுள்ள மனைவியுமான திருமதி தோமாஸ் பிரான்சிஸ்கா 25.05.2016 புதன் கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (28.05.2016) சனிக்கிழமை கடற்கரை வீதி, பருத்தித்துறையில் அமைந்திருக்கும் அவரின் இல்லத்தில் இருந்து மாலை 2.30 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு தும்பளை தூய மரியன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பருத்தித்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

**கடற்கரை வீதி,**
**பருத்தித்துறை.**

(J 1617) (13.18)

தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்,**
**கொள்ளுப்பிள்ளைகள்.**

### சங்கீத கலாபூஷணம் நாகர் செல்லமுத்து

(இளைப்பாறிய சங்கீத ஆசிரியர் - மானிப்பாய் மெமோறியல் பாடசாலை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - சிதம்பரம்)



பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கலாபூஷணம் நாகர் செல்லமுத்து 23.05.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகர் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து (ஓய்வுபெற்ற ஆசிரியர்), வயிரமுத்து, செல்லம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், முருகதாஸ் (ஜேர்மனி), சுஜாதா (இத்தாலி) ஆகியோரது அன்புத் தந்தையும், சறோசா (ஜேர்மனி), றோய் சூரியகுமார் (இத்தாலி) ஆகியோரின் மாமனாரும், நிவேதிகா (இத்தாலி), நிலாந்தன் (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(j/1612)
(11,18)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### ஆசீர்வாதம் வரப்பிரகாசம்



அல்வாய் மேற்கு, திக்கத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆ.வரப்பிரகாசம் 24.05.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் - கத்தரினால் தம்பதிகளின் அன்பு மகனும் மரியநாயகியின் அன்புக் கணவரும் அகிலஜெயந்தி, அதிஜெயன், அதிஜெகா ஆகியோரின் அன்புத் தந்தையும் காந்தரூபன், நாகேந்திரராணி, சசிகலா ஆகியோரின் அன்பு மாமனாரும் கபில்ராஜ், கார்த்திகா, காவியா, லக்சிதா, ஜெயராஜ், கீர்த்திகா, அஜய் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை(28.05.2016) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சக்கோட்டை புனித சவேரியார் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித சவேரியார் சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**திக்கம் சந்தி,**
**அல்வாய் மேற்கு,**
**அல்வாய்.**

(N 56)(14.17.18)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 305 7884**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியட்நாம்

அரிசி மற்றும் ஏனைய பயிர்களுடன் தொடர்புடைய தொழில் நுட்பம் மற்றும் விவசாயத்துறையில் நெருங்கிய கூட்டுறவை ஏற்படுத்துவதற்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் வியட்நாம் பிரதமர் நுயென் ஜுவான் புக்கும் இதன்போது இணக்கம் தெரிவித்தனர்.

வியட்நாமின் தொழில் முயற்சியாளர்களை இலங்கையில் முதலீடு செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதன்போது அழைப்பு விடுத்தார்.

விவசாயம், தொழில்நுட்பம், வர்த்தகம் மற்றும் முதலீடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கு தமது நாடு விரும்புவதாக வியட்நாம் பிரதமர் தெரிவித்தார். அத்துடன் தமது வருடாந்த வர்த்தக பெறுமதி 200 மில்லியன் டொலர்கள் வரை அதிகரித்துள்ளது என்று சுட்டிக்காட்டிய அவர், இதனை மேலும் அதிகரிப்பதற்கான பல வாய்ப்புகள் இருக்கின்றன என்றும் குறிப் பிட்டார்.

தாம் பிரதிப் பிரதமராக இருந்த சந்தர்ப்பத்தில் ஏற்கனவே மேற்கொண்டிருந்த சந்திப்புக் குறித்து நினைவுகூர்ந்த வியட்நாம் பிரதமர், பிராந்திய மற்றும் சர்வதேச மன்றங்களில் வியட்நாமுடன் நெருங்கிய கூட்டுறவைப் பேணுவது தொடர்பில் இலங்கைக்கு நன்றி தெரிவித்தார்.

கடல் மார்க்கப் பாதுகாப்புக்கான இலங்கையின் பங்களிப்புகளை வலியுறுத்திய அவர், ஐக்கிய நாடுகள் சாசனத்தின் கடல் சட்டங்களின் கீழ் கடல் மார்க்கங்களின் பாதுகாப்பை மேலும் உறுதி செய்யும் வகையில் இரண்டு நாடுகளும் நெருங் கிப்பணியாற்ற முடியும் எனவும் தெரிவித்தார்.

விவசாய அமைச்சர் என்றவகையில் தாம் வியட்நாமுக்கு மேற்கொண்டிருந்த பயணத்தை நினைவுகூர்ந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, விவசாய, தொழில் நுட்பத்தில் வியட்நாம் அடைந்திருக்கும் அபிவிருத்திகளைப் பாராட்டியதோடு, இந்தத் தொழில்நுட்ப அறிவைப் பகிர்ந்து கொள்வதில் இலங்கை பயனடைய முடியும் என்றும் தெரிவித்தார்.

இலங்கைக்கு வருகை தருமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்ட வியட்நாம் பிரதமர், மிக விரைவில் தாம் இலங்கைக்கு பயணம் செய்வதாகவும் கூறினார். ஜப்பான் வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அமோக வரவேற்பு வழங்கப்பட்டது. ஜப்பானில் நடைபெறும் ஜி – 7 மாநாட்டில் கலந்துகொள்வதற்காக நேற்றுமுன்தினம் பிற்பகல் கொழும்பிலிருந்து பயணத்தை ஆரம்பித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நேற்று முற்பகல் தெற்கு ஜப்பானின் நகோயா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார்.

ஜனாதிபதியையும் அவருடன் வந்த தூதுக்குழுவினரையும் ஜப்பானின் வெளிவிவகார அமைச்சர் யோஜி முத்தோ, மாவட்ட ஆளுநர் ஹீதேகி ஒமோரா ஆகியோர் உள்ளிட்ட அந்த நாட்டு தூதுக்குழுவினர் மிக விமரிசையாக வரவேற்றனர். இந்த வரவேற்பையடுத்து ஜனாதிபதி மைத்திரிபால தங்கியிருக்கும் நகோயா ஹில்டனில் அவருக்கு சம்பிரதாயபூர்வமான வரவேற்பு நிகழ்வும் வழங்கப்பட்டது. (த-வ-4)

## வடமாகாண

யிடப்பட்டிருக்கின்றது. மக்கள் நலத் திட்டங்களைப் பாதிக்கும் வகையில், அந்தச் செய்தி அமைந்திருக்கின்றது.

ஆளுநரின் கலந்துரையாடலைப் பகிஷ்கரிப்பதாக, எந்தவொரு உறுப்பினரும் சொல்லவில்லை. அப்படியாயின் அந்த ஊடகம் எவ்வாறு செய்தி வெளியிட்டது. இது ஒட்டுமொத்த வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்பட்டிருக்கின்றது. ஆளுநர் வரம்பு மீறிச் செயற்பட்டார் என்றால், எந்த அதிகார வரம்பை அவர் மீறினார் என்பது தெளிவாக்கப்படவேண்டும்.

அந்தச் செய்தியில் வடக்கு மாகாண சபையின் 38 உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு, 7 உறுப்பினர்கள் பங்குபற்றியதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. வடக்கு மாகாண சபையின் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு மாத்திரமே அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அத்துடன் 8 உறுப்பினர்கள் அதில் பங்கேற்றிருந்தனர் – என்றார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்க ஆளும் கட்சி உறுப்பினர் விந்தன் எழுந்த போது, மற்றொரு ஆளும் கட்சி உறுப்பினர் சிவாஜிலிங்கம், இது சிறப்புரிமை மீறலா? பிரேரணையா? என்ன என்று கேட்டார். இதற்கு அவைத் தலைவர், ஆளும் கட்சி உறுப்பினர் ஆனோல்டையே பதிலளிக்குமாறு கூற, அவர் இது சிறப்புரிமைப் பிரச்சினை – என்றார்.

ஆளும் கட்சி உறுப்பினர் விந்தன், ஆளுநர் இந்தக் கூட்டத்தைக் கூட்டியிருக்கத் தேவையில்லை – என்றார்.

உள்ளூராட்சி, முதலமைச்சரின் கீழேயே உள்ளது. முதலமைச்சருடனேயே இணைந்து செயற்பட்டிருக்கவேண்டும் என்று குறிப்பிட்டார். மேலும், அன்றைய கூட்டத்துக்குச் செல்வது தொடர்பாக ஊடகவியலாளர் தொடர்பு கொண்டு கேட்டனர் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் அன்றைய கூட்டத்தில் ஆளுநர், தான் இனி இதில் தலையிடப் போவதில்லை என்று சொல்லி ஒதுங்கிய பின்னர், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இதனைத் தலைமை தாங்கி நடத்தியுள்ளார் என்று குறிப்பிட்டார்.

இதன்போது அவைத் தலைவர், சபைக்குத் தவறான தகவலை வழங்கக் கூடாது. அன்றைய கூட்டத்தில் நீங்கள் பங்கேற்கவில்லை. அங்கு நடந்தது உங்களுக்குத் தெரியுமா ? என்று கேட்க, ஆளும் கட்சி உறுப்பினர் விந்தன், நான் ஊடகச் செய்தி அடிப்படையில் சொல்கின் றேன்–என்றார்.

அவைத் தலைவர், எதிர்க் கட்சி உறுப்பினர் அகிலதாசிடம் அன்றைய கூட்டத்தில் நடந்ததைச் சொல்லுமாறு கேட்டார்.

இதன்போது எதிர்க்கட்சி உறுப்பினர் அகிலதாஸ், ஆளுநரே கூட்டத்தை தலைமை தாங்கி நடத்தியதாகத் தெரிவித்தார்.

இதனையடுத்து விந்தன், தனது கருத்துப் பிழையாக இருந்தால், அதனை ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்தார்.

ஆளும் கட்சியின் மற்றொரு உறுப்பினரான பரஞ்சோதி, அந்த ஊடகம் அவ்வாறு செய்தி வெளியிட்டமைக்கான காரணம் கேட்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டார்.

பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன், வடபகுதி ஊடகங்களுக்குச் சுதந்திரம் இல்லை என்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு முழுமையான சுதந்திரம் இருக்கின்றது. இந்த ஊடகங்களைப் பற்றி நான் இந்தச் சபையில் அடிக்கடி கதைத்திருக்கின்றேன்.--(அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டதற்கு அமைய, ஊடகத்தின் பெயர் நீக்கப்பட்டுள்ளது) பத்திரிகை பொய்ச் செய்தி போடுகின்றது. நான் ஆரம்பத்தில் -- பத்திரிகைதான் வாங்கினான். அவர்கள் பொய்ச் செய்தி போடுவதால் -- பத்திரிகை வாங்குகின்றேன். -- பத்திரிகை அமைச்சரவை மாற்றவேண்டும் என்பது தொடர்பில், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் கதைத்த செய்தியைப் பிழையாகப் போட்டார்கள். 16 பேர் கையெழுத்து வைத்து அமைச்சரவை மாற்றம் செய்யப்படவேண்டும் என்று கடிதம் கொடுத்தபோது, சம்பந்தன் ஐயா அதனைப் பரிசீலிப்பதாகக் கூறினார். ஆனால் -- பத்திரிகை அதனை சம்பந்தன் ஐயா நிராகரித்து விட்டதாகச் செய்தி வெளியிட்டது. இந்தச் செய்தி எழுதுவதற்காக கொழும்பிலிருந்து -- செய்தியாளர் வந்திருந்தார்.

இங்குள்ள ஊடகவியலாளர்கள் காசு வாங்கிக் கொண்டு செய்தி எழுதுகின்றார்கள். அமைச்சர்கள் ஒவ்வொருவருக்கும் பத்திரிகைகள் செயற்படுகின்றன. நான் கடந்த கூட்டத்தில் எவ்வளவோ நல்ல விடயங்கள் கதைத்தேன். ஆனால் -- பத்திரிகை அதை எல்லாம் விடுத்து, கொட்டை எழுத்தில் நான் காணி விற்ற விடயத்தை மாத்திரம் போட்டிருக்கின்றது–என்றார்.

எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் கருத்துத் தெரிவிக்கையில், எனக்கு அந்தக் கூட்டத்துக்கு அழைப்பு வரவில்லை. தமிழகத் தேர்தல் தொடர்பில் இந்திய ஊட கங்கள் பணத்தை வாங்கிக் கொண்டு செயற்பட்டன. இதேபோன்ற கலாசாரம் இங்கும் வந்து கொண்டிருக்கின்றது – என்றார்.

இந்த விடயம் தொடர்பில், இறுதியாகக் கருத்துத் தெரிவித்த அவைத் தலைவர், ஆளும் கட்சி உறுப்பினர் ஆனோல்ட் எழுப்பிய சிறப்புரிமை விவகாரத்தை, சபை நடவடிக்கைக் குழுவிடம் பாரப்படுத்துவதாகக் குறிப்பிட்டார். (த-வ-5)

## வல்வையில்

குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த பெண்ணின் கணவனும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொலைக் குற்றச்சாட்டு சந்தேகநபரை நேற்றுமுன்தினம் இரவு கைது செய்துள்ளதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர் இமையாணன் மயிலவளவைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் எனப் பொலிஸார் கூறினர். அவர் தீவிர விசாரணையின் பின்னர், நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.அத்துடன், கொலையுடன் தொடர்புடைய சில சான்றுப் பொருள்கள்மரபணுப்பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

இமையாணன் மயிலவளவு பகுதியில் உள்ள வீடொன்றில் சில நாள்களுக்கு முன்னர் வயோதிபப் பெண் ஒருவர் கூரிய ஆயுதம் ஒன்றால் குத்தியும் வெட்டியும் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டார். இரவு 8.30 மணியளவில் கணவருக்கு உணவு உண்ணக் கொடுத்த பின், தானும் உண்டு விட்டுக் குளியறையில் கை கழுவச் சென்றபோது, அவர் கூரிய ஆயுதம் ஒன்றால் குத்தப்பட்டு- வெட்டப்பட்ட நிலையில் அலறி ஓடி வந்து வீட்டுக்கு முன்னால் உள்ள விறாந்தையில் விழுந்து துடிதுடித்து உயிரிழந்திருந்தார் என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பான விசாரணைகள் வடமராட்சிக்குப் பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தலைமையிலான மூன்று விசாரணைக் குழுக்கள் அமைக்கப்பட்டுத் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. பலரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டதோடு, கொலை நடந்த இடத்தில் இருந்து பெறப்பட்ட கைரேகை அடையாளங்கள் உட்படத் தடயங்களை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. கொலைக்குத் தனிப்பட்ட கோபம் காரணமாக இருக்கலாம் என்றும், கொலையாளி ஒருவராகத் தான் இருக்கமுடியும் என்றும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

இந்த நிலையில் குறித்த சந்தேகநபரை, கொலை நடந்த வீட்டுக்கு அருகில் வைத்து பொலிஸார் கைது செய்தனர். சந்தேகநபர் வயோதிப மாதுவின் வீட்டுக்கு அருகில் வசிப்பவர் என்றும், 32 வயதுடைய சந்தேகநபர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். அவரை எதிர் வரும் முதலாம் திகதிவரை விளக்க மறியலில் வைக்க பருத்தித்துறை நீதிவான் உத்தரவிட்டார்.

இதுதவிர, குறித்த கொலை இடம்பெற்ற அதே தினத்தில் குடும்பப் பெண் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார். அதற்குக் காரணமானவர் என்று சந்தேகிக்கப்பட்ட குறித்த பெண்ணின் கணவன், தலைமறைவாகியிருந்த நிலையில், சில நாள் களுக்கு முன்னர் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர், அவர் நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (த-வ-4-26-109)

## நாயாறுப்

முல்லைத்தீவு மாவட்ட ஆளும் கட்சி உறுப்பினர் து.ரவிகரன் இது தொடர்பான பிரேரணை முன் மொழிந்தார்.

இதன்போது அவர் தெரிவித்ததாவது:-

மாகாணத்தின் மக்கள் பரம்பல் மாதிரியை இயற்கைக்கு முரணான வகையில் மாற்றுவது அரசின் காணிக் கொள்கையாக அமையக் கூடாது என்று நல்லிணக்க ஆணைக் குழுவின் விதந்துரை சொல்கின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசே னவின் அதிகாரத்தின் கீழ் உள்ள மகாவலி அதிகார சபை, வடக்கு – கிழக்கில் நல்லிணக்க ஆணைக் குழுவின் விதந்துரையை மீறி, மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் தமிழ் மக்களின் பாரம்பரிய சட்டபூர்வமாக வழங்கப்பட்ட நிலங்களைச் சிங்கள மக்களுக்கு வழங்கி, தமிழ் மக்களை ஏதிலிகளாக நிற்க வைத்திருக்கிறது.

கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக் கேணி பகுதிகளில் தமது குடியிருப்புக் காணிகளில் மீள் குடியமர்த்தப்பட்ட இந்த மக்களின் வாழ்வாதார விளை நிலங்கள், மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்று கபளீகரம் செய்யப்பட்டுள்ளது. இதனால் அந்த மக்கள் சொந்த மண்ணில் ஏதிலிகளாக்கப்பட்டுள்ளார்கள். உண் பதற்கான உணவைப் பெற்றுக்கொள்ள வேறு வழியின்றி இந்த மக்கள் தாம் இழந்துபோன தமது பாரம்பரிய காணிகளில் தற்போது அதன் சட்டவிரோத உரிமையாளர்களான சிங்கள மக்களிடமே தினக்கூலி வேலை செய்யும் துர்ப்பாக்கிய நிலையில் இருக்கின்றனர். இதனையும் இன அழிப்புக்கு ஒப்பானதாகவே நான் கருதுகிறேன். வடக்கு – கிழக்கை துண்டாடுவதற்காகத் தமிழர் தாயகத்தின் இதய பூமியைப் பிடிக்க இன்று வரை மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்களக் குடியேற்றங்களின் கர்த்தாக்கள், இந்தக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கான கருவியாக மகாவலி அதிகார சபையைப் பயன்படுத்தி வருகின்றனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின், செம்மலை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் நாயாறு கடலுடன் கலக்கும் கழிமுகத்துக்கு அண்மையான கடற்கரை ஓரமாக மகாவலி அதிகார சபையின் சுற்றுலா விடுதி ஒன்று 250 மில்லியனுக்கு மேற்பட்ட நிதியில் அமைக்கப்படவுள்ளது. இந்தப் பகுதியில் ஏற்கனவே தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகளில் சிங்களக் குடியேற்றங்கள் ஆரம்பிக்கப் படவுள்ளமையும் ஊடகங்கள் மூலம் அறிய முடிந்தது.

இது தொடர்பாக மேலும் ஆய்வு செய்த போது, இந்தப் பகுதி மாயபுர என்று சிங்களத்தில் பெயரிடப்பட்டுச் சிங்களக் குடியேற்றம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான திட்டம் மகாவலி அதிகார சபையிடம் மிக நீண்ட காலத்துக்கு முன்பே இருந்ததை அறிய முடிகிறது.

மேலும் ஆரம்ப காலங்களில் தமிழர்களின் பாரம்பரிய நிலங்களை அத்து மீறிக் கைப்பற்றுவதற்கு இலங்கையின் சிறைகளில் பாரதூரமான குற்றங்களுக்காக அடைக்கப்பட்டிருந்த சிங்களக் கைதிகளை குடும்பத்துடன் குடியேற்றம் செய்த அரசு, இன்று இந்த மாயாபுரவிற்கு, முல்லைத்தீவில் அத்து மீறிக் குடியேறியுள்ள மீனவர்களைப் பயன்படுத்தி திட்டமிட்டுள்ளமையை அறிய முடிகிறது.

இந்தப் பகுதியிலுள்ள மக்களின் அன்றாட இயல்பு வாழ்வையும் சுயமரியாதையும் முற்றிலும் தகர்ப்பதாக உள்ள இவ்வாறான குடியேற்றங்கள் உடன் தடுத்து நிறுத்தப்படவேண்டும் என முன்மொழிகிறேன் – என்றார்.

(த-வ-5)

## புலிகளின்

தேடப்பட்டு வந்தவர் என்று பயங்கரவாத விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள இவரது வீட்டைச் சோதனையிட்டபோது, அவர் அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. போரின்போது, மன்னார் மற்றும் வன்னிப் பிரதேச புலனாய்வுத்துறைப் பொறுப்பாளராக இருந்த ஆதவன் மாஸ்டர், போரின் முடிவில் படையினரிடம் சரணடைந்தார்.

ஒன்றரை மாதப் புனர்வாழ்வுக்குப் பின்னர், இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் பொறுப்பேற்கப்பட்டிருந்தார் என்றும் கொழும்பு ஆங்கில ஊடகத்தின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-வ-5)

## மரண அறிவித்தல்

### தர்மகுலசிங்கம் துஷியந்தி



தெல்லிப்பழை புதுதோட்டத்தைப் பிறப்பிடமாக வும் இருபாலை VH Lane ஐவசிப்பிடமாகவும் கொண்ட தர்மகுலசிங்கம் துஷியந்தி நேற்று (26.05. 2016) வியாழக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் தர்மகுலசிங்கம்-பொன்மலர் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாராணியர் பூரணம் மற்றும் காலஞ்சென்ற சின்னத்தம்பி- அன்னம்மா தம்பதியரின் அன்பு பேர்த்தியும், துஷாந் தன், நிஷாந்தி, நிஷாந்தன் ஆகியோரின் அன்பு சகோதரியும், தர்மிளா வின் அன்பு மைத்துனியும், கம்ஷா, சஷ்மி, றொஷ்மி ஆகியோரின் பாசமிகு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2016) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இருபாலை தெற்கடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்து எடுக்க ஓடிய சிறுவன் விபத்தில் சிக்கிக் காயம்

சாவகச்சேரி, மே 27
வீதியில் ஓடிய கிரிக்கட் பந்தை, எடுக்க ஓடிய எட்டு வயதுச் சிறுவன் எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதிக் காயமடைந்துள்ளான். காயமடைந்த சிறுவனை வைத்திய சாலையில் சேர்ப்பித்த மோட்டார் சைக்கிளோட்டியை வைத்தியசாலையில் வைத்து, சிறுவனின் சிறிய தந்தை தாக்கியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம்பெற்றது.
குறித்த பகுதியைச் சேர்ந்த சிறுவர்கள், வீதியில் கிரிக்கட் விளையாடிக் கொண்டிருந்த வேளையில், வீசப்பட்ட பந்து கச்சாய் வீதியில் விழுந்துள்ளது. அதனை எடுக்க ஓடிய வேளையில் வீதியில் வந்த மோட்டார் சைக்கிளுடன் சிறுவன் மோதுண்டான் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
காயமடைந்த சிறுவன், சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்த வேளையில், அங்கு வந்த சிறுவனின் சிறிய தந்தை வைத்தியசாலை வளாகத்தில் வைத்து மோட்டார் சைக்கிளோட்டியைத் தாக்கினார் என்றும் பொலிஸார் சிறிய தந்தையைக் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந-ஐ-9)

## மரண அறிவித்தல்கள்

### பரமகுரு பத்மநாதன்

டச்சுவீதி மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமகுரு பத்மநாதன் (நாதன்) (26.05.2016) வியாழக்கிழமை பி.ப 5.00 மணியளவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பரமகுரு-இராசம்மா தம்பதியரின் மகனும் அன்னமலரின் (கைதடி) அன்புக் கணவரும் பத்மாதேவி, நவரத்தினதேவி, புஸ்பராணி, காலஞ்சென்ற ஜெயநாதன், மாலினிதேவி, பத்மினி, ஏகநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜயதர்சனின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2016) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 1.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பி ராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி, மீசாலை
மேற்கு, மீசாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சாந்தம்மா சுப்பிரமணியம்
(இளைப்பாறிய ஆசிரியை)



அச்சுவேலி தோப்பைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் கிழக்கு சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தம்மா சுப்பிரமணியம் (26.05.2016) வியாழக்கிழமை இறை பதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - ஆசைப்பிள்ளை தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற செல்லப்பா-செல்லாச்சி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற செல்லப்பா சுப்பிரமணியத்தின் மனைவியும் விஜயகுலராணி (இளைப்பாறிய ஆசிரியை), நந்தினி , விஜயதரன் (கனடா), குமுதினி, கலாதரன் (டென்மார்க்), ஆகியோரின் அன்புத் தாயாரும் பரமேஸ்வரன் (இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர் தேன்மராட்சி கல்வி வலயம்), கனகநாதன் (இளைப்பாறிய உத்தியோகத்தர்-மக்கள் விற்பனைத் திணைக்களம்), இன்பரதி , சூரியமூர்த்தி (சிற்றூழியர், நீர்ப்பாசனத் திணைக்களம்), சிவசாந்தி ஆகியோரின் மாமியாரும் சைந்தவி, அ[illegible]ந்தன், சுஜீவன், தனுஜன், லக்ஸ்மன், நிரோஷ், ஜெயநிலா, சிந்திர்லா, சர்மிலன், சங்கீதா,அனுஜன் , சங்கவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2016) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரபத்திரர் கோயில் வீதி,
மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### ஜேம்ஸ் செல்லையா இம்மனுவல் (சூரியராசா)
(ஓய்வுபெற்ற இலங்கை மின்சாரசபை ஊழியர்)

பிறப்பு
26
.
06
.
1948



இறப்பு
26
.
05
.
2016

கோயில் வீதி லேன் சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடாகவும் கொண்ட ஜேம்ஸ் செல்லையா இம்மனுவல் (சூரியராசா) நேற்று (26.05.2016) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜேம்ஸ் செல்லையா பாக்கியம் மரியம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர் களான ஜோன் அந்தோனிப்பிள்ளை மேரிப்பிள்ளை தம்பதி களின் அன்பு மருமகனும், அக்னஸ் றோசலினின் (பொன்மலர்) அன்புக் கணவரும், திருமதி அனஸ்நிலானி, நிஷானி, பிராங்லின், நிஷான், நிலோஜினி, நிறொக்ஷினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி பெனடிற் பிலோமினாவின் பாசமிகு சகோதரரும், அனிஸ், றெஜினோல்ட் ஆகியோரின் அன்பு மாமனாரும், பெனடிற் அல்போன்ஸ், சின்னமலர், சின்ராசா, யூட், ஞானப்பிரகாசம், வசந்தி டெலா,சசி ஆகியோரின் மைத்துனரும்,ஜோய், ஆன்ஜீன், எறிக், றொஷான், நிறோஷன், றெக்சன், ஜறோஷன், ஜெபர்ஷன், யதுஷா, சாள்ஸ், டன்ஸ்ரன், டயான் ஆகியோரின் மாமனாரும், டயானா, அனிஸ்ரன் ஆகியோரின் பெரியப்பாவும் கபிஷ், பிரிந்தினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கத் திருப்பலி இன்று (27.05.2016) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்துக்காக புனித மரியன்னை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

13/1, கோயில் வீதி லேன்,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
நிஷான் (மகன்)

### சபாரத்தினம் தவராசா (சிங்கம்)



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் தவராசா (சிங்கம்) கடந்த (25.05.2016) புதன்கிழமை இறைபதம் அடைந்தார். .

அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினம்-நல்லமத்து தம்பதிகளின் மகனும் தம்பிராசா-மனோன்மணி தபதியினரின் மருமகனும் சிவனேஸ்வரியின் அன்புக் கணவரும் சபேஷ்காந் (பிரான்ஸ்), கமல்காந் (பிரான்ஸ்), சுஜிதா (கோண்டாவில்), பிரதீபா, கிஷோகாந் (லண்டன்), இளங்காந் ஆகியோரின் அன்புத் தந்தையும் பவதரஙஷிகா (பிரான்ஸ்), கஜேந்திரன் (V.M.K ஹாட்வெயர், கோண்டாவில்) ஆகியோரின் அன்பு மாமனாரும் வர்ணிகாவின் அன்புப் பேரனும் பூபதியம்மா, காலஞ்சென்ற இலட்சுமியம்மா மற்றும் கந்தசாமி, விஜயரத்தினம், புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.
(V.M.K ஹாட்வெயர்)கோண்டாவில்.

[illegible]
நீர்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### வில்பிறட் எற்மன் இம்மனவேல்



பிறப்பு 02.05.1941
இறப்பு 24.05.2016

யாழ்ப்பாணம் மாட்டீன் வீதியைப் பிறப்பிடமா கவும் இல.6/1,A அன்னம்மாள் கோயில் ஒழுங்கை, பாண்டி யந்தாழ்வு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வில்பிறட் எற்மன் இம்மனுவேல் 24.05.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாம்பிள்ளை வில்பிறட் மேரி மாகிறேற் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை அந்தோனிப் பிள்ளை சிசலியா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் ஞானம்மாவின் அன்புக் கணவரும் அனற்றெனி (ஜேர்மன்), அன்ரன் றினோல்ட் ஆகியோரின் அன்புத் தந்தையும் லிங்ரன் ஜோண்சனின் (ஜேர்மன்) அன்பு மாமனாரும் ஸ்ரெபான், சரோன், ஜெறிஷா (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று(27.05.2016) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு புனித அன்னாள் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்திற்காக பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

### செல்வன் ஜதீஸ் தேனினியன்
(யா/ மகாஜனக் கல்லூரி தெல்லிப்பளை)



பிறப்பு
2005.07.17
இறப்பு
2016.05.26

கிளாங்கொடை அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜதீஸ் தேனினியன் நேற்று (26.05.2016) வியாாக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் ஜதீஸ்-அமரஜோதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் முருகதாஸ்-இராஜலட்சுமி, இராமையா-மாரியாய் தம்பதிகளின் அன்புப் பேரனும் யதுர்சன், நவநீதன், கரிகாலன், சிந்துஜன் ஆகியோரின் ஆருயிர் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2016) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக மு.ப 11.00 மணியளவில் அளவெட்டி மணல்பிட்டி மயானத்திற்க எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கிளாங்கொடை,
அளவெட்டி
வடக்கு.

முருகதாஸ்-ஜதீஸ் (தந்தை)
077 139 0771, 077 038 6491

### திருமதி
### சிவனேஸ்வரி சந்திரா ஸ்ரீபதிக்குருக்கள்



காரைநகரைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, பெருமாள் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவனேஸ்வரி சந்திரா ஸ்ரீபதிக்குருக்கள் நேற்று(26.05.2016) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசர்மா-சாரதாம்பாள் தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற சந்திரசேகரசர்மா-ஈஸ்வரி தம் பதியினரின் மருமகளும் சிவஸ்ரீ சந்திரா ஸ்ரீபதிக்குருக்கள் J.P.அவர்களின் மனைவியும் தாரிணி (அபிவிருத்தி உத்தியோகத்தர்-கச்சேரி), சுகன்யா, ஸ்ரீஜெயபவன் (MLT-யாழ் போதனா வைத்தயசாலை ), பிறேமவனிதா (விஞ்ஞானபீடம்-யாழ் பல் கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சாந்தரூபன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் TPDL), சிவஸ்ரீ திருச்செந்திநாத சர்மா, சோபனா (ஆசிரியை ப்ளை மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெகதீஸ்வரி, பாலச்சந்திரன் , கமலநாதன், லலிதாம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கிரிசாம்பாள், ரகுபதி சர்மா, கமலாம்பாள், நீலாம்பாள் ஆகியோரின் மைத்துனியும் ஸாஸ் வதசர்மா, ஹரித்வர்ணன், ஸ்ரீநிதா ஆகியோரின் பேர்த்தியும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2016) வெள்ளிக்கிழமை மு.ப10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

186, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 571 1181

# ஆவரங்கால் மத்தி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், மே 27

கோப்பாய் பிரதேச கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் ஆவரங்கால் மத்திய அணி கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் கடந்த 20ஆம் திகதி இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. ஆவரங்கால் மத்தி அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மோதிய இந்த ஆட்டத்தில் முதலாவது, மூன்றாவது, ஐந்தாவது செற்களைக் கைப்பற்றி 3:2 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றது ஆவரங்கால் மத்திய அணி. (ம-422)



# பதிலடி கொடுக்குமா? பறிகொடுக்குமா? இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது.

ஏற்கனவே முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து இன்னிங்ஸ் மற்றும் 88 ஓட்டங்களால் வெற்றிபெற்று முன்னிலையில் உள்ளது. இதனால் இன்று ஆரம்பமாகும் ஆட்டத்தில் இலங்கை வெற்றி பெற வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டுள்ளது. குறைந்த பட்சம் சமநிலையில் முடித்தால் மட்டுமே இலங்கை அணியால் தொடரில் தனது இருப்பைத் தக்க வைக்க முடியும். மாறாக இங்கிலாந்து வெற்றி பெற்றால் மூன்றாவது ஆட்டத்தின் முடிவு எவ்வாறாக அமைந்தாலும் தொடர் இங்கிலாந்திடமே செல்லும்.

பிரசாத்துக்குப் பதிலாக குசல் பெரேரா அணியில் இணைக்கப்பட்டுள்ளமையானது துவண்டு கிடக்கும் துடுப்பாட்டத்தை பலப்படுத்தும் செயலாக அமையும். இருப்பினும் கடந்த ஆறு மாதங்களாக ஒரு சர்வதேச ஆட்டத்திலேனும் கலந்துகொள்ளாத குசல் இங்கிலாந்துக்கு எதிரான தொடருக்காக தன்னை மிகவும் குறுகிய கால அவகாசத்தில் தயார் படுத்தியிருப்பாரா என்பது இன்றே தெரியவரும். பந்துவீச்சைப் பொறுத்தமட்டில் சமீரவின் விலகல் பெரும் பின்னடைவே. அவருக்குப் பதிலாக ராஜித சேர்க்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அறிமுக வீரரான சமிந்த பண்டார அணியில் இணைக்கப்பட்டுள்ளார். இவரின் இணைப்பு சாதகமாகவும் அதே நேரத்தில் பாதகமாகவும் அமையக்கூடும். பழக்கமில்லாத பந்துவீச்சுக்கு இங்கிலாந்து திணறலாம். அதே நேரத்தில் நேற்றுமுன்தினம் இரவு இலங்கை அணியுடன் இணைந்த அவர் இன்றைய ஆட்டத் துக்கு தன்னை தயார்ப்படுத் தியிருப்பாரா என்பது சந்தே கமே. இந்த விடயத்தைக் கருத்தில் கொண்டு மத்தியூஸ் இவரை களமிறக்காதும் விடலாம்.

இங்கிலாந்து அணியைப் பொறுத்த மட்டில், அந்த அணியின் ஆகச் சிறந்த சகல துறை வீரர்களில் ஒருவரான ஸ்டோக்ஸ் காயம் காரணமாகவிலகியுள்ளமை பெரும் பின்னடைவே. (ம)

# நெக்ராவுக்கு அறுவைச் சிகிச்சை



முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக நெக்ரா ஐ.பி.எல். தொடரிலிருந்து இடையே விலகிய நிலையில், குறித்த காயத்துக்கு அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இந்திய வேகப்பந்து வீச்சாளரான நெக்ரா ஐ.பி.எல். தொடரில் ஹைதராபாத் அணிக்காக விளையாடி வந்தார்.


கடந்த 15ஆம் திகதி நடைபெற்ற பஞ்சாப் அணிக்கெதிரான ஆட்டத்தின்போது அவருடைய முழங்காலிலுள்ள தசை நாரில் முறிவு ஏற்பட்டது.

இதையடுத்து அவருக்கு ஸ்கான் எடுக்கப்பட்டதில் பெரிய அளவில் காயம் ஏற்பட்டிருப்பது தெரியவந்தது. குறித்த காயத்துக்கு அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்ட நிலையில் லண்டனில் உள்ள பிரபல மருத்துவமனை ஒன்றில் அவருக்கு நேற்றுமுன்தினம் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. (ம)



மடு, மாந்தை மேற்கு உதைபந்தாட்ட ஒன்றியத்துக்கு, வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனால் சில கால்பந்தாட்ட பயிற்சி உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (ம)

# இறுதியில் யாழ்.மத்தி.



யாழ்ப்பாணம், மே 27

யாழ். மாவட்ட பாடசாலைகளின் துடுப்பாட்ட சங்கத்தினால் 19 வயது பிரிவினருக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் துடுப்பாட்டத் தொடரில் யாழ். மத்திய கல்லூரி அணி இறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுதாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 130-8 என்றிருந்தது. அதிகபட்சமாக ஜெனி பிளெமிங் 52 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மத்தி. 4 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக கௌதமன் 49 ஓட்டங்களைப் பெற்றார். (ம-23)

# விண்மீன், சென்.ஜோசப் முன்னேற்றம்

இளவாலை யங்ஹென்றிஸ் வி. கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் விண்மீன், சென்.ஜோசப் அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் விண்மீன் அணியை எதிர்த்து உதயசூரியன் அணி மோதியது. ஆட்டம் ஆரம்பமாகி 17ஆவது நிமிடத்தில் உதயசூரியன் அணியினர் முறையற்ற ஆட்டத்தை வெளிப்படுத்த விண்மீன் அணியினருக்கு தண்டனை உதை கிடைத்தது. இதனைச் சரியாக பயன்படுத்திய விண்மீன் அணியின் டேமியன் தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவு செய்தார். உதயசூரியன் அணியின் மோகன்ராஜ் 23ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுக்க முதல் பாதியின் முடிவில் இரு அணிகளும் 1:1 என்று சமநிலையில் இருந்தன. இரண்டாம் பாதியில் விண்மீன் அணியின் ஆதிக்கம் மேலோங்கி காணப்பட்டது. அந்த அணியின் உதயதாஸ் 29ஆவது நிமிடத்திலும், டேமியன் 32ஆவது நிமிடத்திலும் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவு செய்த 3:1 என்று முன்னிலை வகித்தது விண்மீன். உதயசூரியன் அணியின் நகுலேஸ்வரன் 56ஆவது நிமிடத்தில் பிறிதொரு கோலைப் பதிவு செய்த போதிலும், 59ஆவது நிமிடத்தில் விண்மீன் அணியின் டினோஜன் ஒரு கோலைப் பதிவு செய்ய முடிவில் அந்த அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.ஜோசப் அணியை எதிர்த்து கலைமதி அணி மோதியது. கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமலேயே முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 28ஆவது நிமிடத்தில் கலைமதியின் சார்பாக முதலாவது கோல் பதிவானது.

ஆனால் ஆட்டத்தின் 55ஆவது, 62ஆவது, 66ஆவது, 67ஆவது நிமிடங்களில் ஜோசப் அணியின் சார்பாக கோல்கள் பதிவாக முடி வில் அந்த அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி. ம.வி. – புதுக்குடியிருப்பு மத்தி. வன்னியின் சமர் இன்று ஆரம்பம்



கிளி.மகா வித்தியாலய அணி



புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி அணி

கிளிநொச்சி, மே 27
வன்னியின் சமர் என்று அழைக்கப்படும் கிளிநொச்சி மகா வித்தியாலயத்துக்கும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கும் இடையிலான இரண்டு நாள்களைக் கொண்ட துடுப்பாட்டம் இன்று நடைபெறவுள்ளது.
கிளிநொச்சி மகா வித்தியாலய மைதானத்தில் இன்று ஆரம்பமாகும் இந்த ஆட்டம் வன்னியின் சமர் வரலாற்றில் ஆறாவது ஆட்டமாக பதிவாகிறது. இரு பாடசாலைகளுக்கும் இடையே 2007 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தொடர் யுத்தத்தின் காரணத்தால் 2009ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக நான்கு ஆண்டுகள் கைவிடப்பட்டிருந்தது. இதன்படி 2007, 2014, 2015 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஆட்டங்கள் சமநிலையில் முடிவடைந்தன. 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆட்டத்தில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியும் 2013 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆட்டத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணியும் வெற்றி பெற்றிருந்தன. இதனால் இன்று நடைபெறும் ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி ஒட்டுமொத்த வரலாற்றிலும் ஆதிக்கம் செலுத்தக்கூடிய நிலை ஏற்படும். (ம-21,23)

## முரளிதரனிடம் லையன் பயிற்சி

ஆஸ்திரேலிய அணியின் சுழற்பந்து வீச்சாளரான நாதன் லையன், இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பாக செயற்பட முன்னாள் ஜாம்பவானான முத்தையா முரளிதரனிடம் பயிற்சிகளையும் ஆலோசனைகளையும் பெற முடிவு செய்துள்ளார்.
எதிர்வரும் ஜூலை மாதம் ஆஸ்திரேலிய அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் செய்து விளையாடவுள்ளது. இலங்கைக்கு எதிராக தொடரைக் கைப்பற்றுவதுக்காக லையனை பயன்படுத்த ஆஸ்திரேலிய அணி திட்டமிட்டுள்ளது. லையன் ஒரு சுழல் வீரர். இலங்கையின் ஆடுகளங்கள் சுழலுக்கும் ஒத்துழைக்கும். எனவே இன்னும் சில நாள்களில் லையனை இலங்கைக்கு அனுப்பி முன்னாள் சுழல் பந்து ஜாம்பவானான முரளியிடம் பயிற்சிகளைப் மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. லையனுக்கு பயிற்சிகளை வழங்க முரளியும் சம்மதித்து விட்டார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)

## வென்றது அன்ரனிஸ்

யாழ்ப்பாணம், மே 27
நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென்.அன்ரனிஸ் அணி வெற்றிபெற்றுள்ளது.
கழுகுகளின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து யாழ். ஐக்கிய அணி மோதியது. கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் ஐந்தாவது நிமிடத்தில் ஆட்டத்தின் முதல் கோலைப் பதிவுசெய்தார் அன்ரனிஸின் கலிஸ்ரஸ். பத்தாவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தது ஐக்கியம். வேறெந்த மாற்றமும் ஏற்படாத நிலையில் சமநிலைத் தவிர்ப்பு உதையில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது அன்ரனிஸ். (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மே 27

**திருமகள் வி.கழகத் தொடர்**
அராலி திருமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் திருமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கல்வளை விநாயகர் அணியை எதிர்த்து பருத்தித்துறை சிவானந்தா அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புங்குடுதீவு நசரேத் அணியை எதிர்த்து பாடுமீன் அணி மோதவுள்ளது.

**வவு. கால்பந்தாட்டச் சங்கத்தின் தொடர்**
வவுனியா கால்பந்தாட்ட சங்கம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஏ.பி.சி. அணியை எதிர்த்து சண்சையின் அணி மோதவுள்ளது.

**கழுகுகள் வி.கழகத் தொடர்**
நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதயதாரகை அணியை எதிர்த்து அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விடத்தற்தீவு ஐக்கிய அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் அணி மோதவுள்ளது.

**காமாட்சி அம்பாள் வி.கழகத் தொடர்**
நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் இளவாலை மத்திய அணியை எதிர்த்து ஆவரங்கால் நடராஜ விளையாட்டுக் கழகமும் மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் வி.கழகமும் மோதவுள்ளன.
(ம-422-23-108)

# வென்றது இந்து முன்னணி



யாழ்ப்பாணம், மே 27
மன்னார் கிரிக்கெட் சங்கம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் கடந்த வாரம் இடம்பெற்ற ஆட்டத்தில் இந்து முன்னணி அணி 7 இலக்குகளால் வெற்றிபெற்றுள்ளது.
மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இந்து முன்னணி அணியை எதிர்த்து கிங்ஸ்ரார் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிங்ஸ்ரார் அணி முதலில் துடுப்பெடுத் தாடத் தீர்மானித்து 29.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக நிரோசன் 26ஓட்டங்களையும், ஜெயகுமார் 26 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இந்து முன்னணி அணியின் சார்பில் ராஜ் 3 இலக்குகளையும், வசந்தன் 2 இலக்குகளையும், கைப்பற்றினர்.
135 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்து முன்னணி அணி 3 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக ரஞ்சித் 46 ஓட்டங்களையும் வசந்தன் 32 ஓட்டங்களையும் அஜந்தன் 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கிங்ஸ்ரார் அணியின் சார்பில் ஜெயகுமார் 2 இலக்குகளை கைப்பற்றினார். (ம-23)

## ஜோசெப்புக்கு அபார வெற்றி

யாழ்ப்பாணம், மே 25
கழுகுகள் வி.கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென். ஜோசெப் அணி வெற்றி பெற் றுள்ளது.
கழுகுகளின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய அணியை 6:2 என்ற கோல் கணக்கில்வீழ்த்தியே அந்த அணி வெற்றி பெற்றது. (ம-23)

## ஐ.பி.எல். கிண்ணம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறைகேட்டில் ஈடுபட்டது சிவநகர் அ.த.க. பாடசாலை; மாகாணமட்ட கபடித் தொடரில் நேற்று அம்பலமானது

யாழ்ப்பாணம், மே 27

வடமாகாண ரீதியிலான பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான கபடித் தொடரில் கிளிநொச்சி-சிவநகர் அ.த.க. பாடசாலை அணியின் 15 வயதுப் பிரிவில் வயது முறைகேடு கண்டுபிடிக்கப்பட்டமையை அடுத்து நடப்பு வருடத்தில் அந்த அணிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. இந்த வரிசையில் கபடித் தொடர் வவுனியா-ஓமந்தை மத்திய கல்லூரியில் நேற்று ஆரம்பமானது. இதில் கிளிநொச்சி-சிவநகர் அ.த.க. பாடசாலையின் 15 வயதுப்பிரிவு அணியைப்பிரதிநிதித்துவம் செய்த வீரர் ஒருவர் 19 வயதுடையவர் என்பதும், 15 வயது வீரர் ஒருவரின் அடையாள அட்டையில் உள்ள புகைப்படம் நீக்கப்பட்டு குறித்த 19 வயது வீரரின் புகைப்படம் ஒட்டப்பட்டிருப்பதும் ஆவணப் பரிசோதனையில் கண்டு பிடிக்கப்பட்டது. குற்றத்தை அந்த வீரரும் ஏற்றுக்கொண்டதையடுத்து அந்த அணிக்கு நடப்பு வருடத் தொடர்களில் இருந்து தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறியவருகிறது.

குறித்த விடயம் தொடர்பாக வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலனுடன் தொடர்பு கொண்டு கேட்ட வேளையில் - கபடித் தொடர்களைப் பொறுத்த மட்டில் கடந்த காலங்களில் சிவநகர் அ.த.க.பாடசாலை தனக்கென ஒரு தனியான முத்திரையைப் பதித்து வந்துள்ளது. ஆனால் அந்த அணி வயது முறைகேடுகளில் ஈடுபட்டுவருவதாக என்னிடம் சில முறைப்பாடுகள் பதியப்பட்டன. இதனால் நடப்பு வருடத் தொடர்களில் நானே நேரடியாகச் சென்று ஆவணப் பரிசோதனையில் ஈடுபட்டேன். அதன்போது குறித்த அணியில் இந்த வயது முறைகேடு ஈடுபட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. குறித்த குற்றத்தை அந்த மாணவன் உடனடியாக மறுத்த போதிலும், தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளில் அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டார். இதனால் உடனடியாக கலந்தாலோசிக்கப்பட்டு அந்த அணிக்கு இந்த வருடம் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி செல்வின் இரேனியஸிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் சிவநகர் அ.த.க. பாடசாலையின் அதிபரிடம் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன. விளையாட்டு வீரர்கள் சட்ட திட்டங்களைப் பேணி ஆரோக்கியமான பங்குபற்றலை உறுதிப்படுத்துவது அதிபர், ஆசிரியர், பயிற்றுவிப்பாளர்களின் பிரதான கடமையாகும். இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்டப் போட்டிகளில் ஏனைய மாகாணங்களை விட வடமாகாணத்தில் மோசடிகள் இடம்பெறுவதில்லை என்ற நம்பிக்கை உள்ளது. இதற்காகச் சில தடவைகள் பாராட்டும் பெற்றுள்ளோம். இந்த நிலையில் இவ்வாறான ஒரு சம்பவம் கறுப்புப் புள்ளியாக அமைந்துள்ளது என்றார்

குறித்த விடயம் தொடர்பாக சிவநகர் அ.த.க. பாடசாலையின் அதிபருடன் தொடர்புகொள்ள முற்பட்டவேளையில் அவரது தொலைபேசி செயலற்று இருந்தது. (ம-422)

போட்டிப் பரீட்சை வகுப்புகள்
June 4,5,11ஆம் திகதி நடைபெறவுள்ள
SLAS open
பரீட்சைக்கு ஞாயிறு (29/5) 9-4 மணிவரையும், திங்கள் முதல் வியாழன்வரை பி.ப. 4.00 - 7.00 மணிவரை
SLAS SLEAS
மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை வகுப்பு ஞாயிறு 9.00 மணி
Auditor
வகுப்பு சனி 2 மணி
GS, சமுர்த்தி
பிரிவு I சனி
பிரிவு II ஞாயிறு பி.ப 1-5 மணி வரை
சட்டமாணி, சுங்க உத்தியோகத்தர்
ஞாயிறு 2 மணி
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)
SLEAS Open
கருத்தரங்கு வெள்ளவத்தை தமிழ்ச்சங்க வளாகம் கல்வி நிலையத்தில் நாளை சனி காலை 9-4 மணிவரை நடைபெறும்.

# ஐ.பி.எல்.இல் பாக். வீரர்கள் அனுமதிக்கப்பட வேண்டும்

## -அப்பாஸ்

ஐ.பி.எல். தொடரிலிருந்து பாகிஸ்தான் வீரர்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வரும் நிலையில், அவர்களை அனுமதிக்க வேண்டும் என பாகிஸ்தானின் முன்னாள் வீரரான அப்பாஸ் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.பி.எல். தொடர் கடந்த 2008ஆம் ஆண்டு ஆரம்பிக்கும் போது பாகிஸ்தான் வீரர்கள் இடம் பெற்றிருந்தனர். ஆனால் மும்பையில் இடம் பெற்ற குண்டு வெடிப்பின் பின்னர் இந்தியா-பாகிஸ்தான் அரசியல் உறவு மாத்திரமின்றி கிரிக்கெட் உறவும் மிகவும் பாதிப்படைந்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையே சர்வதேச இருதரப்புத் தொடர்கள் நடைபெறுவதில்லை. மட்டுமல்லாமல் ஐ.பி.எல். தொடரிலும் பாகிஸ்தான் வீரர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இந்த நிலையிலேயே அப்பாஸ் இவ்வாறான ஒரு கருத்தை வலியுறுத்தியுள்ளார். அவர் இதுகுறித்து மேலும் தெரிவிக்கையில் - நாளை மறுதினம் பெங்களூரில் நடை பெற இருக்கும் ஐ.பி.எல். இறுதியாட்டத்தைக் காணவருமாறு இந்திய கிரிக் கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் அனுராக் தாகூர் அழைப்புவிடுத்துள்ளார். அந்த அழைப்பை நான் ஏற்றுள்ளேன். இது எனக்கு ஒரு நல்ல வாய்ப்பு. ஏனென்றால், இந்தியா சென்று மீண்டும் இந்தியா- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடர் நடைபெற முயற்சி செய்வேன். ஐ.பி.எல். தொடர்களில் பாகிஸ்தான் வீரர்களைச் சேர்க்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பரிசீலனை செய்ய வேண்டும். இதன்மூலம் இரு நாடுகளுக்கும் இடையே சுமுகமான உறவொன்றைக் கட்டியெழுப்ப முடியும் என்றார். (ம)

மாபெரும் இறுதிக் கருத்தரங்கு
SLEAS (Open)
விரிவுரையாளர்
P.உமாகரன்
P.கமல்தாசன்
துறைசார் விரிவுரையாளர்கள்
இடம்
Bambalapitiya Flats Community Center-Col-04
(புதிய கதிரேசன் மண்டப எதிரில்)
காலம்: 28.05.2016
சனி 8.30-2.00 Pm
T.P 0718130390
0774696695
0775265344

# சிமோனா கேலப் முன்னேற்றம்



பிரான்ஸ் ரென்னிஸ் தொடர் பாரிஸ் நகரில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் சிமோனா கேலப் வெற்றிபெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

தரப்படுத்தலில் ஆறாம் நிலை வீராங்கனையான ருமேனியாவின் சிமோனா கேலப், தரப்படுத்தலில் 90ஆம் நிலை வீராங்கனையான கஜகஸ்தானின் ஸரினா தியாஸை எதிர்கொண்டார். இந்த ஆட்டத்தின் முதல் செற்றை 7:6 என்று போராடிக் கைப்பற்றிய கேலப், இரண்டாவது செற்றில் தொடர்ந்தும் தனது ஆதிக்கத்தை நிலைப்படுத்தி 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார். (ம)

வீட்டுப்பணிப்பெண் தேவை
வீட்டில் தங்கிநின்று பணிபுரிவதற்கு பணிப்பெண் தேவை.
(C 21306) (14,17,18)
தொடர்பு : 071 777 5151

வேலையாள்கள் தேவை
வெல்டிங்வேலை தெரிந்தவர்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
(c 21309) (14,17,18)
தொடர்பு : 071 869 5695

ஆங்கிலம்
O/L, A/Lஎழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள்
இளைஞர், யுவதிகள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
ஆங்கிலத்தில் ஒரெழுத்துத்தெரியாதவர்களும் கூட பயிற்சியில் இணைந்துசரளமாக ஆங்கிலம் பேசமுடியும்!
2 வது சனி, ஞாயிறு பிரிவுகள்ஆரம்பம் 28.05.2016 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00
3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00
4. மாலை 03.00-05.00
எமது 3 மாத பயிற்சி நிறைவில் தமிழைப்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.
28-05-2016 இற்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை ஒப்படைத்தல் வேண்டும்.
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 489

சிங்களம் புதிய பிரிவுகள்/ORAL வகுப்புக்கள் ஆரம்பம்
Level I, Level II
வாய் மூலப்பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள் 28.05.2016 சனி அன்று மாலை 6.00-7.00 மணி வரை
சிங்களம் பேச, எழுத, வாசிக்க இலகுவான முறையில் கற்பிக்கப்படும்.
G.C.E O/L பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பம் (சனி/ஞாயிறு மற்றும் வார நாள்களில்)
(இது வரை சிங்களம் எழுத்துக்கூட தெரியாதவர்களும் இவ்வகுப்பில் பங்குபற்றி பயன் பெறலாம்.)
எமது நிறுவனத்தில் கல்வி பயின்று கடந்த ஆண்டு G.C.E O/L சிங்களப் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த 117 மாணவர்களுக்கு எமது பாராட்டுக்கள்.
ஸ்ரீ மாஸ்டர்
ஸ்ரீ இரண்டாம் மொழி கல்வி நிறுவனம்
இல. 72, இராமநாதன் வீதி (மிலேனியம் அருகில்) யாழ்ப்பாணம்.
இல. 41, நக்கா லேன் கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.